பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 தை 28 வியாழக்கிழமை (10.02.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :76

# கிழக்கு செயலிழந்தது!

## கௌசல்யன், சந்திரநேரு மற்றும் போராளிகளுக்காக மக்கள் துக்கம்

மட்டக்களப்பு,பெப்ரவரி 10

**விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இ.கௌசல்யன் மற்றும் மூன்று போராளிகள், திகாமடுல்ல மாவட்ட முன்னாள் எம்.பி. அரியநாயகம் சந்திரநேரு ஆகியோர் படுகொலை செய்யப்பட்டதை ஒட்டித்துக்கம் அனுஷ்டிக்கப்பட்டதால், கிழக்கு மாகாணம் நேற்று சோபை இழந்தது. ஹர்த்தால் காரணமாக அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்கள் முற்றாகச் செயலிழந்தன. கிழக்கின் முஸ்லிம் பிரதேசங்களிலும் துக்கமும், ஹர்த்தாலும் அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.**

திருகோணமலையில்...

திருகோணமலை மாவட்டத்தில் நேற்றுப் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

குறிப்பாகத் திருகோணமலை நகரம், குச்சவெளி, நிலாவெளி, தம்பலகாமம், கும்புறுப்பிட்டி, மூதூர் கிழக்கு, கிளிவெட்டி, ஈச்சிலம்பற்று, வெருகல், மூதூர் ஆகிய பிரதேசங்களில் ஹர்த்தாலினால் இயல்பு வாழ்வு முற்றாக ஸ்தம்பித்தது. மக்கள் நடமாட்டமின்றி வீதிகள் வெறிச்சோடிக்கிடந்தன.

திருகோணமலை நகரத்தில் வழமைக்கு மாறான முறையில் பெரும்பான்மையினருக்குச் சொந்தமான கடைகளும் நேற்று முற்றாக மூடப்பட்டிருந்தன. நகரத்தில் அனைத்து இன மக்களினதும் பாடசாலைகள் ஆசிரியர்கள், மாணவர்கள் வருகையின்றி முற்றாக மூடப்பட்டிருந்தன. மேல்நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றம் சட்டத்தரணிகள் வரவின்றிச் செயலிழந்தன.

திருகோணமலை பொதுவைத்தியசாலை

(02ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகளின் வித்துடல்களுக்கு மக்கள் அஞ்சலி

மட்டக்களப்பு,பெப்.10

பொலன்னறுவை, வெலிக்கந்தையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப்டினன்ட் கேணல் இ.கௌசல்யன் உட்பட நான்கு போராளிகளின் வித்துடல்கள் நேற்று மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தமது உணர்வுபூர்வமான இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். கண்ணீர் விட்டுக் கதறி அழுதனர்.

19 மணிநேர தாமதத்தின் பின்னர் நேற்று முன்தினம் இரவு புலிகளிடம் ஒப்படைக்கப்பட்ட வித்துடல்கள், நேற்றுக்காலைவரை அவரவர்களின் வீடுகளில் வைக்கப்பட்டிருந்தன.

நேற்றுக்காலை கொக்கட்டிச்சோலைக்கு எடுத்துச்செல்லப்பட்ட வித்துடல்கள் அங்கு இராம

(16ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டத்தை தொடர அரசு தீர்மானம்

கொழும்பு,பெப்.10

அரசு தொடர்ந்து நாட்டில் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தத் தீர்மானித்து விட்டது. அதற்கான அங்கீகாரத்தைப் பெறும் வகையில் நாளை வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில் விவாதம் இடம்பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 14 மாவட்டங்களில் பாதுகாப்புக் காரணங்களுக்காக ஜனவரி 14ஆம் திகதி முதல் அவசரகாலச் சட்ட நிலையை ஜனாதிபதி பிர

(16ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவப் பாதுகாப்புக்கு மத்தியில் திட்டமிட்டு நடத்தப்பட்ட கொலைகள்



### நாடாளுமன்றில் அரசு மீது சம்பந்தன் குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.10

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு உட்பட அறுவர் படுகொலை செய்யப்பட்டமை நன்கு முன்கூட்டியே திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட ஒரு செயலாகும். இராணுவ முகாம்களுக்கு மத்தியில் இராணுவத்தினரின் பாதுகாப்புடனேயே இப்படுகொலைகள் நடத்தப்பட்டுள்ளன என்பது உறுதியாகின்றது. இச்சம்பவத்துக்கும், தமக்கும் தொடர்பு இல்லை என்று அரசு தட்டிக்கழிக்க முடியாது.

இப்படி தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பி. நேற்று நாடாளுமன்றத்தில் குற்றஞ்சுமத்தினார்.

நேற்று நாடாளுமன்றம் சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டார தலைமை யில் கூடியபோது இரா.சம்பந்தன் எம்.பி. கவன ஈர்ப்பு அறிக்கையொன்றை வெளியிட்டார். இப்படுகொலைகள் தொடர்பாக அரசிடம் சில கேள்விகளையும் அவர் எழுப்பினார்.

இரா.சம்பந்தன் எம்.பி. நேற்றுத் தமது உரை

(02ஆம் பக்கம் பார்க்க)

## புனாணை படுகொலைகளுக்கு ஐ.நா.செயலரும் கண்டனம்



கொழும்பு,பெப்.10

விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட போராளிகளின் கொலைகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இக்கொலைகள் கண்டனத்துக்குரியவை. இச்சந்தர்ப்பத்தில் சகல கட்சியினரும் கட்டுப்பாட்டுடன் செயற்பட்டு அமைதி காக்கவேண்டும். யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கோ, இலங்கை சமாதானத்தில் அக்கறை கொண்டுள்ள நீண்டகால நோக்கத்தையோ சீர்குலைக்கக்கூடிய நடவடிக்கைகள் தவிர்க்கப்படவேண்டும் எனவும் அனான் மேலும் தெரிவித்துள்ளார் என்று

(16ஆம் பக்கம் பார்க்க)

## கௌசல்யன் மற்றும் போராளிகளின் வித்துடல்கள் இன்று விதைப்பு!.

மட்டக்களப்பு,பெப்.10

வெலிக்கந்தையில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட புலிகளின் மட்டு.-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்டினன்ட் கேணல் இ.கௌசல்யன் உட்பட நான்கு போராளிகளின் வித்துடல்களும் இன்று மாலை மட்டக்களப்பு தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படவுள்ளன.

இவர்களின் வித்துடல்கள் நேற்று மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டன. நேற்றிரவு புலிகளின் கஞவாஞ்சிக்குடி அலுவலகத்தில் வைக்கப்பட்ட வித்துடல்கள் இன்று காலை அங்கிருந்து நேரடியாக மட்டக்களப்பு நகரில் உள்ள புலிகளின் அரசியல் பணிமனைக்கு எடுத்துவரப்பட்டு அங்கு மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்படும். பின்னர் கிரானுக்கு அஞ்சலி நிகழ்வுகளுக்காகக் கொண்டுசெல்லப்படும். இன்று நண்பகல் அளவில் கொடுவா

(16ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டாவது நாளாக நேற்றும் குடாநாடு சோகத்தில் மூழ்கியது

யாழ்ப்பாணம்,பெப்.10

கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற தாக்குதலில் உயிரிழந்த விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு மற்றும் மூன்று போராளிகள் உட்பட அறுவருக்கும் அஞ்சலி செலுத்தும் முகமாக குடாநாடெங்கும் இரண்டாவதுநாளாக நேற்றும் சோகமயமாகக் காணப்பட்டது

பல பகுதிகளிலும் வாழைகள், தோரணங்கள், கறுப்புக் கொடிகள், மஞ்சள், சிவப்பு நிறத்திலான கொடிகள் என்பன கட்டப்பட்டிருந்ததுடன் சோககீதம் ஒலிக்கப்பட்டது.

தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம், தீவ

(16ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகளின் படுகொலையையடுத்து மட்டக்களப்பில் பாதுகாப்புத் தீவிரம்!

ஏறாவூர்,பெப்.10

வெலிக்கந்த பிரதேசத்தில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உயர்மட்ட முக்கியஸ்தர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. வெளி இடங்களில் இருந்தும் மட்டக்களப்புக்குப் படையினர் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

படுகொலை செய்யப்பட்ட புலிகள் இயக்க உறுப்பினர்களின் அஞ்சலி நிகழ்வுகள் மட்டக்களப்பில் நடைபெறுவதை முன்னிட்டு நகரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பில் பொலீஸாருடன், இராணுவத்தினரும், விசேட அதிரடிப்படையினரும் இணைந்து விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## உலக வங்கித் தலைவருடன் ஜனாதிபதி பாகிஸ்தானில் பேச்சு

### ஆழிப்பேரலை நிவாரணப் பணி தொடர்பாக

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்பும் பணியில் உதவுவது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உலக வங்கித் தலைவருடன் பேச்சு நடத்தினார்.

பாகிஸ்தான் சென்றுள்ள ஜனாதிபதி அங்கு தங்கியுள்ள ஹோட்டல் தொகுதியில் அவரை உலக வங்கித் தலைவர் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

""நிவாரணப் பணிகளுக்கென இலங்கைக்குக் கிடைக்கும் பெருந்தொகையான நிதியை குறிப்பாக அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாகக் கிடைக்கும் நிதியை விரைவாகக் கணக்கிட்டுக்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை - பாகிஸ்தான் நாடுகள் இடையே சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்து

கொழும்பு,பெப்.10

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்தில் வைத்துக் கைச்சாத்து நிகழ்வு இடம்பெற்றது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அஸீஸ் ஆகியோர் முன்னிலையில் ஒப்பந்தம் கைச்சாத்தானது.

இதன்படி இலங்கைக்கு பலகோடி ரூபா பெறுமதியான கடன் வசதிகள் பாகிஸ்தானிடமிருந்து கிட்டவுள்ளன.

இவ்வுடன்படிக்கையால் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கைகளில் நூற்றுக் கணக்கான பொருள்கள் தான் சுங்கத்தீர்வைகள் நீக்கப்படுகின்றன. இதனால், இரு நாடுகளுக்கும் இடையில் வர்த்தக உறவு

(16ஆம் பக்கம் பார்க்க)

# 3 ஆண்டுகளாகியும் அபிவிருத்தி இல்லை தென்மராட்சி மக்கள் மறியலுக்கு முஸ்தீபு

தென்மராட்சி,பெப்.10

மீளக்குடியமர்ந்து மூன்று வருடங்களாகியும் தமது பிரதேசங்களில் அபிவிருத்திப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படாமையை ஆட்சேபித்து தென்மராட்சி தெற்கு, மேற்குப் பிரதேசங்களின் மக்கள் யாழ்.செயலகத்தின் முன்பாக அடுத்தவாரம் மறியல் போராட்டத்தில் ஈடுபடுவதற்குத் தயாராகி வருகின்றனர்.

இப்பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளபோதிலும் இதுவரை வீதிகள் செப்பனிடப்படாமை, மின்சார விநியோகம் மேற்கொள்ளப்படாமை, உடனடியாக மீளக் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படாமை உட்படப் பல விடயங்களை முன்வைத்து மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

நாவற்குழி மேற்கு, நாவற்குழி கிழக்கு, கோவிலாக்கண்டி, கைதடி, நாவற்குழி, மறவன்புலோ ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இந்தப்போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

யாழ்.அரச அதிபரிடம் இது தொடர்பாக மகஜர் ஒன்று கையளிக்கவுள்ளதாகவும் மறியல் போராட்ட ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட தென்மராட்சி பிரதேச மக்கள் தமது கோரிக்கைகளை முன்வைத்து யாழ்.செயலகம் முன்பாக முன்னரும் மறியல் போராட்டம் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (10-117)

## சந்திப்பு

தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுடனான சந்திப்பு இன்று காலை 10.30 மணிக்கு செயலாளர் எஸ்.ஸ்ரீனிவாசன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றவுள்ளது.

இவ்வாண்டுக்கென பிரதேச செயலக விளையாட்டுப் போட்டி மற்றும் எதிர்கால விளையாட்டு அபிவிருத்தி என்பன தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளதனால் விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளைத் தவறாது கலந்துகொள்ளும்படி தென்மராட்சிப் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.சதீஸ்குமார் கேட்டுள்ளார். (10-86)

## நூல் வெளியீட்டுவிழா பிற்போடப்பட்டுள்ளது

நாளை வெள்ளிக்கிழமை யாழ்.இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவிருந்த வணிக வனிதை நூல் வெளியீடும், வணிகவிழாவும் பிற்போடப்பட்டுள்ளதாகவும் இந்நிகழ்வு நடைபெறும் தினம் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அதிபர் அறிவித்துள்ளார். (8)

### பாதுகாப்பு வலயத்துக்குட்பட்ட பகுதி

# கிராம அலுவலர்களுக்கு பதில் கடமை கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை

தெல்லிப்பழை,பெப்.10

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள கிராமங்களுக்கான கிராம அலுவலர்களாக பதிற்கடமை ஆற்றிவரும் கிராம அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பதிற்கடமை கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக தமது பதிற்கடமைகள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக கிராம அலுவலர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

வலிகாமம் வடக்கில் உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் அடங்காத கிராமங்களில் கிராம அலுவலர்களாக கடமை புரியும் கிராம அலுவலர்கள் சிலரே உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ள கிராமங்களுக்கான கிராம அலுவலர்களாக பதிற்கடமைபுரிந்து வருகின்றனர். பதிற்கடமையின் நிமித்தம் ஆறுக்கும் மேற்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளைச் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு கிராம அலுவலர்களும் கவனித்து வருகின்றனர். உயர்பாதுகாப்பு வலயத்தை சொந்த வாழிடமாக கொண்ட பொதுமக்களது உத்தியோகபூர்வ பணிகளை இவர்களே மேற்கொண்டு வருகின்றனர். இதற்காக இவர்களுககு மேலதிகமான கொடுப்பனவு வழங்கப்பட்டு வந்தது. தற்போது இக்கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளன. இதற்கு நிதி இல்லை என பிரதேச செயலகத்தால் காரணம் கூறப்பட்டுள்ளது. ஆனால் இக்கொடுப்பனவுகளை வழங்குமாறு அரச அதிபரால் உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக கிராம அலுவலர்கள் கூறுகின்றனர்.

இக்கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டுள்ள நால கிராம அலுவலர்கள் தமது கடமைகளை நிறுத்தும் நிலை ஏற்படுமாயின் அது பொதுமக்களையே அதிகம் பாதிக்கும் எனச் சுட்டிக் காட்டப்பட்டது.

இடம்பெயர்ந்து பல பகுதிகளில் வாழ்ந்து வரும் வலி.வடக்கு மக்கள் தமது பணிகளுக்காக இக்கிராம அலுவலர்களையே நாடிவருகின்றனர். அவர்களது பணி நிறுத்தப்படுமாயின் அது பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலும் பாதிப்பையே உண்டு பண்ணும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-150)

# தாலிக்கொடியை அபகரித்தோர் கலாசாரக் குழுவிடம் சிக்கினர்

வலி.வடக்கு,பெப்.10

மேரட்டார் சைக்கிளில் வந்து சுமார் ஒரு லட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியான தாலிக்கொடியை அறுத்துக்கொண்டி ஓடியவர்கள் வகையாக கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களிடம் மாட்டிக்கொண்டனர்.

நேற்றுமுன்தினம் கந்தர்மடம் அம்மன் வீதியில் தனியாக நடந்து வந்து கொண்டிருந்த பெண்ணின் தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு ஓடியதைத் தொடர்ந்து அவர் கூச்சலிட்டுள்ளார். அந்த நேரம் அவ்விடத்திற்கு வந்த கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களும் அயலவர்களும் திருடனைத் துரத்திப் பிடித்துள்ளனர்.

ஆனைக்கோட்டை சிப்பித்தறையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பிடிபட்டுள்ள போதிலும் மற்றவர் தப்பி ஓடியுள்ளார். பிடிபட்டவரிடம் இருந்து தாலிக்கொடியைப் பறிமுதல் செய்த கலாசாரத்தைப் பேணும் குழுவினர் அதனை உரியவரிடம் வழங்கியுள்ளனர்.

மற்றைய இளைஞர் தப்பி ஓடியுள்ளார். இவரைப் பிடிக்கும் முயற்சியில் கலாசாரத்தைப் பேணும் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

'ரி.வி.எஸ்' இனத்தைச் சேர்ந்த 'எச்.வி.9292' இலக்கமுடைய மோட்டார் சைக்கிளும் திருடர்களால் கைவிடப்பட்டுள்ளது. (ஐ-28)

# இராணுவப் பாதுகாப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் கூறியதாவது:

கௌசல்யன் குழுவினர் மீது வடமத்திய மாகாணத்திலுள்ள பொலன்னறுவை மாவட்டத்தில் – அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் – தாக்குதல் நடத்தப்பட்டது. மட்டக்களப்பை நோக்கிச் செல்லும் பிரதான வீதியில் பின்வரும் இராணுவ முகாம்கள் தாக்குதல் நடத்தப்பட்ட இடத்திலிருந்து தொலைவில் அல்லாது, அருகருகே அமைந்துள்ளன.

- மின்னேரியா இராணுவ முகாம்
- வெலிகந்தை இராணுவ முகாம்
- புனானை இராணுவ முகாம்

இவை மூன்றும் பொலன்னறுவை மாவட்டத்தில் அமைந்துள்ளன.

- நாவலடி இராணுவ முகாம்
- வாழைச்சேனை இராணுவ முகாம்

இவை மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ளன.

இத்தாக்குதல் பொலன்னறுவை மாவட்டத்தில் வெலிக்கந்தை மற்றும் புனானை இராணுவ முகாம்களுக்குமிடையே நடத்தப்பட்டுள்ளது. இம்முகாம்கள் அதிக எண்ணிக்கையான இராணுவத்தினரால் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளன. இம் முகாம்களுக்குமிடையில் இராணுவத்தினரின் காவல்நிலைகள் பல உள்ளன.

இத்தாக்குதல் தெளிவாக முன்கூட்டியே திட்டமிடப்பட்டு மற்றும் முன்கூட்டியே ஒழுங்கு செய்யப்பட்டதாகும். இத்தாக்குதலில் பலர் பங்கு பற்றியுள்ளார்கள். மற்றும் பலியானவர்கள் முறையாகக் குறிவைக்கப்பட்டார்கள் .

இரண்டு பொலீஸ் அதிகாரிகளைத் தவிர வாகனத்தில் பயணஞ்செய்த வேறு எவரிடமும் ஆயுதம் இருக்கவில்லை. இரு தரப்புகளுக்கும் இடையே துப்பாக்கிச் சமர் இடம்பெற்றதற்கான சாட்சியம் எதுவும் முன்வைக்கப்படவில்லை. நிராயுதபாணிகள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்பதே திடமான முடிவாகும்.

ஆயுதப்படையினரின் பிரசன்னம் வலுவாக அமைந்துள்ள ஒரு பிரதேசத்தில் இவ்வாறான தாக்குதல் எவ்வாறு நடத்தப்பட்டது என்ற கேள்வி எழுகிறது.

ஆயுதப் படையினரின் வலுவான பிரசன்னத்துக்கு மத்தியிலும் தடங்கலின்றி இவ்வாறான தாக்குதலை யார் நடத்தியிருக்க முடியும் என்ற கேள்வியும் எழுகிறது.

பலமான ஆயுதப் படையினரின் பிரசன்னம் அமைந்துள்ள அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதலுக்கு தாம் பொறுப்பேற்க முடியாது என்று அரசினால் கூறமுடியாது.

இக்காரணிகள் இத்தாக்குதலில் அரசு மற்றும் அதன் ஆயுதப் படையினரின் பங்குபற்றல் அல்லது குற்றம் செய்வதற்கு உடந்தையாக இருத்தல் தன்மை ஆகியன தொடர்பாக பொதுமக்கள் மனதில் பாரதூரமான கேள்விகள் எழும்பியுள்ளன.

சமாதான நடைமுறையைப் பலவீனப்படுத்த வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டே இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்பது தெளிவாகிறது. சமாதான நடைமுறையைப் பலவீனப்படுத்தவேண்டும் என்பதில் அக்கறை கொண்ட சில தீய சக்திகள் இந்த நாட்டில் உள்ளன என்பது நன்கு தெரிந்ததே.

சமாதான நடைமுறையில் உறுதியாக இருப்பதாகத் தெரிவிக்கும் வாய்மூல உறுதிமொழிகளுக்கு மத்தியிலும் கடந்த சில மாதங்களாக அரசின் நடவடிக்கைகள், சமாதான நடைமுறையை அர்த்தமுள்ள வழியில் முன்னெடுத்துச் செல்வதைத் தாமதப்படுத்துவனவாகவும், விரக்தியை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளன.

ஆழிப்பேரலை இயற்கை அனர்த்தம், வடக்கு-கிழக்கில் ஏற்பட்ட பாரிய பேரழிவு, மற்றும் வடக்கு-கிழக்கு ஆழிப்பேரலை தொடர்பான அபிவிருத்தி நடவடிக்கைகளை பொறுப்பெடுப்பதற்கான பொருத்தமாக கட்டமைப்பு ஒன்றை நிறுவுவது சம்பந்தமான முயற்சி ஆகியவற்றுக்கு மத்தியில், அரசாங்கத் தரப்பில் காட்டப்படும் தாமதம் காரணமாக அவ்வாறான கட்டமைப்பு ஒன்றை அமைக்கும் சாத்தியம் ஏற்படவில்லை.

அரசின் இந்த மனப்பான்மை, சமாதான நடைமுறையை முன்னெடுத்துச் செல்வதற்கும், இன்னும் வடக்கு - கிழக்கில் ஆழிப்பேரலைக்குப் பின்னரான அபிவிருத்தி நடவடிக்கைகளில் தமிழ் பேசும் தமிழ் மக்கள் மற்றும் முஸ்லிம் மக்களின் அர்த்தமுள்ள பங்களிப்புக்கு இடமளிக்கப்படும் என்று கூறும் அரசின் உறுதிப்பாட்டின் மீதான நேர்மை குறித்தும் பாரதூரமான கேள்வியை எழுப்பியுள்ளது.

சமாதான நடைமுறை வெற்றியடைவதற்கு ஏதாவது சந்தர்ப்பம் ஏற்படவேண்டுமானால், தற்போதைய ஆரோக்கியமற்ற போக்கை உடனடியாகத் திருத்திக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்பதை அரசிற்கு நாம் பலமாக வற்புறுத்திக் கூறவிரும்புகின்றோம்.

இவை தொடர்பாக அரசு விளக்கமளிக்க வேண்டும் - இப்படி இரா. சம்பந்தன் எம்.பி. வலியுறுத்தினார். (க-8)

# கிழக்கு செயலிழந்தது!...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநோயாளர் பிரிவு நோயாளர் வரவின்றி வெறிச்சோடிக்கிடந்தது.

திருகோணமலை நகரப் பஸ் நிலையத்தில் என்று மில்லாதவாறு வெளியிடங்களுக்குச் செல்லும்பஸ் சேவையும், உள்ளூர் பஸ் சேவையும் முற்றாகத் தடைப்பட்டன.

வங்கிகள், திரையரங்குகள். அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் எவையும் இயங்கவில்லை.

திருகோணமலை நகரப் பொதுமக்கள் மஞ்சள், சிவப்பு நிறக் கொடிகளைத் தமது வீடுகளிலும், வர்த்தக நிலையங்களிலும் பறக்கவிட்டிருந்தனர். சில இடங்களில் கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் நிலையங்களில் ஆசிரியர்கள் வருகை தாராததால் பரீட்சை விடைத்தாள் திருத்தும் வேலைகளும் பாதிக்கப்பட்டன.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கவென வந்த கிறிஸ் கப்பல் வைத்தியக் குழுவினரும் தமது சேவையை நேற்று முடக்கிக் கொண்டனர்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மூதூர் கிழக்கிலும், வெருகல், ஈச்சிலம்பற்றுப் பகுதியிலும் உள்ள வீடுகளின் முன் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டிருந்தன. வீதிகளுக்குக் குறுக்காக டயர்கள், கட்டைகள் போட்டு எரிக்கப்பட்டன. முக்கிய சந்திகளில் மஞ்சள், சிவப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. ஆங்காங்கே சோக கீதங்கள் இசைக்கப்பட்டன.

இதேவேளை, மாணவர்கள் நேற்றுக்காலை கறுத்தப்பட்டி அணிந்து, கண்டனப் பேரணிகளையும் நடத்தினர்.

அங்கு பூரண கதவடைப்பு இன்றும் தொடரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

**மட்டக்களப்பு, அம்பாறையில்**

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும் நேற்று முழு அளவில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. கடையடைப்பு, ஹர்த்தால் நடவடிக்கைகளினால் மாவட்டங்களில் வழமை நிலை பாதிப்புற்றது.

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களிலும் நேற்றுத் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டப் பள்ளி வாசல்கள், முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் உள்ளிட்ட பல்வேறு முஸ்லிம் அமைப்புக்கள் கௌசல்யனின் படுகொலையை வன்மையாகக் கண்டித்துள்ளன.

காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை ஆகிய முஸ்லிம் பிரதேசங்களில் கௌசல்யன் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்துப் பல்வேறு முஸ்லிம் அமைப்புகள் அறிக்கைகள் வெளியிட்டுள்ளதுடன், துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்துள்ளன.

**முஸ்லிம் சமூகம் அனுதாபம்**

வழமைக்கு மாறாக, முஸ்லிம் பிரதேசங்களில் அனுதாப அலை கௌசல்யனின் மறைவையொட்டி ஏற்பட்டுள்ளதாக முஸ்லிம் பிரதேச செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கிழக்கில் முற்றாச் சீர்குலைந்திருந்த தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான உறவை மீளக் கட்டியெழுப்புவதில் கௌசல்யன் அரும் பணியாற்றியிருந்தார் என்ற கருத்து முஸ்லிம் மக்கள் மத்தியில் கரிசனையோடு நினைவு கூறப்பட்டதை அவதானிக்க முடிந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பில் நேற்றுக் காலை வேளையில் போக்குவரத்துச் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்றபோதிலும் பின்னர் போக்குவரத்துக்கள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்தன.

வர்த்தக நிலையங்கள், அரச அலுவலகங்கள் யாவும் மூடப்பட்டு வெள்ளைக்கொடிகள் பறக்கவிடப்பட்டு, பூரண துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

சம்பவத்தில் பலியான விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் வீதிகளில் பதாகைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்திலும் பல பகுதிகள் சோகமயமாகக் காட்சியளித்தன. பல இடங்களிலும் கறுப்புக் கொடிகளும் பறக்க விடப்பட்டுள்ளன.

பெரியநீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை, மணல்சேனை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, காரைதீவு, திருக்கோயில், தம்பிலுவில், பொத்துவில், குடியேற்றக் கிராமங்கள் போன்ற பிரதேசங்களில் கடையடைப்பும், டயர் எரிப்புக்களும் இடம்பெற்றன. இப்பிரதேசத்திலும் பாடசாலைகளும், அரச நிறுவனங்களும், போக்குவரத்துகளும் செயலிழந்தன.

முஸ்லிம் அதிகம் வாழும் கல்முனையிலும் நகரக்கடைகள், அரச தனியார் அலுவலகங்கள், சந்தைகள் இயங்கவில்லை.

கல்முனையிலிருந்து உள்ளூர், வெளியூர் பிரதேச போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ்கள் எவையும் சேவையில் ஈடுபடவில்லை.

மக்கள் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது. பாடசாலைகளும் இயங்கவில்லை.

கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை, மஹ்மூத் பாலிகா பாடசாலை ஆகியவற்றில் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்கு வந்தோரும் திரும்பிச் சென்றனர்.

கல்முனை மேற்குப் பிரதேசமான மணல் சேனை, சேனைக்குடியிருப்புப் பகுதிகளிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. சேனைக்குடியிருப்பில் அனுதாபப் பதாகைகள் தொங்கின. (ஐ-க-8-10-13)



உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் ஆரம்பக் கல்விக்கான புதிய கட்டடத்தில் வகுப்பறை ஒன்றைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் நாடாவெட்டித் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். (ஐ-202)

# உசன் மகாவித்தியாலயத்தில் ஆரம்பக்கல்விப் பிரிவுக் கட்டடம்

யாழ்ப்பாணம்,பெப்.10

லண்டன் கனகதுர்க்கா ஆலய அறங்காவல் சபையினரின் நிதியத்தின் உதவியுடன் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்விக்கான புதிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் பாடசாலை அதிபர் எஸ்.நவரத தினராசா தலைமையில் இடம்பெற்ற மேற்படி கட்டடத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் கௌரவ விருந்தினர்களாகத் தென் மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வ ராஜா, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச செயலாளர் த.பஞ்சலிங்கம், ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.கணேசன், இலங்கை தமிழர் ஆசிரிய சங்க வட்டச் செயலாளர் க.குமார சாமி, கட்டடப் பொறியியலாளர் எஸ்.சண்முக நாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

புதிய கட்டடத்தின் வகுப்பறைகளை நல்லை ஆதீன முதல்வர், த.பஞ்சலிங்கம், க.குமாரசாமி, இ.கணேசன் ஆகியோர் திறந்துவைத்தனர். (ஐ-202)

# தென்மராட்சி கல்வி வலயத்தில் முறைசாரா பயிற்சி நெறிகள்

தென்மராட்சி,பெப்.10

தென்மராட்சி கல்வி வலயத்தின் முறை சாராக்கல்வித்திட்டத்தின் கீழ் பல பயிற்சிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கணனி, சிகை அலங்கரிப்பு, ஐசிங், வானொலி திருத்துதல் ஆகிய பயிற்சி நெறிகளே ஆரம்பிக கப்படவுள்ளன. இப்பயிற்சி நெறிகளுக்கு மாண வர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இணைத துக்கொள்ளப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கணனிப் பயிற்சிநெறி சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியால யம் ஆகிய இடங்களிலும் -

சிகை அலங்கரிப்பு, ஐசிங் ஆகிய பயிற்சி நெறிகள் வரணி மகாவித்தியாலயத்திலும் -

வானொலி திருத்தும் பயிற்சி நெறி சாவ கச்சேரி டிறிபேர்க் கல்லூரியிலும் நடத்தப்படும்.

இந்தப் பயிற்சி நெறிகளில் கலந்துகொள் ளும் பாடசாலையை விட்டு வெளியேறியவர்கள் அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்களிடம் விண ணப்பங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து ஒப்ப டைக்குமாறு வலயக்கல்விப்பணிப்பாளர் வ.செல்வ ராஜா அறிவித்துள்ளார். (ஐ-117)

## இஸ்ரேலுக்கு தூதுவர்களை எகிப்தும் ஜோர்தானும் அனுப்பும்

# இஸ்ரேல் - பலஸ்தீனத்தில் யுத்தநிறுத்தம்; தம்மைக் கட்டுப்படுத்தாது என்கிறது ஹமாஸ்

கெய்ரோ,பெப்.10

இஸ்ரேலிய, பலஸ்தீனத் தலைவர்கள் யுத்த நிறுத்தப் பிரகடனத்தை அறிவித்துள்ளனர். அத னைத் தொடர்ந்து, எகிப்து, ஜோர்தான் ஆகிய நாடுகள் தூதுவர்களை மீண்டும் இஸ்ரேலுக்கு அனுப்பி வைக்கவுள்ளன.

பலஸ்தீனத்தில் நான்கு வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட கிளர்ச்சியை அடுத்து இரு நாடுகளினதும் தூதுவர்கள் திருப்பி அழைக் கப்பட்டிருந்தனர். முன்னாள் ஜனாதிபதி யஸீர் அரபாத் மரணமானதன் பின்னர் -

பலஸ்தீன ஜனாதிபதியாக மஹ்மூத் அப் பாஸ் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் - சமாதான - அமைதி - பேச்சுக்கள மீண்டும் ஆரம்பிக்கப் படுவதற்கான சூழ்நிலைகள் தோன்றிவருகின்றன.

எகிப்தில் நடைபெற்ற உச்சி மாநாட்டின் போது இஸ்ரேலிய, பலஸ்தீன தலைவர்கள் யுத்தநிறுத்தம் தொடர்பாக உத்தியோகபூர்வமான ஒப்பந்தம் எதிலும் கைச்சாத்திடவில்லை. இருந்த போதிலும், அமெரிக்காவால் முன்வைக்கப்பட்ட யோசனைகளின் அடிப்படையில் பலஸ்தீனமும இஸ்ரேலும் சமாதான - அமைதி - பேச்சுக்களை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரித் துள்ளன.

பலஸ்தீனத்தில் தீவிரவாதக் குழுக்களும், இந்த யுத்தநிறுத்தத்தை அனுஷ்டித்து வருவ தாக அறிவிக்கப்படுகிறது. எனினும் யுத்தநிறுத் தம் தம்மைக் கட்டுப்படுத்தாது என்று ஹமாஸ் இயக்கம் தெரிவித்துள்ளது.

பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் கருத்துத் தெரிவிக்கையில் -

யுத்தநிறுத்தப் பிரகடனத்தை அடுத்து தமது பிரதேசத்தில் புதியதொரு யுகம் தோன்றியி ருப்பதாகக் கூறியிருக்கிறார்.

அதேசமயம் -

இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷெரோன் கருத்து வெளியிடுகையில் -

வன்முறை இடம்பெறமாட்டாது என நம் பிக்கை தெரிவித்ததோடு -

அதற்கு இடமளிக்கப்படக்கூடாது என்றும் - வலியுறுத்தினார்.

இந்த யுத்தநிறுத்த அறிவிப்பு மத்திய கிழக் கில் விரைவில் சமாதானத்தை - அமைதி - கொண்டுவருவதற்கான வாய்ப்பு என்று அரசியல் அவதானிகள் அறிவித்துள்ளனர். (எ-க)

# ஹெய்ட்டியில் 4 பொலீஸார் பலி!

லண்டன்,பெப்.10

ஹெய்ட்டியின் தலைநகரில் ரோந்துப்பணி களில் ஈடுபட்ட விசேட பொலீஸ் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் பொலீ ஸார் நால்வர் உயிரிழந்தனர்.

ஹெயிட்டியின் பாரம்பரிய மூன்றுநாள் கொண் டாட்டங்கள் ஆரம்பிப்பதற்கு முன்னதாக ரோந் துப் பணிகளில் ஈடுபட்ட பொலீஸார் மீது இனந் தெரியாத ஆயுததாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

மேற்படிச் சம்பவத்தில் அப்பாவிப் பொது மக்கள் நால்வரும் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஹெய்ட்டியின் முன்னாள் ஜனாதிபதி பேர்டிரண்ட் அரிஸ் டைட் வெளிநாடு ஒன்றில் தஞ்சமடைந் ததை அடுத்து அங்கு அரசியல் ஸ்திரமற்ற நிலைமை தோன்றியுள்ளது.

அன்றுமுதல் இன்று வரை இடம்பெற்ற வன் முறைச் சம்பவங்களில் 240 பேர் வரை உயிரி ழந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-க)

# குவான்டனாமோ சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள பிரான்ஸ் கைதிகளை விடுவிக்க அமெ. இணக்கம்

கியூபாவின் குவான்டனாமோவில் அமைந் துள்ள அமெரிக்க இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மூன்று பிரான்ஸ் நாட்டுப் பிரஜைகளையும் அவர்களது நாட்டுக்கு அனுப்பி வைக்க அமெரிக்கா இணக்கம் தெரிவித்துள்ள தாக பிரான்ஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தனது வெளிநாட்டுக் கொள்கை தொடர்பான பேச்சுக்களை நடத்த அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொண்டலிஸா ரைஸ் பிரான்ஸ் தலை நகர் பாரிஸ"க்குச் சென்றுள்ளார்.

இவர் பிரான்ஸ் செல்வதற்கு சற்று முன்ன தாகவே மேற்படி அறிவிப்பு அந்நாட்டு அதிகாரி களால் விடுக்கப்பட்டது.

முன்னதாக ரோம் நகரில் உரையாற்றிய கொண்டலிசா ரைஸ் 'மத்திய கிழக்குச் சமா தானம் குறித்து தான் மிகவும் உற்சாகமடைந் துள்ளார்' - என்று கூறினார்.

சிரியா இந்த சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்று ரைஸ் கேட்டுக் கொண்டார்.

சிரியா ஆயுதக்குழுக்கள் மீது வழங்கும் ஆதரவை நிறுத்தவேண்டும். நாம் தனிமைப் படுவதை விரும்பவில்லை என்பதை அந்தநாடு வெளிப்படுத்தவேண்டும் என்று ரைஸ் மேலும் கூறினார். (எ-க)

உலக அரங்கில்

# ஈரான் தீவிரவாதத்துக்கு அனுசரணை; பிரிட்டிஷ் பிரதமர் பிளேயரும் சாடுகிறார்

லண்டன்,பெப்.10

தீவிரவாதத்துக்கு - பயங்கரவாதத்துக்கு - அனுசரணை வழங்கும் ஒரு நாடாகவே ஈரான் விளங்குகிறது என்று பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரும் தெரிவித்துள்ளார். அமெ ரிக்க ஜனாதிபதி புஷ் ஏற்கனவே தெரிவித்த கருத்தை ஆமோதிக்கும் வகையில் பிரிட்டிஷ் பிரதமரும் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஈரான் தீவிரவாதத்துக்கு - பயங்கரவாதத் துக்கு - அனுசரணை வழங்குகிறது என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை என்றும்-

மத்திய கிழக்கு சமாதான உடன்படிக்கையை தாமதமடையச்செய்ய இது எவ்விதத்திலும் உதவாது - பயன்படாது என்றும் -

தான் நம்புவதாக நாடாளுமன்ற அமர் வொன்றில் பேசியபோது பிளேயர் சொன்னார்.

ஈராக்கில் உள்ள அமெரிக்க, பிரிட்டன் மற்றும ஈராக்கிய படைகளுக்கு எதிராக சண்டையிடு வதற்காக - போரிடுவதற்காக - நாடுகளின் எல்லைகளைக் கடந்து செல்வதற்கு ஈரானும், சிரியாவும் அனுமதிக்கக்கூடாது எனவும் ரொனி பிளேயர் எச்சரித்துள்ளார்.

இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்துக்கும் இடை யிலான சமாதான நடவடிக்கைகள் மிகவும் இக்கட்டான நிலையில் இருக்கும் இவ்வேளை யில் -

ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் போன்ற கடும்போக்குக் கொண்ட பலஸ்தீன ஆயுதக் குழுக்களுக்கு ஈரான் வழங்கும் ஆதரவு குறித்து பிரிட்டன் கவலை கொண்டுள்ள தாக அரசியல் துறைச் செய்தியாளர்களும், அவதானிகளும் தெரி வித்துள்ளனர். (எ-க)






# தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 15 பேர் ஈராக்கில் உயிரிழப்பு!

## 12 பேர் படுகாயமடைந்தனர்

பக்தாத்,பெப்.10

ஈராக் தலைநகர் பக்தாத்தில் ஈராக் தேசி யப் பாதுகாப்புப் படைக்கு ஆட்சேர்ப்பு செய் யும் நிலையமொன்றின் மீது தற்கொலைக் குண்டு தாரியொருவர் நடத்திய தாக்குதலில் 15பேர் உயிரிழந்தனர்; 12பேர் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தத் தற் கொலைக் குண்டுத்தாக்குதலில் ஈராக்கின் தேசியப் பாதுகாப்புப் படையினரும், இராணு வத்தில்சேர வந்தவர்களுமே இந்தத் தாக்குத லில் உயிரிழந்தனர் - காயமடைந்தனர்.

ஈராக்கில் செயற்படும் கிளர்ச்சியாளர்கள் அவ்வப்போது இராணுவ ஆட்சேர்ப்பு நிலையங களின் மீதும் இராணுவ முகாங்கள் மீதும் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை ஈராக்கின் பகுபா நகரில் இராணுவ ஆட்சேர்ப்பு நிலையமொன் றில் கிளர்ச்சியாளர்கள் நடத்திய தற்கொலைக குண்டுத் தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்ட னர்.

இதேவேளை - பக்தாத்தில் மேற்குப் பகுதி யில் அரசியல்வாதியான மிதல் அல் ஒலிஷி என்பவரது வாகனத் தொடரணியை தீவிரவாதி கள் வழிமறித்து தாக்குதல் நடத்தியதில் அரசி யல்வாதியின் இரு மகன்மாரும் மெய்ப்பாதுகா வலர்களும் உயிரிழந்தனர் எனவும் -

அல் - ஒலிஷி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார் எனவும் -

ஈராக்கைத் தளமாகக்கொண்டு வெளிவந்த செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

குறித்த அரசியல்வாதி கடந்தவருடம் இஸ் ரேலுக்கு விஜயம் செய்வதற்காக கடுமையான விமர்சனங்களுக்குள்ளானவர் என்பது குறிப்பி டத்தக்கது. (எ-க)

# பதவியிலிருந்து விலகுவது குறித்து பாப்பரசரே தீர்மானிக்கவேண்டும்

வத்திக்கான்,பெப்.10

பாப்பரசர் பதவியிலிருந்து மக்களுக்கான சேவைகளையும், இறை பணியையும் தொடர் வதா இல்லையா என்பதைப் பாப்பரசர் இரண் டாம் அருளப்பர் சின்னப்பரே தீர்மானிக்கவேண் டும் என அவருக்கு நெருக்கமான வட்டாரங் கள் தெரிவித்தன.

மூச்சுத்திணறலால் அவதியுற்ற பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் அண்மையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவ ரது உடல்நிலை மோசமாகவே இருப்பதால் அவர் மருத்துவமனையில் தொடர்ந்தும் சில நாள்கள் தங்கியிருக்க நேரிடும் எனவும் கூறப் பட்டது.

உடல்நிலை சரியில்லாத போதும் அவர் தனது மரணம் வரை பாப்பரசராகவே இருக்க வேண்டும் என்பதே அவரினதும் விருப்பமாக உள்ளது. (எ-க)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

யாழ்.கொழும்பு சேவை (HIACE) பயணிகள் வானுக்குரிய இருக்கைகள் (18 SEATS) பதினெட்டு (நல்ல நிலையில் உள்ளவை) விற்பனைக்குண்டு. நியாயமான விலைக்குத் தரப்படும. தொடர்பு: சோ.சீவரத்தினம் முன்னாள் மாநகரசபை உறுப்பினர். 81/2, ஆஸ்பத்திரி வீதி, (பழைய மீன்கடைக்கு அருகில்), யாழ்ப்பாணம். T.P.: 021 4590945. (41888)

## காணி விற்பனைக்கு

கொடிகாமம் நாவலடியில் 35½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 021 2263441, 0112733144.

(41822)

## தவறிவிட்டன

அச்சுவேலியைச் சேர்ந்த திரு.இராஜரஞ்சன் ஆசிரியருடைய மோட்டார் சைக்கிளின் முக்கிய ஆவணங்கள் அடங்கிய சிறிய கைப்பை ஒன்று 7.2.2005 திங்கட்கிழமை அச்சுவேலி பஸ்நிலையத்துக்கு அருகாகத் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அச்சுவேலி மத்திய கல்லூரியில் ஒப்படைத்துதவவும்.

(41887)

வட்டுக்கோட்டை மேற்கு, சிவன்கோயிலடியைச் சேர்ந்த மார்க்கண்டபிள்ளை உதயகுமாரன் என்பவருடைய தேசிய அ.அ.(இல. 600222937V), விசேட அ.அ., பல்கலைக்கழக அ.அ. என்பன அடங்கிய பேர்ஸ் யாழ்ப்பாணப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தில் ஒப்படைத்துதவவும். (41893)

விடத்தற்பளை, மிருசுவிலைச் சேர்ந்த சற்குணநாதன் குலதாசன் என்பவருடைய வாகனக் காப்புறுதிப் பத்திரம், வரி அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய கைப்பை யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ச.குலதாசன். விடத்தற்பளை, மிருசுவில் என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

(41906)

19,கண்டுவில் லேன், டச் வீதி, சாவகச்சேரி என்னும் முகவரியைச் சேர்ந்த ப.நடராசா என்பவரது வங்கிப் புத்தகம், மூக்குக்கண்ணாடி என்பன அடங்கிய தோல்ப்பை 3.2.2005 வியாழக்கிழமை கைதடி பிள்ளையார் கோவிலடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். T.P.: 0777 145807, 0777245886.

(41920)

## வாடகைக்கு

ஆனைக்கோட்டைச் சந்தியில் நவாலி வீதியில் வடக்குப் பக்கமாக இருக்கும் கடைகள் வாடகைக்குக் கொடுக்கப்படும். ஒவ்வொரு கடையும் நீளம் 27 அடி, அகலம் 14 அடி. மின்வசதி செய்யப்பட்டுள்ளது. தொடர்பு: க.இ.பாலசுந்தரம், சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

(41788)

## விற்பனைக்கு

10X6 திரையில் காண்பிக்கக் கூடிய புறொஜெக்ரர் (PROJECTOR) விற்பனைக்கு உண்டு (மொடல் 2004)

தொடர்பு:-

0776230987, 0776055517

(41918)(46)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டுமுறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 14.02.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், சூட்டி பாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம் சென்ரர் - சந்நிதி, ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (41599)

## மணமகன் தேவை

1969இல் பிறந்த, உத்தர நட்சத்திரம், முதலாம் பாதம் 4இல் செவ்வாயுள்ள பட்டதாரி ஆசிரி யைக்கு (நல்ல கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த மணமகளுக்கு) உள்ளூர் உத்தியோக மணமகன் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன, துர்க்கையம்மன் கோயில் பின் வீதி, சாவகச்சேரி. T.P.: 0777-514427. (41842)

## அறை வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சுற்றாடலில் உயர்தர, இரசாயனவியல், கணக்கீடு ஆகிய பாட ஆசிரியர்கள் இருவர் தங்குவதற்கு அறை வாடகைக்குத் தேவை. தொடர்பு 021-222 2104 (கிருபா), 0777 238548 (செல்வம்) (சி-40855)

## மணமகள் தேவை

1974இல் பிறந்த U.K.இல் வசிக்கும் அனுஷ நட்சத்திர இலக்கணத்தில் செவ்வாயுள்ள B.Com பட்டதாரி மணமகனுக்கு பொருத்தமான, சிவந்த, அழகான, படித்த பட்டதாரி மணமகள் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்காதேவி, தேவஸ்தான பின் வீதி, சாவகச்சேரி T.P.: 0777 514427. (41850)

1975இல் பிறந்த, 8இல் செவ்வாய், சதய நட்சத்திரம், U.K.இல் வசிக்கின்ற அழகிய மணமகனுக்கும் 1972இல் பிறந்த உத்தராட நட்சத்திரம் 4 ஆம் பாதம் 5'8" உயரமான மணமகனுக்கும் U.K. இல் பிரஜாவுரிமையுள்ள மணமகள் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கையம்மன் கோயில் பின் வீதி; சாவகச்சேரி T.P.: 0777 514427. (41849)

## வளர்ப்பு நாய்களால் பயணிகளுக்குச் சிரமம்

வடமராட்சி,பெப்.10

அச்சுவேலி - சந்நிதி வீதியில் இரு மருங்கும் உள்ள குடியிருப்பாளர்களால் வளர்க்கப்படும் வளர்ப்பு நாய்களால் மாணவர்கள் உள்ளிட்ட பொதுமக்களுக்கு பெரிதும் இடைஞ்சல்கள் ஏற்பட்டு வருகின்றன.

இவ்வீதியால் தமது அன்றாடக் கடமைகளுக்குச் சென்று வரும் பத்தைமேனி, கதிரிப்பாய், இடைக்காடு, வளலாய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களையும், மாணவர்களையும் வளர்ப்பு நாய்கள் இவ்வீதியில் வைத்து துரத்திக் கடிக்க முற்படுகின்றன.

இதன் காரணமாக இவ்வீதியினூடாகப் பயணிப்போர் தினமும் பெரும் இடைஞ்சல்களைச் சந்திக்க வேண்டியுள்ளது.

(எ-173)

## சட்டவிரோத மணல் அகழ்வு

துன்னாலை, வல்லிபுரம் ஆகிய பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்ந்து இடம்பெற்ற வண்ணம் உள்ளது. இப்பகுதிகளில் உள்ள தனியா காணிகளில் நள்ளிரவு வேளைகளில் மணல் அகழப்பட்டு வாகனங்கள் மூலம் கடத்தப்பட்டு வருதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(எ-173)

## கற்றல் உபகரணங்கள்

பரந்தன்,பெப்.10

தமிழீழ மாணவர் அமைப்பினர் தொண்டு நிறுவனங்களின் அனுசரணையுடன், சுனாமி அனர்தத்தால் பாதிக்கப்பட்ட ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உப கரணங்களும், சீருடைகளும் வழங்கியுள்ளனர்.

(எ-352-202)

## கலந்துரையாடல்

தென்மராட்சிப் பிரதேச செயலக எல்லைகுட்பட்ட பகுதிகளில் இருக்கும் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான கலந்துரையாடல் இன்று வியாழக் கிழமை காலை 10.30 மணிக்கு தென்மராட்சிப் பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுளளது. இந்தக் கலந்துரையாடலில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே தடகளப் போட்டிகளை நடத்துதல் உட்படப் பலமுகிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாடவுள்ளதாகத் தென்மராட்சி விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.சதீஸ்குமார் அறிவித்துள்ளார். (எ-75)

## வெளிவந்துவிட்டது

க.பொ.த. (உ/த)
இந்துசமய பாடம்
(சி.பொன்னம்பலம்)
கிடைக்குமிடம்:
ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234,கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:
021 2222573

## ஆத்மசாந்தி அஞ்சலி

### திருமதி அழகம்மா கந்தசாமி (மேரிபோல்)

(ஓய்வு பெற்ற முன்னாள் ஆசிரியை, யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

ஆத்ம நேயத்தை ஆண்டவன் ஸ்தோத்திரமாகக் கொண்டீர்...
ஆசிரியையாக வார்த்தைகளுக்கு அர்த்தம் சொன்னீர்...
ஆசைகளுக்குத் தூரதேசம் காண்பித்தீர்...
ஆண்டவனுக்காக வாழ்க்கையை அர்ப்பணித்தீர்... இன்று
ஆத்மாவின் அஞ்சலியென உச்சரிக்க வைத்து விட்டீர் - அழகம்மா
ஆருமே அணுக முடியாவிடத்தில் உம் ஆத்மா அமைதி பெறட்டும்
ஆசிரியர்களாக நாமிருந்த பாதையில் உம் நிழல் தெரிகிறது - அதை
ஆயிரம் ஆண்டுகள் நினைவுகளாகச் சுமந்து வருவோம்.

*"சத்தியவாசா",*
*இமையாணன், உடுப்பிட்டி.*

சத்தியலட்சுமி குமாரசுப்பிரமணியம் குடும்பத்தினர்.

(C/40885)(42-18-16)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் இரசாயனவியல் ஆசிரியர்
திரு.த.பாலச்சந்திரன் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி மருதம்மா நவமணி

அவர்களின் மறைவையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

ஆசிரியர் கழகம்,

(41919)(42-18-16)




TRO invites applications for the following vacancies. All applicants shall forward their details with their curriculum vitae on or before 15th February 2005 to the address below.

1. **Accountant** – Qualified to ACCA/CIMA or similar and who have experience in managing the accounts division and be responsible for producing financial accounts of the organization.
2. **Programme Manager** – Qualified in management Studies and Planning. A management graduate is preferable with some experience in similar works.
3. **English Translator** with media experience.
4. **Project Manager** specialized in Water and Sanitation.

*Salaries and other benefits are negotiable.*

Director, Disaster Management Unit, Rapid Rehabilitation and Development Services Programme,
Tamils Rehabilitation Organization,
Jaffna Road, Kilinochchi.

(C-40881)

யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக
BRITISH COUNCIL இலின் அனுசரணையுடன்

## UNIVERSITY OF CAMBRIDGE ENGLISH EXAMINATIONS

- PRELIMINARY ENGLISH TEST-PET
- FIRST CERTIFICATE IN ENGLISH-F.C.E.
- CERTIFICATE OF PROFICIENCY IN ENGLISH-C.P.E.

ஆகிய, 02.06.2005 இல் British Council-Colombo இல் நடைபெறவுள்ள பரீட்சைக்கு வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன. 12.02.2005 இற்கு முன்னர் வகுப்பில் சேரும் மாணவர்களுக்கு ரூ.10,000/=வரை பெறுமதியான நூல்களின் Photo பிரதிகள் இலவசமாக வழங்கப்படும்.

ஐந்து மாதப் போதனையில் சர்வதேச அங்கீகாரம்பெற்ற University of Cambridge இன் English Certificate உங்கள் கைகளில் வந்துசேரும்.

*உடனே வகுப்பில் சேர்ந்து கொள்ளுங்கள்*

பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளை ஆங்கிலம் கற்க எம்மிடம் நம்பி ஒப்படையுங்கள்.

## BRITISH COLLEGE OF ENGLISH

இல.141, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
*(திருநெல்வேலிச் சந்திக்கும். இராமலிங்கம் வீதிச் சந்திக்கும் இடையே).*
T.P.:0777 113408

(41924)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.10

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் அங்கத்துவ சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு ஒன்று இன்று வியாழக்கிழமை காலை 10 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை மானிப்பாயிலுள்ள கொத்தணியின் கூட்ட மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

யாழ்.மாவட்டக்கூட்டுறவுச் சபை ஒருங்கிணைந்த கல்வி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருக்கிறது.

வலிகாமம் கொத்தணியின் தலைவர் இ.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் அங்கதுவ சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(த)

## காமன்ஸ் வேலைக்கு ஆள் தேவை

ரொஷானி காமன்ஸிற்கு
தையல் வேலை தெரிந்த பெண்கள் தேவை
தொடர்பு: *ரொஷானி காமன்ஸ்*
இல.263/1, இராஜகாரியார் வீதி, மானிப்பாய்.
கிளை: ரொஷானி காமன்ஸ்
சபாபதிப்பிள்ளை வீதி. உடுவில் கிழக்கு. சுன்னாகம்.

(41601)(21-18-16-42)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 22 ~ 01 ~ 1921



உதிர்வு 23 ~ 01 ~ 2004

திருமதி

### பூரணம் திருஞானசம்பந்தர்

ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறுமா எம்மனம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
என்றும் ஆண்டவனை வேண்டுகின்றோம்

*அப்பிளானை,*
*கோப்பாய் மத்தி, கோப்பாய்.*

கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். (K.T.சம்பந்தர்)

(41909)(43-18-16-42)

## கட்டடம் வாடகைக்கு

மனோகராச் சந்திக்கருகில் நாவலர் வீதியில் அமைந்துள்ள பதினெட்டு அறைகள், நான்கு மண்டபங்கள் கொண்ட சிறியரக வாகனங்கள் நிறுத்தக்கூடிய மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0777 162428

(41905)

## வேலையாள் தேவை

எமது "டிலக்ஷன் மோட்டோர்ஸ்"ஸ்தாபனத்திற்கு வேலையாள்கள் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு: "டிலக்ஷன் மோட்டோர்ஸ்"
*113,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*
T.P.:0777186210

(41915)(46)

## பத்திரிகை விநியோகிப்போர் தேவை

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உதயன் பத்திரிகையை முகவர்களுக்கு விநியோகிப்பதற்குப் பணியாள்கள் தேவை.

மோட்டார் சைக்கிள் சொந்தமாக வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

துவிச்சக்கர வண்டிகளில் சென்று பத்திரிகை விநியோகிக்க விரும்புவோரும் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

25-30 வயதெல்லைக்குள் உள்ளோர் விசேடமாக விரும்பப்படுவர். ஏனையோரும் தகுதிகண்டு பணிக்குச் சேர்க்கப்படுவர்.

**1-9 தங்ககம், பிரதான வீதி, கிளிநொச்சியில் உள்ள**

**உதயன் பணிமனைக்கு**

11.02.2005 வெள்ளிக்கிழமை மு.ப.11 மணிக்கு நேரில் வரவும்.

(சி-40872)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# மத்திய கிழக்கில் அமைதிக் கீற்று!

நீண்ட பல ஆண்டுகளாகப் பெரும் வன்முறைகளையும், அழிவுகளையும் சந்தித்து வரும் மத்திய கிழக்கில் அமைதிக்கான - சமாதானத்துக்கான - ஒளிக்கீற்று தென்பட்டிருக்கின்றது.

இஸ்ரேலும், பலஸ்தீனமும் மோதல் தவிர்ப்புக்கு இணங்கியுள்ளன என்ற அறிவித்தல் நிலையான- நிரந்தரமான - சமாதானத்தை அப்பிரதேசம் காண்பதற்கான வாய்ப்பு உள்ளதென்ற நம்பிக்கையைச் சற்றேனும் ஏற்படுத்தியிருக்கின்றது.

எகிப்தின் சுற்றுலாத்தளமான ஸரம் - அல் - ஷக்கீலில், எகிப்து மற்றும் ஜோர்தான் தலைவர்கள் முன்னிலையில் பலஸ்தீனத்தின் புதிய தலைவர் மஹ்மூத் அப்பாஸும், இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோனும் கைகுலுக்கிக் கொண்ட நிகழ்வு மத்திய கிழக்கில் ஒரு சரித்திர திருப்புமுனையை ஏற்படுத்துமா என்பதே கேள்வி.

அமெரிக்கா சார்ந்த இஸ்ரேல் வல்லாதிக்கம் பலஸ்தீன மக்களின் நியாயமான சுதந்திர உரிமைகளைப் பறித்து, அவர்களின் தாயகத்தை ஆக்கிரமித்து, தொடர்ந்து மேற்கொண்ட அடக்குமுறை நடவடிக்கைகளின் விளைவே மத்திய கிழக்கில் மோசமான வன்முறைகளுக்கும், போரழிவுக்கும் காரணமாயிற்று.

பலஸ்தீன மக்களின் அபிலாஷைகளையும், அவர்களின் சுதந்திர உரிமைகளையும், சுதந்திர பலஸ்தீனத்தையும் அடக்குமுறை சக்தியான இஸ்ரேலும் அதற்குப் பின்புல வலுவான அமெரிக்காவும் அவற்றுடன் சேர்ந்து ஒத்துப்பாடும் மேற்கு உலகும் அங்கீகரிக்குமானால் மத்திய கிழக்கில் நிரந்தர அமைதி நிச்சயமாகும்.

அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கான புதிய சூழலும், வாய்ப்பும் மத்திய கிழக்கில் ஏற்பட்டிருக்கின்றன என்பது வாஸ்தவம் தான்.

பலஸ்தீனியரின் விடுதலைக்கான போராட்டத்தில் விடாப்பிடியாக நின்ற சுதந்திரப் போராளியான யஸீர் அரபாத்தின் மறைவை அடுத்து பலஸ்தீனத்தின் தலைமைக்குப் புதியவரான மஹ்மூத் அப்பாஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளமை -

பலஸ்தீனத்திடமிருந்து தான் கைப்பற்றி, ஆக்கிரமித்து வைத்திருக்கும் பெருமளவு பிரதேசத்தில் காஸா பகுதியையாவது முழுதாக விட்டுக் கொடுத்து வெளியேறும் மனப்பக்குவத்துக்கு இஸ்ரேல் தலைவர் ஏரியல் ஷெரோன் வந்திருப்பது -

தற்போதைய அமைதி முயற்சிகளை அமெரிக்கா பின்புலத்தில் இருந்து இயக்க, எகிப்து மற்றும் ஜோர்தான் நாடுகள் அந்த முயற்சிகளில் நேரடிப் பங்காளிகளாகப் பங்குபற்றுவது -

அமைதி முறையில் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்ற எண்ணப்பாடு சம்பந்தப்பட்ட இரு தரப்பிலும் வலிமையாக உருவாகியிருப்பது -

- இப்படி இந்த அமைதி முயற்சிகள் ஆக்க பூர்வமான திசையில் நகர்வதற்குச் சாதகமான பல அம்சங்கள் தென்படுவது வரவேற்கத்தக்கது.

ஆனாலும், இதற்கு முன்னரும் பரபரப்பாக - சர்வதேச முக்கியத்துவத்தோடு - இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட அமைதி முயற்சிகள் தோற்றுப்போன வரலாற்றின் பின்னணியில் நோக்கும்போது, இப்போதைய முயற்சிகளும் எந்நேரமும் நொருங்கிப் போகக் கூடிய ஆபத்தையே உடையவை என்பது தெளிவாகும்.

ஜெருஸலத்திலோ, டெல் அவிவிலோ எங்கோ ஒரு மூலையில் வெடிக்கக் கூடிய குண்டோ அல்லது தற்கொலைத் தாக்குதலோ எல்லா அமைதி முயற்சிகளையும் - இணக்கப்பாடுகளையும் - ஒரே கணத்தில் போட்டுடைத்து -

மீண்டும் ஆரம்பப் புள்ளிக்கே நிலைமையை இட்டுச் செல்லக்கூடிய - தள்ளக்கூடிய ஆபத்து ஏதுநிலை அதிகம் இருப்பதையும் மறந்துவிட முடியாது.

பலஸ்தீனத்தில் சுதந்திரத்துக்கான ஆயுத வன்முறைப் போராட்டத்தை முனைப்புடன் முன்னெடுத்து வரும் சக்திகள், அமைப்புகள், இயக்கங்கள் ஆகியவற்றுக்குள் வலுவானதும், செயற்றிறன் மிக்கதும் ஹமாஸ் அமைப்பாகும். இஸ்ரேல் - பலஸ்தீனத் தலைவர்கள் தற்போது கண்டுள்ள மோதல் தவிர்ப்பு உடன்பாடு தன்னைக் கட்டுப்படுத்தாது என்று அந்த அமைப்பு அறிவித்திருப்பது, இந்த அமைதி முயற்சிகளின் வெற்றிப்போக்குக் குறித்துப் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

பலஸ்தீனியர்களின் நியாயமான உரிமைகளைப் பறித்து, அவர்களை அடக்கி, ஒடுக்கி, அவர்களின் தாயக மண்ணை ஆக்கிரமித்து, இஸ்ரேல் புரிந்துவந்த காட்டுத் தர்பார்தான் ஹமாஸ் போன்ற தீவிரவாத அமைப்புகளின் தோற்றத்துக்கும், வளர்ச்சிக்கும், அவற்றின் செயற்பாட்டுக்கும் மூலகாரணம்.

ஆகவே, இப்போது காணப்பட்டுள்ள மோதல் தவிர்ப்பு நிலைமை நிரந்தர சமாதானத்தை எட்டும் வரையில் நின்று நீடிக்க வேண்டுமானால், ஹமாஸ் போன்ற அமைப்புகளையும், அத்தகைய சமாதான முயற்சிகளுக்குள் கொண்டுவருவது அவசியமாகின்றது.

அத்தகைய அமைப்புகளை சமாதான முயற்சிகளுக்குள் கொண்டுவருவதாயின் அதற்குச் சாதகமான பிரதிபலிப்புகளை - நடவடிக்கைகளை - செயற்பாடுகளை - இஸ்ரேல் களத்தில் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். செய்யுமா இஸ்ரேல்?

# கௌசல்யன் படுகொலை குறித்து விரிவான விசாரணை தேவை

யாழ்ப்பாணம்,பெப்.10

மட்டு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் போராளிகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு ஆகியோரின் படுகொலை தொடர்பாக முழுமையான விசாரணை தேவை. இவ்வாறு பொது அமைப்புக்கள், அரசியல்கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம்

கிழக்கில் நடந்த கௌசல்யன் உட்பட புலி உறுப்பினர்களதும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரதும் படுகொலைகள் தொடர்பான பூரண விசாரணையை நடத்தி உண்மை நிலையை வெளிப்படுத்தவேண்டும்.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யனும் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேருவும் பொது மக்களும் பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள வெலிகந்த பொலீஸ் பிரிவுக்குட்பட்ட இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட கொடூரமான செயலைக் கிளிநொச்சி வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கின்றது. ஸ்ரீலங்காவின் அரச பாதுகாப்புப் பிரதேசத்தில் இடம்பெற்ற இக்கொலைகளுக்கு அரச படைகளே பொறுப்பேற்க வேண்டுமென வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் சுட்டிக்காட்டுகின்றது. என்றுள்ளது.

### ஈழவேந்தன் எம்.பி. விடுத்த செய்திக் குறிப்பில்

தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண அரசியல் பிரிவுத் தலைவர் இளம் வயதில் எம்மைவிட்டுப் பிரிந்துள்ளார். யாரோ சிலரின் வஞ்சனைச் செயலால் அவரின் உயிர்பறிக்கப்பட்டுள்ளது. இது எமக்கு ஆற்றொணாத் துயரைத் தருகின்றது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இயற்கையனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் என்னை அழைத்துச் சென்று மக்களின் அவல நிலையைக் கண்டறிய அனைத்து உதவிகளையும் செய்து பாசத்திற்கும் பற்றுக்கும் உரியவராக கௌசல்யன் விளங்கினார்.

தமது இயக்கத்தை அந்தப் பிரதேசங்களில் கட்டுக்கோப்புடன் வழிநடத்திய பெரும் வீரர் அவர்.

வளர்ந்துவரும் ஒரு இளம் தலைவரின் உயிர் இவ்வாறு பறிக்கப்பட்டிருப்பது தமிழர்களுக்கு சொல்லொணாத் துயரைத் தந்துள்ளது - என்றுள்ளது.

### ஈ.பி.டி.பி. விடுத்த செய்திக் குறிப்பில்

கௌசல்யன் உட்பட்ட ஐந்து புலி உறுப்பினர்களும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேருவும் கொல்லப்பட்டு மூவர் காயமடைந்துள்ள துப்பாக்கித் தாக்குதல் சம்பவத்தை ஈ.பி.டி.பி. வன்மையாகக் கண்டிக்கிறது. கருத்துக்களைக் கருத்துக்களாலேயே எதிர்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையிலேயே ஈ.பி.டி.பி. ஒவ்வொரு சம்பவங்களையும் எதிர்கொள்கிறது என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, புலிகள் மீதான துப்பாக்கிப் பிரயோகத்திற்குத் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

கருத்து முரண்பாடுகள் கருத்து ரீதியாகப் பேசித் தீர்வு காணப்படவேண்டும். அதைவிடுத்து வன்முறைகளூடாகவும் படுகொலைகளூடாகவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது. மாற்றுக் கருத்துக் கொண்டோரைப் படுகொலை செய்வதென்ற நடைமுறையைப் புலிகளே ஆரம்பித்தார்கள். ஆகவே, அவர்களே இக் கொலைக் கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளியையும் வைக்கவேண்டும் - என்றுள்ளது.

### வீ.ஆனந்தசங்கரி

முன்னாள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி விடுத்த அறிக்கையில்:-

புனாணைப் பகுதியில் எமது கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினருமான அ.சந்திரநேரு உட்பட அறுவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது.

இந்த இரண்டரை வருடங்களுக்கு மேலாக யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலில் இருந்த காலகட்டங்களிலும் கூட சகோதரப் போராளிகள் ஒருவரை ஒருவர் கூட்டுக்கொல்வதும் மாற்றுக்கருத்துக்களைத் தெரிவிக்கும் புத்திஜீவிகள் உட்பட அப்பாவிகளின் உயிர்கள் பறிக்கப்படுவதும் மிகுந்த வேதனையைத் தருகின்றது - என்றுள்ளது.

(ஐ)

## தமிழர் பிரதேசங்களைச் சுவீகரிக்கச் சதிமுயற்சி;

# ரவூப் ஹக்கீமின் குற்றச்சாட்டுக்கு ஈழவேந்தன் எம்.பி.வரவேற்பு!

யாழ்ப்பாணம்,பெப்.10

தமிழர்களின் வாழ்விடங்களில் பெரும்பான்மை இனத்தவரைக் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் குற்றஞ்சாட்டி - அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து முஸ்லிம் காங்கிரஸ் கட்சித்தலைவர் ரவூப் ஹக்கீம் வெளியிட்டிருக்கும் கருத்தைதான் மிகவும் வரவேற்கிறார் என்று தமிழர் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் தெரிவித்திருக்கிறார்.

இதுதொடர்பாக ஈழவேந்தன் எம்.பி. வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ்பேசும் மக்களின் வதிவிடங்களில் பெரும்பான்மை இனத்தவரைக் குடியமர்த்தும் நடவடிக்கை மும்முரம், கடல்கோளை பயன்படுத்தி அரசு செயலில் இறங்கியிருப்பதாக ஹக்கீம் குற்றச்சாட்டு" என்று தலைப்பிட்டு அனைத்து தமிழ் ஊடகங்களிலும் வெளிவந்துள்ள செய்தி இஸ்லாம் தழுவிய தமிழர்களும் அவர்களை வழிநடத்தும் தலைவர்களும் விழிப்புற்று இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றது. இது எமக்கு மகிழ்ச்சியையும் ஆறுதலையும் அளிக்கின்ற - தெம்பு தருகின்ற நிகழ்ச்சியாக அமைகிறது.

ஹக்கீம் தன் அறிக்கையில் உலக நாடுகள் வழங்கிய உதவிகளைத் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் பெற முடியாத நிலையில் மாற்றான்தாய் மனப்பான்மையுடன் சந்திரிகா அரசு செயற்படுகின்றதென்பதை வெளிப்படையாக எடுத்துரைத்துள்ளார்.

எனவே, ஹக்கீம் அவர்களுக்கும் ஏனைய முஸ்லிம் தலைவர்களுக்கும் நாம் விடுக்கும் பணிவான வேண்டுகோள் நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்.

நடைபெற்ற கசப்பான பல நிகழ்ச்சிகளைக் கூறி அவற்றை மேலும் புண்படுத்தாது பண்படுத்தி ஆட்கொள்ள விரும்புகிறோம்.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு 'ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு", "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" இவை நாம் கையாளும் பழமொழிகள்அல்ல. பொருள் பொதிந்த பொன்மொழிகள் என்பதை உணர்ந்து செய் அல்லது செத்துமடி என்ற நிலைக்கு எம்மை ஆளாக்கி வெற்றி நமதே நாளை நமதே என்பதை உருவாக்குவோம் - என்று தெரிவித்துள்ளார். (த)

# பிரதேச விவசாயக் குழுக் கூட்டத்தில் மேசைக்கு வந்தது உருளைக்கிழங்கு!

வலிகாமம்,பெப்.10

கடந்த வருடம் நடுகை செய்வதற்கென விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விதை உருளைக்கிழங்கு தரம் குறைந்ததாகவும், பழுதடைந்த நிலையிலும் இருந்தது. அவற்றின் விளைவு குறைந்து போய் விவசாயிகள் பெரும் நட்டம் அடைந்துள்ளனர். இதனை உறுதிப்படுத்தும் வகையில் உருளைக்கிழங்குகளை விவசாயக் குழுச் கூட்டத்தில் சமர்ப்பித்து பல விவசாயிகள் தமது விசனத்தை வெளிக்காட்டினர்.

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்ற விவசாயக்குழுக் கூட்டத்திலேயே விவசாயிகள் பிரதேசெயலர் எஸ்.திருவாகரன் முன்னிலையில் உருளைக்கிழங்குகளைச் சமர்ப்பித்தனர்.

கமநலசேவை நிலையங்களினூடாகவோ விவசாயத்திணைக்களங்களினூடாகவோ விதை உருளைக்கிழங்குகள் விநியோகிக்கப்படவில்லை. சில தனியார் வர்த்தக நிறுவனங்களில் அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்களால் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது.

தனியார் வர்த்தக நிலையங்களில் விதை உருளைக்கிழங்கு கலப்படம் செய்யப்பட்டிருக்கலாம் எனவும், விளைவிக்கப்பட்ட உருளைக்கிழங்கு முளைத்திறன் குறைந்ததாகவும் தாய்க்கிழங்கில் அழுகல் ஏற்பட்டதனால் உருளைக்கிழங்குகள் சேதமடைந்ததாகவும் விவசாயிகள் அங்கு பிரஸ்தாபித்தனர். பழுதடைந்த உருளைக்கிழங்குகளையும் பார்வைக்குச் சமர்ப்பித்தனர்.

இது தொடர்பாக விளக்கமளித்த உடுவில் கமநலசேவைத் திணைக்கள விவசாயப் போதனாசிரியர் கே.சிவகணேசன், திணைக்களத்தால் சிபாரிசு செய்யப்பட்ட வர்த்தக நிறுவனங்களால் விநியோகிக்கப்பட்ட விதை உருளைக் கிழங்கில் ஆரம்பத்தில் ஒருசில பெட்டிகள் பழுதடைந்திருந்ததாகவும் ஆனால், அவை உடனடியாகவே கண்டுபிடிக்கப்பட்டு புதிய பெட்டிகள் தருவிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். அத்துடன், பெட்டிகள் உடைக்கப்பட்டு கலப்படம் செய்யப்பட்டதையும் மறுத்த அவர், பெட்டிகள் யாவும் முழுமையாக 'சீல்' செய்யப்பட்ட நிலையிலேயே விநியோகிக்கப்பட்டதையும் பல விவசாயிகளும்,வியாபாரிகளும் விசாரணைகளின் போது உறுதிப்படுத்தியும் உள்ளனர் எனவும் தெரிவித்தார்.

விவசாயத் திணைக்களத்தினாலும் கமநல சேவைத் திணைக்களத்தினாலும் சிபாரிசு செய்யப்பட்ட கிழங்கை விவசாயிகள் விரும்பியே பெற்றுக்கொண்டனர். உருளைக்கிழங்கு பழுதுக்கு விதையை விட வேறு பலகாரணங்களும் இருக்கலாம். திறந்த பொருளாதாரத்தில் - போட்டிச் சந்தையில் தந்திரோபாயத்தை பயன்படுத்துவதன் மூலமே வெற்றி காணமுடியும். விவசாய சம்மேளனங்கள் இணைந்து விதை உருளைக்கிழங்கைத் தருவிக்கலாம். கமநலசேவை அல்லது விவசாயத் திணைக்களம் மூலம் விதை உருளைக்கிழங்கை எதிர்காலத்தில் பெற்றுத் தரவேண்டும் என்ற உங்கள் கோரிக்கையை மாவட்ட திணைக்களக் கூட்டத்தில் நிச்சயம் தெரியப்படுத்துவேன். - என பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் நம்பிக்கை தெரிவித்தார். (ஐ-152)

## நாளை

தை 29
வெள்ளிக்கிழமை
(11.02.2005)
திதி : திருதியை
முன்னிரவு 11.48 வரை
நட்சத்திரம் : பூரட்டாதி
முன்னிரவு 08.11 வரை
சுபநேரம் : 06.34- 08.04
ராகுகாலம்: 11.04- 12.34
(யாவும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

பலரைச்சிலகாலமும் சிலரைப் பலகாலமும் ஏமாற்றலாம். ஆனால், எல்லோரையும் எக்காலமும் ஏமாற்ற முடியாது.-
- ஆபிரகாம் லிங்கன்

## மனப்பக்குவம் நிறைந்தவர்களாக மாறுவோம்!

**தவக்காலச் சிந்தனை**

**இரண்டாம் நாள்**

அருளின் காலமாகிய தவக்காலத்தில் காலடி எடுத்து வைத்துள்ளோம். இக்காலப்பகுதியில் இயேசுவின் திருப்பாடுகள், துன்பங்கள், மரணம் அதனூடான வெற்றி என்பவற்றை நினைவு கூரும் அதேவேளையில் சிலுவை எம் மனக்கண்ணில் தோன்றும்.

'என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்' (லூக் 9:23) எம்வாழ்வில் சிலுவை என்றால் என்ன? மனைவிக்கு கணவன் சிலுவை, கணவருக்கு மனைவி சிலுவை, பிள்ளைகளுக்கு வயோதிபப் பெற்றோர் சிலுவை, பொதுநலவாதிக்கு சுயநலவாத சிலுவை. துன்பங்கள், இழப்புக்கள, பேரனர்த்தங்கள், பாதிப்புக்கள் எல்லோருமே சிலுவைகள் தான். அன்புக்கு பகைமை சிலுவை. நீதிக்கு அநீதி சிலுவை. அமைதிக்கு அடாவடி சிலுவை.

இவ்வாறான சிலுவைகள் எல்லாவற்றையும் ஒன்றிணைத்து இயேசு தன்தோளில் சுமந்துகொண்டார், அன்போடு ஏற்றுக்கொண்டார்.

நாமும் எம்மை அழுத்தும் பல்வேறு சிலுவைகளைப் பொறுமையுடன ஏற்று, சகித்து அதன் சுமைகளைக் குறைக்கும் மனப்பக்குவம் பெற்றவர்களாக மனம் மாற எம்மை அழைப்பதே இத்தவக்கலாம். சிலுவைகளை ஏற்போம். பொறுமை காப்போம். இறுதியில் அதுதரும் பரிசு வீடிவு, அழிக்க முடியாத புதுவாழ்வு.

- எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை.

## தொடர்மழை பாதித்த 196 குடும்பங்களுக்கு ஆனைக்கோட்டையில் நிவாரணம்

கடந்த வருட இறுதியில் தொடர்ச்சியாகப் பெய்த மழை காரணமாகப் பாதிக்கப்பட்ட ஆனைக்கோட்டைக் கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த 196 குடும்பங்களுக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆனைக்கோட்டை கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து இவை வழங்கப்பட்டன.

பிளாஸ்ரிக் பாய்கள், பெட்சீற், பிளாஸ்ரிக் வாளி, நுளம்பு வலை, அரிக்கன் லாம்பு என்பன இவ்வாறு வழங்கப்பட்டன.

இதேவேளை,வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சாவற்கட்டு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 90 குடும்பங்களுக்கும் மானிப்பாய் தெற்கில் 2 குடும்பங்களுக்கும் நவாலி தெற்கில் 5 குடும்பங்களுக்கும் உயரப்புலததில 7 குடும்பங்களுக்கும் இவ்வாறு பொருள்கள் வழங்கப்பட்டன.(எ-100)

## மகளிர் பிரிவு அலுவலகம் திறப்பு

தென்மராட்சி,பெப்.10

தென்மராட்சிக் கோட்ட மகளிர் பிரிவு செயலகம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி கந்தையா வீதியில் திறந்துவைக்கப்பட்டது.

செயலகக் கட்டடத்தினை யாழ்.மாவட்ட அரசியல்துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் கலைவிழி நாடாவெட்டி திறந்துவைத்தார்.

தென்மராட்சிக் கோட்ட அரசியல்துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் கலைவாணி பொதுச்சுடரினையும் தென்மராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் தேசியக் கொடியினையும் ஏற்றிவைத்தனர்.(3-117)

## உள்ளூராட்சி மன்றங்களின் இழப்பு விவரம் சேகரிப்பு

வலிகாமம்தெற்கு,பெப்.10

சுனாமி அனர்த்தங்களினால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஏற்பட்ட வருமான இழப்புப் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

குறிக்கப்பட்ட மாதிரிப்படிவத்தில் வருமான இழப்புகளைக் குறித்து உடனடியாக அனுப்பி வைக்குமாறு உள்ளூராட்சி ஆணையாளர் தெ.து.விஜயலட்சுமி, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், மாநகர ஆணையாளர், பிரதேசசபை செயலர்கள் ஆகியோரை கேட்டுள்ளார். (ஜ-152)

## பூப்புப்புனித நீராட்டுவிழா ஒத்திவைப்பு

எதிர்வரும் 11.02.2005 வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த
எமது அன்பு மகள்

**செல்வி குவேந்தினி**

அவர்களின் பூப்புப்புனித நீராட்டு விழாவானது தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்க வேண்டி நேர்ந்துவிட்டது என்பதை வருத்தத்துடன் அறியத்தருகிறோம்.

விழா நடைபெறும் திகதி பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

கந்தசாமி கோயிலுக்கு அருகில்.
கோப்பாய் வடக்கு.
கோப்பாய். (41889)(42-45)

திரு.நா.சதானந்தராசா (குஞ்சு)
திருமதி ச.கலாநிதி
குடும்பத்தினர்.

## கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் வடமராட்சிக்கு விஜயம்

கரவெட்டி,பெப்.10

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நேற்று முன்தினம் வடமராட்சிக்கு விஜயம் செய்து கரையோரப் பகுதியில் இராணுவத்தினரால் புதிதாக அமைக்கப்பட்டுவரும் காவலரண்களைப் பார்வையிட்டுள்ளனர்.

சுனாமியால் சேதமடைந்த வீட்டுத்தளபாடங்களைப் பயன்படுத்திப் படையினர் காவலரண்களை அமைப்பதாகப் பொதுமக்கள் செய்த முறைப்பாட்டையடுத்தே கண்காணிப்புக்குழுவினர் கரையோரப் பகுதியைப் பார்வையிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வல்வெட்டித்துறையில் உள்ள கடற்புலிகளின் அலுவலகத்துக்குச் சென்ற கண்காணிப்புக்குழுவினர் அங்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் கரிகாலனைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். இராணுவத்தின் நடவடிக்கைகள் தொடர்பாகக் கரிகாலன் கண்காணிப்புக் குழுவுக்கு விளக்கமளித்தார்.

(8-70)

## காக்கைதீவு மீனவருக்கு வள்ளங்கள் கையளிப்பு

நவாலி,பெப்.10

காக்கைதீவு கடற்றொழிலாளர்களுக்கு மூவிமொண்டோ நிறுவனம் அண்மையில் 5 வள்ளங்களைக் காக்கைதீவில் வைத்துக் கையளித்துள்ளது.

ஒவ்வொரு வள்ளத்திலும் 20 பேரைப் பயணம் செய்து தொழில் செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளது. இதனால், சுமார்100 குடும்பங்கள் தொழில் வாய்ப்பைப் பெற்றுள்ளன.

மேற்படி கையளிப்பு வைபவம் கடந்த 2ஆம் திகதி நடைபெற்றது. இதில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா, ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் வை. சத்தியராசா மற்றும் மூவிமொண்டோ உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

(எ-100)

## அகவை 60 இல் கால்பதிக்கும் (10-02-2005)

## எங்கள் பப்பாவை வாழ்த்துகின்றோம்

## திரு.கிருஷ்ணபிள்ளை கணேசன்



நல்லாசிரியராக, அதிபராக மனித சமூகம் கல்வியின்பால் வளர்ச்சியுற அயராத பணியும் ஆலயத் தொண்டும் சமூகப்பணிகளும் ஆற்றி உடல் உறுதியும் தளராத மனமும் பெற்றிருக்கும் எங்கள் பப்பாவை பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல கூத்தாடியம்பதி அன்னை காளிதேவியின் அருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

பொதிகை,
அல்வாய் வடக்கு.
அல்வாய்.
(41899)

மகன்- க.பாரதிதாசன் குடும்பம் (லண்டன்),
மகன்- க.கண்ணதாசன் குடும்பம் (கனடா),
மகன்- க.பிரேமதாசன் குடும்பம் (லண்டன்),
மகள்- திருமதி கல்யாணி வரதன்.

## பூப்புப்புனித நீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் தாரண வருடம் தை மாதம் 29 ஆம் நாள் வெள்ளிக்கிழமை (11.02.2005)
பகல் 10.34-11.30 மணிவரை உள்ள சுபமுகூர்த்த வேளையில்
எமது செல்வப் புதல்வி



**நவலோஜினி**



அவர்களுக்கு

பூப்புப் புனித நன்னீராட்டு விழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நியூ சந்திரா தொழிலகம்
209/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:
திரு.திருமதி ஆ.சந்திரன்.

★ இதனையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு
பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். (41864)


## வன்னி மாவட்ட விளம்பரதாரர்களுக்கு.....

உங்கள் அபிமான உதயனில் விளம்பரங்களைப் பிரசுரியுங்கள்.

கிளிநொச்சிப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

காலை8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை உங்கள் விளம்பரங்களை நேரில் கையளிக்கலாம்.

உங்கள் வாடிக்கையாளருடன் உடனடியாகத் தொடர்பு கொள்ள உதயனில் விளம்பரங்களை வெளியிடுவதே சிக்கனமான வழி. விரையுங்கள்! முந்துங்கள்!

உதயன்
கிளிநொச்சிப் பணிமனை
1-9 தங்ககம், பிரதான வீதி, கிளிநொச்சி.
(சி/40859)



ஒரே கூரையின் கீழ் கம்பியூட்டர், எலக்ரோனிக்ஸ் மற்றும் நெற்வேர்க்கிங் பொருட்கள் அதுவும் கொழும்பு நிர்ணயவிலையில்... இந்திய பொறியியல் துறையில் அதி உன்னத எலக்ட்ரானிக்ஸ் அன்ட் கம்யூனிக்கேசன் துறையில் முதன்மை எஞ்சினியரிங் பட்டம் பெற்ற பொறியியலாளரின் நேரடிக் கண்காணிப்பில் உருவாக்கப்படும் ஒரு உன்னத நிறுவன வழங்கல்கள் வெகுவிரைவில் உங்கள் கைகளில்....

எதிர்பாருங்கள்!
அறிமுக சலுகைகள் பற்றிய விபரம் நாளை தினசரியில்

**Our Special packages**

- New 550, 600, 733, 800, 1GHz Compaq PIII 128 SDRAM,10GB Hard Disk, 1.44FDD, 52X CDROM, 15" color Monitor,Keyboard, Mouse
  **Rs. 32,000/- முதல்**
- New PIV 128 SDRAM,40GB Hard Disk, 1.44FDD, 52X CDROM, ATX Tower with Front USB & Audio, 15" color Monitor,Keyboard, Mouse
  **Rs. 48,900/- முதல்**
- தரமான கணனிகள். கணனி உதிரிப்பாகங்கள் TV, VCR மற்றும் CD, DVDகள் @ Colombo based price

**Never Fever Against Technology**

**Knowledge beyond the technology. That's CeSCO**

**Real imported products @ Lower Price**

A Bright solution providing centre

இல்லை என்று எதுவுமில்லை

**CeSCO** A Computer & Electronics Solution Company for your tasty knowledge bite. A PLACE for All Computing, Electronics & Networking

கம்பியூட்டர் துறையில் எந்தவொரு எலக்ரோனிக் பொருட்களையும் இணைக்க முடியும் அற்புதிய ஆராய்ச்சி, மல்டிமீடியா சொலுசன், எலக்ரோனிக்ஸ் பகுப்பாய்வுகள், திருத்தங்கள், புதுப் பொருட்கள் உருவாக்கம் மிக்ஸ்ட் எலக்ட்ரானிக்ஸ் எனப்படும் அனலக், டிஜிற்றல் சேர்ந்த இயக்கங்கள் உடனுக்குடன் உங்கள் முன்னிலையில் கைதேர்ந்த அனுபவ முதிர்ச்சி பெற்றவர்களின் ஆய்வுக்கூடாகக் கொடுக்கப்படும்.

*** All with 3 years immediate Replacement warranty**

காலம் எப்போதும் கனிந்திருப்பதில்லை. சகல எலக்ட்ரானிக்ஸ் பொருட்களும் ஒரே இடத்தில்... புதுமை அதுவும் எலக்ட்ரானிக்ஸ் துறையில் புதுமை. கொழும்பு நிர்ணய விலையில் எமது தாயகத்தில் உலகெங்கும் ஒரே தராதரப்படுத்தப்பட்ட விலையில் எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள்

தரம் தராதரம் மற்றும் நிரந்தரம் எமது தாரக மந்திரம்

**CeSCO**
56/15, ஸ்ரான்லி வீதி
இலங்கை வங்கி பின்புறம்,
பழைய போஸ்ட் ஒவ்விஸ் லேன்,
யாழ்ப்பாணம்.




நெஞ்சைவிட்டகலாத
47 ஆம் நாள்
நினைவஞ்சலி

அமரர்
**விமலநாதன் தர்சன்**
(யாழ். இந்துக் கல்லூரி மாணவன்)

மொட்டாக மண்ணில் 14*04*1988
மலராது விண்ணில் 26*12*2004

இரக்கமற்ற கடலே நீயும் ஒருகணம் எண்ணிப் பார்
எம் செல்வந்தான் உனக்குச் செய்திட்ட கொடுமை என்ன?
பள்ளிப்பருவத்தில் பதினாறு வயதினிலே பிஞ்சுப் பாலகனை
நீ பறித்திட்ட கொடுமைதான் என்ன?
பாவியாகிய எமை இங்கு பரிதவிக்க விட்டு
ஒருபாவமுமே அறியாத எம் தம்பியைக் கவர்ந்திட்ட
காலனே! உனக்குத் தான் இரக்கம் என்பது
சிறிதாவேனும் இல்லையா?
ஆண்டாண்டுகள் சென்றாலும் எம் நெஞ்சங்களில்
என்றும் நீ அணையாத தீபமே!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(சி-40884) (24-19-16)

கடவைப்புலம்,
சுன்னாகம்.

உன் நினைவில் வாடும்:
அப்பா, அம்மா, அக்கா, தங்கை.

# கௌசல்யன் மீதான அரசின் தாக்குதல்

# யுத்தச் சூழலை உருவாக்கும் திட்டமே!

## என்கின்றன யாழ். மாவட்ட பொது அமைப்புகள்

யாழ்ப்பாணம்,பெப்.10

மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் படுகொலை செய்யப்பட்டமை, போருக்கான சூழலை உருவாக்கும் அரசின் திட்டத்தின் ஓர் அங்கமே என்று பொது அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு புனாணையில் நடத்தப்பட்ட படுகொலைகளை மிக வன்மையாகக் கண்டித்துப் பல்வேறு பொது அமைப்புகள் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

### யாழ். தேசிய எழுச்சிப் பேரவை

படுகொலைச் சம்பவம் அரசின் திட்டமிட்ட அரசியல் அநாகரிகச் செயற்பாடாக அமைகிறது. இது மாத்திரமன்றி, போருக்கான சூழலை உருவாக்கும் அரசின் கபட நோக்கமே இது. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்தக் கோர நிகழ்ச்சியானது எமது மக்களை அதிர்ச்சியிலும் ஆழ்ந்த துயரத்திலும் ஆழ்த்தியுள்ளது. ஈடினை செய்யமுடியாத இந்தப் பேரிழப்பிற்கு அரசு எந்த வகையிலும் நியாயம் கற்பிக்கமுடியாது.

மக்களின் சுபீட்சமான வாழ்விற்காகத் தம்மை அர்ப்பணித்து அரசியல் பணியாற்றிவரும் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கும் தமிழ்மக்களுக்கும் இந்தச் சமாதான காலங்களிலும் பாதுகாப்பில்லை என்பது இக்கொலைச் சம்பவம் மூலம் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

எனவே, எமது பாதுகாப்பை நாமே தேட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம் என்பது இந்த கோரக் கொலைத்தனத்தினூடாகப் புரிந்துகொண்டுள்ளோம். இப்படிப்பட்ட கோர நிகழ்வுகளை இனிமேலும் அனுமதிக்கமுடியாது.

போர் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவி வழங்காமல் அரசு தடைகளை ஏற்படுத்தி வருகிறது. இப்போது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ அரசே முன்னின்று வருகிறது. இந்த மனித நேயமற்ற செயல்புரிவதைச் சர்வதேச சமூகம் வேடிக்கை பார்ப்பதை எம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. இது எமக்குக் கவலையளிப்பதாகவுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்துப் பணிகளை மேற்கொள்ளப் பூர்வாங்கத் திட்டங்களுடன் புறப்பட்ட மட்டு. - அம்பாறைப் பொறுப்பாளர் இ. கௌசல்யனும் அவரது குழுவினருடன் இவ்வாறு கொலைக்கு ஆளாகி இருப்பது தமிழ் மக்களை ஆத்திரம் கொ...வைத்துள்ளது. இது போன்ற சம்பவங்கள் இனிமேலும் நிகழுமானால் மீண்டும் ஒரு யுத்தம் வெடிப்பதை அரசு வெறுமனே பார்த்துக்கொண்டிருக்க வேணடியதுதான் என்பதை ஸ்ரீலங்கா அரசிற்குத் தெட்டத்தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறோம.

### யாழ். மாவட்டப் பொது அமைப்புகளின் ஒன்றியம்

ஆழிப்பேரலை அனர்த்த துயர் துடைப்பிற்காகப் பூர்வாங்கத் திட்டங்களுடன் வன்னியில் இருந்து புறப்பட்ட மட்டு, - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் போராளிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் இராணுவ அனுசரணை அதிரடித் தாக்குதலில் கொலைசெய்யப்பட்டிருப்பதை யாழ்ப்பாண மாவட்டப் பொது அமைப்புகளின் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை நிறைவேற்ற தடைகளைப் போட்டுவரும் அரசு, இப்போது ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பணிகளை மேற்கொள்ளவும் அரசும், அதன் படைகளும் தடையாக இருக்கின்றன என்பது இப்போது நிரூபணமாகியுள்ளது.

சமாதானப் போர்வையைப் போர்த்துக்கொண்டு மீண்டும் யுத்தத்தைத் தமிழ் மக்கள் மீது திணிப்பதற்கு அரசு தயாராகி வருவதையே இக்கொலைச் சம்பவம் எடுத்துக்காட்டுகிறது. சில சமாதானத்தை விரும்பும் தமிழ் மக்களுக்கு இது விடப்பட்ட சவாலாகும்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைமையுடன் விரிவாக ஆராய்ந்து பல்வேறு நலத்திட்டங்களுடன் கிளிநொச்சியில் இருந்து புறப்பட்ட விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களில் ஒருவரான கௌசல்யன் கொல்லப்பட்டிருப்பது தமிழர் நெஞ்சங்களில் கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடந்துள்ளது. எனவே, ஸ்ரீலங்கா அரசே முழுப் பொறுப்பேற்கவேண்டும்.

இக்கொலைச் சம்பவம் இந்நாட்டில் தமிழர்களுக்குப் பாதுகாப்பில்லை என்பதை உணர்த்தியிருக்கிறது. சிங்களப் படைகளினால் தமிழ் மக்களுக்கு ஒருபோதும் பாதுகாப்பு வழங்க முடியாது. ஏனெனில், கடந்தகால வரலாற்றில் அரச பயங்கரவாதத்தினால் தமிழர்கள் வகைதொகையின்றிக் கைதுசெய்தும், சித்திரவதைக்குள்ளாகியும் வந்துள்ளனர்.

பல்லாயிரம் தமிழர்கள் இனப்படுகொலைக்கும் ஆளாகியுள்ளனர். அந்த வரிசையில், விடுதலைப் புலிப் போராளிகளையும், தமிழ்த் தேசியப் பற்றாளர்களையும் திட்டமிட்டு ஆட்சியாளர் கொன்று குவித்துவருகின்றனர். தமிழர் தாயகத்தை விட்டு அரசபடை வெளியேறினால் தான் தமிழருக்குப் பாதுகாப்புண்டு.

கிழக்கில் நிலவிய அமைதியான சூழ்நிலையைக் குழப்ப சமாதானத்தைச் சிதைக்க விரும்பும் தீயசக்திகளை அரசபடை இணைத்துக் கொண்டு இவ்வாறான கொலைச் சம்பவங்களில் ஈடுபட ஆட்சியாளர் அனுமதிப்பார்களேயானால் தமிழர்கள் மீண்டும் யுத்தத்தை எதிர்கொள்ளத் தயாராகவே இருக்கிறார்கள் என்பதைத் தெட்டத்தெளிவாகத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

அரசு இவ்வாறான கொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். மீறின், வடக்கு - கிழக்கில் ஆயுதப் படைக்கெதிராகப் போராட்டம் வெடிக்கும்.

### யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம்

இக்கொலைச் சம்பவம் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆயுதம் அற்ற நிலையிலே மக்களுக்காகச் சேவைசெய்ய இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் பிரவேசித்த போராளிகள் மீது மேற்கொண்ட தாக்குதல் கீழ்த்தரமான, கண்டிக்கத்தக்க செயலாகும். சுனாமி அலைகளால் பாதிக்கப்பட்ட மக்களின் பணிகள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்துடன் கலந்தாலோசித்துவிட்டு கிளிநொச்சியிலிருந்து புறப்பட்ட கௌசல்யன் உட்பட மற்றும் போராளிகள் மீது மேற்கொண்ட தாக்குதல் எமது தமிழர் தாயகப் பிரதேசங்களைச் சீர்குலைக்கின்ற ஒரு நடவடிக்கையாகவே நாம் கருதுகிறோம்.

முன்னைய காலங்களில் யுத்தத்தாலும் தற்போது சுனாமியாலும் பாதிக்கப்பட்டுத் தமிழ் மக்கள் அல்லற்பட்டுள்ள இந்த வேளையில், விடுதலைப் புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட கோழைத்தனமான இந்த நடவடிக்கையானது விடுதலைப் புலிகளை யுத்தத்திற்கு மீள இழுப்பதான ஒரு நடவடிக்கையாகவே நாம் கருதுகிறோம். இத்தகைய நிலை தொடராமல் பார்த்துக்கொள்ளவேண்டிய பெரும் பொறுப்பு நடுநிலை வகிக்கும் சம்பந்தப்பட்ட தரப்பினரது கடமையாகும் என்பதனை நாம் உறுதிபடக் கூறவிரும்புகின்றோம்.

### யாழ். மாவட்ட அபிவிருத்தி நலன்புரிச்சங்கம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட 6 விடுதலைப் புலிகளுக்கு அஞ்சலி செலுத்துவதுடன், எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். இதற்குத் துணைபோன அமைப்புகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்தத் துன்பகரமான நிகழ்வு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நடப்பது இது முதற்றடவை அல்ல. இதுபோன்ற பல நிகழ்வுகள், போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 3 வருடகாலப் பகுதிக்குள் பல தடவைகள் நிகழ்ந்துள்ளன.

இச்சம்பவங்களுக்கு மூலகாரணமாக இருப்பவர்கள் இலங்கை அரசும் அதனுடன் துணை போகின்ற சில தமிழ்க் குழுக்களுமே ஆகும் என்பது உலகறிந்த விடயம். இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் நடப்பதற்கு இராணுவமும் துணைபோவதாகவே கருதவேண்டியுள்ளது. எனவே, இலங்கை அரசையும் அதனுடன் துணை போன அமைப்புகளையும் வன்மையாகக் கண்டிப்பதுடன், தொடர்ந்தும் இதுபோன்ற நிகழ்வுகள் நிகழாமல் இருக்க சர்வதேச சமாதான அமைப்புகளும் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படியான சம்பவங்கள் மூலம் மீண்டும் அரசு யுத்தத்தை ஆரம்பிக்க முனைகின்றதா என்ற எண்ணம் வருகின்றது. ஓமந்தையூடாகவரும் செய்தி இராணுவத்திற்குத் தெரியும். அத்துடன், இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் நடந்துள்ளது. ஆகவே, இதன் பொறுப்பை இராணுவமும் அரசும் ஏற்றுக்கொள்ளவேண்டும். இப்படியான நிகழ்வுகள் மூலம் தமிழ்பேசும் மக்களையும் புலிகளையும் அடக்கியாளலாம் என அரசோ, கூலிப்படைக் குழுக்களோ எண்ணினால் மீண்டும யுத்தம் வெடிக்க வழி வகுக்கும் என்பதற்கு ஐயமில்லை.

### காரைநகர் தேசிய எழுச்சிப் பேரவை

ஆழிப்பேரலையின் தாக்கத்தினால் துன்பப்பட்ட மக்களின் துயர்போக்கும் திட்டமிடல் நடவடிக்கைக் கூட்டத்தில் கலந்துவிட்டு மட்டக்களப்பு - அம்பாறை மக்களின் நன் செயற்றிட்டங்களை நிறைவேற்றும் பணிக்காகச் சென்றுகொண்டிருந்த வேளை சிங்கள அரசுக்கு விலைபோன தேசவிரோதக் கும்பலினால் நயவஞ்சகமான முறையில் கொடூரமாகக் கொலைசெய்யப்பட்ட மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யனும் மூன்று புலிப் போராளிகளும் ஒரு பொது மகனும் கொல்லப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தைக் காரைநகர் தேசிய எழுச்சிப் பேரவையினரும் மக்களும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

### தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம்

லெப். கேணல் கௌசல்யன் மீதும் அவருடன் வந்த போராளிகள் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல் கண்டிக்கத்தக்கதோடு, அரசின் கீழ்த்தரமான செயலாகவே அமைகிறது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணப் பணிகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றினை வன்னியிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் தலைமைகளோடு நடத்திவிட்டு நிவாரணப் பணிகளின் முன்னெடுப்புகளோடு மட்டக்களப்பிற்குத் திரும்பிக்கொண்டிருந்த வேளை, இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதுவும் ஆயுதம் இன்றிச் சென்ற போராளிகள் மீதான இத்தாக்குதல் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் திட்டமிட்டுச் செய்யப்பட்ட தாக்குதலாகும்.

இத்தகைய தாக்குதல்கள் கிழக்குப் பிரதேசத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. சமாதானம் என்ற சாயத்தை அனுப்பியவாறு இலங்கை அரசு ஆடுகின்ற கபட நாடகமாகவே இத்தாக்குதல்கள் அமைகின்றன.

இயற்கை அனர்த்தத்தினால் மக்கள் பாதிகக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கு விடுதலைப் புலிகள் முயன்றுகொண்டிருந்த நேரத்தில், அவர்கள் மீது திட்டமிட்டு நடத்தப்பட்ட இத்தாக்குதல் மிகவும் அநியாயமானது.

தமிழ்மக்கள் மீது மீண்டும் ஒரு யுத்தக் கொதிப்பை ஏற்படுத்தும் செயலாகவே இத்தாக்குதல் அமைந்துள்ளது. விடுதலைப் புலிகளின் ஆயுதப் பலத்திற்கு முகங்கொடுக்க முடியாத இலங்கை அரசும் இராணுவமும் சமாதானம் என்ற பொய்த்தளத்தில் நின்றவாறு விடுதலைப் புலிகளையும் தமிழ் மக்களையும் அழிப்பதற்குப் பல வழிகளில் முயன்று வருவது உண்மையே.

இந்த நிலைப்பாட்டின் ஆடுகளமாகக் கிழக்குப் பிரதேசத்தை அரசும் இராணுவமும் பயன்படுத்துகின்றன. கருணா குழுவினர் என்ற போர்வையைத் தனதாக்கிக்கொண்ட இலங்கை இராணுவம், இத்தாக்குதலை நடத்தி வருகின்றது. இந்த நிலை குறித்து மிகுந்த விசனம் அடைகின்றோம்.

ஆயுதம் இன்றி நடமாடுகின்ற விடுதலைப் புலிகள் மீது கருணா குழு என்ற போர்வையோடு இராணுவம் மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும். இந்த நிலை குறித்து மிகுந்த கண்டனத்தைத் தெரிவிக்கின்றோம்.

(3)

# அழிந்த பாடசாலைகளைக் கட்டியெழுப்ப தொண்டு நிறுவனங்களின் ஆதரவு தேவை

## ஆழியவளைப் பாடசாலை அதிபர் உதயனுக்குச் செவ்வி

*செவ்வி கண்டவர்: மு.கந்தசாமி பரந்தன் செய்தியாளர்)*

கடந்த டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி யாராலுமே மறக்கமுடியாத நாள். பல லட்சம் உயிர்களையும், உடைமைகளையும் காவு கொண்ட நாள். சுனாமி என்னும் பெயரில் அழிவுக்கு வித்திட்ட நாள்.

இந்தச் சுனாமியால் பல மாணவச் செல்வங்களைப் பறிகொடுத்ததுடன், பாடசாலைக் கட்டடத்தையும் முற்றாக இழந்த பாடசாலைகள் ஏராளம். அவற்றில் ஒன்று ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை.

இப்பாடசாலை அதிபர் ச.திவ்யராசாவுடனான செவ்வி இங்கு தரப்படுகின்றது.

★ *கேள்வி*: சுனாமி இயற்கையனர்த்தத்தில் உங்கள் பாடசாலை...?

☆ *பதில்*: சுனாமியால் எமது பாடசாலை முற்றாகச் சேதமடைந்துவிட்டது. எமது பாடசாலையில் கல்விகற்ற 33 மாணவர்கள் இந்தச் சுனாமி என்னும் கொடூரத்தில் பலியாகியுள்ளனர்.

இதைவிட 34 மாணவர்கள் காயமடைந்துள்ளனர்; 7 ஆசிரியர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

★ *கேள்வி*: அனர்த்தத்தின் பின்னர் உங்கள் பாடசாலையின் செயற்பாடு பற்றி...?

☆ *பதில்*: 440 மாணவர்கள் கல்வி கற்ற பாடசாலையில் தற்போது 350 மாணவர்கள் கல்விகற்கின்றனர். அனர்த்தத்தில் பாடசாலை சேதமடைந்ததால் மர நிழல்களில் மிகவும் சிரமத்தின் மத்தியிலேயே மாணவர்கள் படிக்கின்றார்கள்.

அனர்த்தத்தினால் சில நாள்களாகப் பிள்ளைகளின் மனதில் விரக்தித் தன்மை காணப்பட்டது. இப்போது அந்த நிலை கொஞ்சம் மாறி, கல்வியிலும் நாட்டம் கொள்கின்றார்கள்.

இந்த மாணவர்களைக் கற்றலில் ஈடுபடுத்த விடுதலைப் புலிகளின் அரசியலதுறையினர், தமிழீழ மாணவர் அமைப்பினர், பெற்றோர்கள் எனப் பலரும் முன்னின்று செயற்படுகின்றனர். மாணவர்களுக்கான சீருடைகள், உபகரணங்கள் என்பனவற்றையும தொண்டு நிறுவனங்கள் வழங்கி வருகின்றன.

ஆயினும், மாணவர்களைத் தொடர்ந்தும் மரநிழலில் படிக்கவிடுவது உகந்ததல்ல. தற்காலிகக் கொட்டகைகளேனும் அமைக்கவேண்டிய தேவையுள்ளது. உதவும் அமைப்புக்கள் இதற்கு முன்வரவேண்டும்.

★ *கேள்வி*: உங்கள் பாடசாலைக்குக் கல்விச் சமூகத்தின் உதவிகள் எவ்வாறுள்ளது?

☆ *பதில்*: மருதங்கேணிக் கல்விக் கோட்டத்திற்குட்பட்டது எமது பாடசாலை. எனவே, கோட்டக்கல்வி அதிகாரியும் ஏனையவர்களும் இணைந்து மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

★ *கேள்வி*: உங்கள் பாடசாலைக் கல்வியின் எதிர்காலம் குறித்து என்ன நினைக்கின்றீர்கள்?

☆ *பதில்*: போரினால் கடந்த 10 வருடங்களாக எமது மாணவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு வந்துள்ளார்கள். பெரும்பாலும் மரநிழல்களிலும், தற்காலிகக் கொட்டகைகளிலும்தான் கல்வி கற்றார்கள். இவ்வாறு பல நூறு பாடசாலைகளும் இயங்கிவந்தன.



ஓரளவு வசதி வாய்ப்புகளை எமது பாடசாலைகள் பெற்றுக் கொள்ளும் ஆரம்பக் கட்டத்திலேயே சுனாமிப் பேரழிவு நடந்திருக்கிறது. இதனால் மீண்டும் மர நிழல்களே தஞ்சமளித்துள்ளன.

விரைவில் இதிலிருந்து மீளுவோம் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. தொண்டு நிறுவனங்கள் எமது நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

*

## ராஜபக்ஷவுக்கு எதிரான வழக்குகள்: மார்ச் 30 முதல் 3 தினங்கள் விசாரணை

குடாநாட்டில் கைதாகி காணாமற்போனவர்கள் தொடர்பாக, கிருஷாந்தி கொலைவழக்கு மரணதண்டனைக் கைதியான லான்ஸ் கோப்ரல் ராஜ பக்ஷவுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள ஐந்து ஆள்கொணர்வு வழக்குகளின் விசாரணை மார்ச்மாதம் 30ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் இடம்பெறவுள்ளது.


ராஜபக்ஷவுக்கு எதிரான ஐந்து வழக்குகளும் யாழ்.மேலதிக நீதிவான திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

இந்த வழக்குகளுக்காக வெலிக்கடைச் சிறையில் இருந்து ராஜபக்ஷ அழைத்துவரப்பட்டிருந்தார். வழக்கில் சாட்சியம் அளிக்க விருப்புபவர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியலை மனுத்தாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எம்.றெமேடியஸ் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இந்த வழக்குகளைத் தொடர்ந்து சில தினங்களுக்கு நடத்துவது தொடர்பாக நீதிவான் மனுதாரர், எதிர்மனுதாரர்களிடம் கேட்டார். இருதரப்பினரும் சம்மதம் அளித்ததை அடுத்து, மார்ச்மாதம் 30 ஆம் திகதி முதல மூன்று தினங்கள் விசாரணையை நடத்த நீதிவான் உத்தரவிட்டார். இந்த வழக்கில் மனுதாரர் சார்பில் சட்டத்தரணி எம்.றெமேடிஸ°ம், எதிர்மனுதாரர்கள் சார்பில் இராணுவ சட்ட ஆலோசகர் குறுாப்பும் அரசசார்பில் சட்டத்தரணி குமுது விக்கிரமசிங்கவும் ஆஜரானார்கள். (3-12)

## நீங்காத நினைவுகளில் ஓராண்டு

மண்ணுலகில் 11 - 01 - 1940



விண்ணுலகில் 23 - 01 - 2004

### அமரர் முருகன் கந்தசாமி

(மெக்கானிக்)

திதி: 10-02-2005

ஆண்டு ஒன்று ஆகிவிட்டாலும்
ஆறவில்லை எம் இதயங்கள் ஈண்டு உங்களை
எண்ணியே தினம் தினம் வருந்துகின்றோம்.

"புஸ்ப நிவாஸ்",
அண்ணா சிலையடி,
கரணவாய், கரவெட்டி.

- குடும்பத்தினர்.

(41726)(26-45)

## ஓராண்டு நினைவுநாள்



### அமரர் பரராசசிங்கம் திருநாவுக்கரசு

(பாதுகாப்பு உத்தியோகத்தர், இலங்கை வங்கி)

மலர்வு 23☆11☆1953

உதிர்வு 23☆01☆2004

திதி: தை பூர்வபட்ச துதியை

ஆண்டொன்று சென்றதுவோ?
அப்பா நின் முகம் மறைந்து
தினம்... தினம் தவிக்கின்றோம்
அப்பா உங்கள் நிழல் இழந்து
மாறாத நின் வதனமதை
நினைத்து நினைத்து உருகுகின்றோம்
நின் பாச அன்பு சிறக்கும் வதனத்தை
நாம் எங்கே இனிக் காண்போம்?

நின் ஆத்மா சாந்திபெற ஆவரங்கால் கொய்வளையம்பதி பர்வதவர்த்தனி சமேத நடராச இராமலிங்கேஸ்வரப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

இன்று (10.02.2005) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள் மற்றும் இலங்கை வங்கி உத்தியோகத்தர்களையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

சந்தை வீதி,
ஆவரங்கால்.

- குடும்பத்தினர்
T.P.:0776184645.

(41867)

## நூல் வெளியீடு

வலி.தெற்கு,பெப்.10

முன்னாள் அதிபரும் தொண்டைமானாறு வெளிக்கள நிலையத் தலைவருமான கே.எஸ். குகதாசன் எழுதிய 'தாவரவியல் மற்றும் பொதுவான சிறப்பியல்புகளுக்குள்ள சில தாவரங்களின் நிரல் - சிறுகுறிப்புகளுடன்' என்னும் நூல் வெளியீடு நாளை வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நூல் ஆய்வுரைகளை யாழ்வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.வரதராசா, பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் சி.குணசீலன் ஆகியோா நிகழ்த்துவர்.

நூலினை யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி சிவசாந்தினி குகதாசன் வெளியிட்டுவைப்பார். (10-152-202)

## மணற்காட்டில் நினைவாலயம்

கரவெட்டி, பெப்.10

சுனாமி இயற்கையனர்த்தத்தில் பலியான பொதுமக்களின் நினைவாக மணற்காட்டில் நினைவாலயம் ஒன்றை அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

வடமராட்சிப் பிரதேச கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகளும் பொதுமக்களும் இணைந்து மேற்படி பிரதேசத்தில் இதனை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். (10-70-202)

## வர்ணப்பூச்சு வேலை

கரவெட்டி, பெப்.10

பருத்தித்துறை வைத்தியசாலையின் சுவர்களுக்கான வர்ணப்பூச்சு வேலைகளை 'கியூ மெடிக்கா' நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் சாம் இராஜசூரியர் பொறுப்பேற்றுள்ளார்.

மேற்படி வைத்தியசாலைச் சுவரின்வர்ணங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதை அவதானித்த பணிப்பாளர் பூச்சு வேலையைப் பொறுப்பேற்றதுடன் அதனைச் செயற்படுத்தவும் தொடங்கியுள்ளார். (10-70-202)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.10

'கியூடெக்' நிறுவனத்தின் பெண்கள் அமைப்பினர் நடத்தும் பெண்கள் உரிமை பற்றிய முழுநாள் கருத்தரங்கு எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு கியூடெக் நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பொறுப்பாளர் திருமதி லலிதா விக்ரர் கேட்டுக்கொண்டுள்ளார். (த-190)

## இருமாடிக் கட்டடம்

தென்மராட்சி,பெப்.10

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இருமாடிகள் கொண்ட வகுப்பறைக் கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இக் கட்டட நிர்மாணத்திற்கான நிதியினை சுவிஸ் அபிவிருத்திச் சபையினர் (S.D.C) வழங்கவுள்ளனர். இக் கட்டடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. (10-117)

## சங்க அங்கத்தவர்களுக்கு கடன் வழங்கல்

தென்மராட்சி, பெப்.10

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் சங்க அங்கத்தவர்கள், பணியாளர்கள் ஆகியோருக்கு கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் அங்கத்தவர்களுக்கு நியாப் திட்டத்தின்கீழ் 50 ஆயிரம் ரூபா வரையும் -

வீடு புனரமைப்பு வேலைகளுக்கு உறுதிப் பிணையுடன் ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபா வரையும் -

சங்கப் பணியாளர்களுக்கு 50 ஆயிரம் ரூபாவும் கடனாக வழங்கப்பட்டு வருகிறது. (10-117)

## ஒருதொகுதி பாடநூல்கள்

தென்மராட்சி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான ஒரு தொகுதி பாடநூல்கள் வந்துள்ளன.

பாடசாலைகளின் அதிபர்கள் சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலகத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கோட்டக் கல்வி அலுவலர் நாசத்தியநாதன் கேட்டுள்ளார். (10-117)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 21 - 05 - 1944



மறைவு 11 - 01 - 2005

எமது குடும்பத் தலைவியான

### திருமதி தங்கரத்தினம் தேவராசா

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த இல்லத்தரசியே!
ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

11-01-2005 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (10-02-2005) வியாழக்கிழமை காலை 5மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வில் கலந்து அமரரின ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நாவலடி,
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

அன்புக் கணவர்
தேவராசா குடும்பத்தினர்.

(41884)(26-45)

## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில் 03-05-1944

விண்ணுலகில் 25-01-2004

திதி: 12-02-2005 (சதுர்த்தி)

### திருமதி இந்திராணி கணேசராசா

ஆண்டொன்று ஆன போதும்
ஆறவில்லை உன் நினைவலைகள்
ஆயிரம் உறவுகளிலிருந்தும்
அம்மா என்றழைக்க
நீங்கள் இல்லையே!
உங்கள் இனிய நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களில்
நீங்காது நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எதிர்வரும் (12-02-2005) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோரை அன்புடன் அழைக்கின்றோம்.

மூளாய், சுழிபுரம்.

- குடும்பத்தினர்.

(41384)(26-45)

## 49 ஆம் நாள் நினைவஞ்சலி



முத்துக்கிருஸ்ணன் அற்புததேவன் | அற்புததேவன் காங்கேசன் | அற்புததேவன் யதீசன் | நல்லையா பிரகலாதன் (கண்ணன்)

கைதேர்ந்த திருத்துநராய்
காலமெல்லாம் எமக்காய்ப்
பணிபுரிவாயென- நாம்
காத்திருந்தவேளையிலே!
வானலையில் வந்த செய்தி
பொய்யாக இருக்காதா? என்று - நாம்
இயற்கைதனை வேண்டிநிற்க
துணைக்காகத் தனயரையும் - உன்
கலையறிந்த கண்ணனுடன்
மறைந்ததுதான் நியாயமா?

உங்கள் நினைவில்:
பணிப்பாளர், பணியாளர்கள்,
அன்பு அச்சகம், கிளிநொச்சி.

(41844)(39-45-26)

# தமிழ்மக்களின் நியாயமான உரிமைகளுக்காகக் குரல்கொடுக்கும் சிங்களப் பெண் ஊடகவியலாளர்

முதல் சந்திப்பிலேயே யாழ்.குடாநாட்டுச் சமூகம் குறித்த அவரது நோக்கு சற்று வித்தியாசமானதொரு கோணத்தில் அமைந்திருப்பதை என்னால் உணரமுடிந்தது. புறத்தோற்றம், குணவியல்பு என்பவற்றினாலன்றி, தூரநோக்குச் சிந்தனை, அதனைத் தனது எழுத்தினூடாக ஏனைய சமூகத்தினருக்கு வெளிப்படுத்த விளையும் ஆர்வம் ஆகிய தன்மைகளால் அவர் சற்று வித்தியாசமான ஒருவர்தான்: அவர் செல்வி சீதாரஞ்சனி.

சிங்கள யுவதியான அவர் ஒரு சுயாதீன ஊடகவியலாளர் எந்தவொரு பத்திரிகை ஊடகத்தையும் சாராத - சுயேட்சையாக பத்திரிக்கைகளுக்கு தமது ஆக்கங்களை வழங்கும் துடிப்புமிக்கதோர் ஊடகவியலாளர் அவர்.

அண்மைக் காலமாக உலக ஊடகத்துறை கண்டுவரும் வேகம் மிக்க பரிணாம வளர்ச்சியின் அலை இந்நாட்டு ஊடகத்துறையிலும் ஓரளவு படிந்து வருவதை அவதானிக்க முடிகிறது. அண்மைக்காலத்தில், நாட்டின் அரசியலரங்கில் நிலவும் அமைதிநிலை காரணமாக, ஊடகவியலாளர் பரிமாற்றத் திட்டமொன்றினூடாக தென்னிலங்கைப் பத்திரிகையாளர்களும் வடபகுதிப் பத்திரிகையாளர்களும் பரஸ்பரம் தததமது பகுதியிலிருந்து ஏனைய பகுதிகளுக்குச் சென்று அப்பகுதிச் சமூகங்களுடன் பழகி, அதன் மூலம் அவ்வப் பகுதிகளின் சமூக பொருளாதாரப் பிரச்சினைகளை வெளிக்கொணரும் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில், யாழ்.குடாநாட்டுப் பத்திரிகை நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் குடாநாட்டின் பல பகுதிகளுக்குச் சென்று பலதரப்பட்ட சமூகத்தினரை சந்தித்து, அவர்களது சமூகம் சார் பிரச்சினைகளின் மையத்தை ஆய்ந்துணர்ந்து, அவை குறித்த தம் அனுபவங்களை தாம் சார்ந்த தென்பகுதிப் பத்திரிகைகளூடாக பொதுமக்களுக்கு வெளிப்படுத்துவதே, அண்மையில் இங்கு வந்திருந்த பத்திரிகையாளர் குழுவின் நோக்கமாக அமைந்திருந்தது. அக்குழுவில் இடம்பெற்றிருந்த ஒரேயொரு சுயாதீன பத்திரிகையாளர் என்பதோடு இவர் ஒருவரே பெண் பத்திகையாளர் என்பதும் குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும்.

நாடு சுதந்திரமடைந்த நாள் முதல் இன்று வரை அரசியல்வாதிகளால் இந்நாட்டின் இனங்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்ட இன, மத, மொழி ரீதியான விரிசல்களே இந்நாட்டின் மும்மொழிப் பத்திரிகைகளும் ஏதோ ஓர் அளவுக்காயினும், பக்கச்சார்புக் கொள்கை அடிப்படையில் இயங்குவதான தோற்றத்துக்கு அடிப்படைக் காரணமாக அமைய நேர்ந்தது.

பக்கச் சார்பற்று, நடுநிலை நின்று செயற்படுதலே பத்திரிகைத் தர்மம் ஒன்றான போதிலும், மேற்சொன்ன சுயலாபநோக்கு அரசியல்வாதிகளின் அரசியல் அணுகுமுறை ஊடாக எழுத்தாளர்கள், விமர்சகர்கள் என்போரின் சிந்தனைகள் மற்றும் பார்வைகள் அவர் தம் எழுத்தினூடாக வெளிப்படுத்தப்படும் வேளையில் இன, மத, மொழியென்ற ஏதோவொரு பக்கச் சார்புத் தன்மையைப் பிரதிபலிப்பதாகவே அமைய நேர்வதற்கு முக்கிய காரணமாகின்றன. அந்த அளவுக்கு நாட்டின் பொதுநோக்கைப் புறம் தள்ளி, கட்சிசார் நலன் நோக்கிலமைந்த அரசியற் செயற்பாடுகள், பத்திரிகைத் துறையின் நடுவு நிலைக் கொள்கைக்கும் குறிப்பிட்ட அளவிலான தாக்கத்தை ஏற்படுத்தி வருவது கடந்த இருபது வருடகால வரலாற்றுப் பதிவுகளாகும்.

தமிழ்ப் பகுதிகளில் கால்பதிக்கும் வேளையில் நாட்டின் இன ஒற்றுமைக்கும், தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் ஆதரவாகக் கருத்து வெளிப்படுத்தும் அரசியல்வாதிகளைப் போன்றே, பெரும்பாலான தென்பகுதி ஊடகத்துறையினரும் கூட தாம் தென்பகுதிக்கு மீண்டதும் மீண்டும் பழையபடி தமது இனவாத, மொழிவாத கருத்துக்களை பெரும்பான்மை இனத்தவர் மத்தியில் வெளியிட்டு வருவதை பல சந்தர்ப்பங்களில் நாம் வாசித்தும் கேட்டும் அனுபவித்துள்ளோம்.

அதேவேளை, இவற்றுக்குப் புறம்பாக, தம் மனதில் எழும் உணர்வுகளை, நாட்டின் பொதுநலன் குறித்த அக்கறை உணர்வுடன், துணிச்சலோடும், நியாயத்தை எடுத்துரைக்கும் தர்க்க ரீதியிலும் எழுத்தினூடாக வெளிப்படுத்தி சமூக சிந்தனையைச் சீர்படுத்த முனையும் உண்மையான ஒரு சில ஊடகத்துறை எழுத்தாளர்களும் பெரும்பான்மைச் சமூகத்தின் மத்தியில் இருக்கவே செய்கின்றனர்.

அந்தவகையில், செல்வி சீதாரஞ்சனியின் எண்ணங்களும், கருத்துக்களும் அவரது எழுத்துக்களினூடாக சிங்கள மக்களை ஒரு சிறிய அளவிலாவது சிந்திக்க வைக்கிறது என்பதால், இவரைச் சற்று வித்தியாசமானதொரு சுயாதீன ஊடகவியலாளர் என அடையாளப்படுத்த முடிகிறது.

அநுராதபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரிடம் சிறு வயது முதலே கலை, இலக்கிய ஆர்வம் அதிகரித்துக் காணப்பட்டதாகத் தெரிகிறது. தனது மாணவப் பருவத்திலேயே கவிதை எழுதுவதில் ஆர்வம் கொண்டிருந்தார் என்பது அந்நாட்டம் காரணமாகப் பாடசாலை மட்டத்திலான பல போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களையும் வென்றெடுத்திருப்பதன் மூலம நிரூபணமாகிறது. அவ்வெற்றிகள் வழங்கிய ஊக்கமே பத்திரிகைகளுக்கும், வானொலி நிகழ்ச்சிகளுக்கும் இவர் அனுப்பிவைத்த ஆக்கங்கள், தகுதிவாய்ந்தவையாகக் கொள்ளப்பட்டு பிரசுரத்துக்கும், ஒலிபரப்புக்கும் ஏற்கப் படக் காரணமாயிற்று.

1979ஆம் ஆண்டில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மாகாண மட்டத்தில் தனது சேவைகளை விரிவுபடுத்தியமையையடுத்து, அவ்வேளையில், பாடசாலையிலிருந்து வெளியேறியிருந்த இவர், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ராஜரட்டை சேவையில் இணைந்து பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றார்.

இந்த வகையில், செய்தி ஊடகத்துறையில் பெற்ற அனுபவம் மற்றும் அத்துறைசார் புத்தி ஜீவிகளுடன் ஏற்பட்ட தொடர்பு என்பவற்றுடன், இயற்கையாகவே இவரிடம் காணபட்ட கலை, இலக்கிய ஆர்வமும் சேர்ந்து 1986இல் 'விபரண' என்ற மாதாந்த சிங்கள மொழிச் சஞ்சிகையில் முழுநேர ஊழியராக கடமையாற்றும் சந்தர்ப்பத்தை இவருக்கு ஏற்படுத்திக்கொடுத்தது.

இதனால், மென்மேலும் ஊக்கமடைந்த இவர் 1988இல் 'சங்குலன' என்ற சஞ்சிகையின் முக்கிய பத்தி எழுத்தாளராக பரிணமித்தார்.

1990இல் 'யுக்திய' என்ற பிரபல சிங்கள மொழி வாராந்தப் பத்திரிகையில் இணைய நேர்ந்தமை இவரது பத்திரிகைத்துறை வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அப்பத்திரிகையில் சமகால இனப் பிரச்சினை தொடர்பான தொடர் கட்டுரைகளை எழுதும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியமை, சிங்கள மக்கள் மத்தியில் அறியப்பட்ட ஊடகவியலாளராக உருவாகும் வாய்பை இவருக்கு ஏற்படுத்திக் கொடுத்தது. இங்கு கடமையாற்றிய வேளையில் பிரபல பத்திரிகைத்துறை ஊடகவியலாளர்களான சுனந்த தேசப்பிரிய மற்றும் அமரதுங்க ஆகியோருடன் இணைந்து வாராந்தப் பதிப்பின் சில பக்கங்களைத் தயாரிக்கும் பொறுப்பேற்றுச் செயற்படக் கிடைத்த வாய்ப்பு பத்திரிகைத் துறையில் தமக்கு பல அனுபவங்களைப் பெற்றுத் தந்ததாக அடக்கத்துடன் தெரிவிக்கின்றார்.

இவற்றுக்குப் புறம்பாக 'யங்ஏசியா' சஞ்சிகையில் வாராவாரம் பிரதி வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இனங்களுக்கிடையேயான சமாதானத்தை வலியுறுத்தும் வகையிலமைந்த கட்டுரைகளைத் தொடராக எழுதி வந்துள்ளார். பரிசாய (அக்கம் பக்கத்தார் Neibourhood) என்ற தலைப்பிலான அக்கட்டுரைத் தொடர் சிங்கள வாசகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. அதேசமயம், தொலைக்காட்சி நிறுவனமொன்றின் 'பிரின்ற் மீடியா' பிரிவில் கடந்த ஆண்டின் இறுதிவரை தொடர்ச்சியாக செய்திப்பங்களிப்பு வழங்கும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது.

அண்மைக் காலமாக சுயாதீன பத்திரிகையாளர் என்ற வகையில் திவயின, ராவய, சிலுமின, ஞாயிறு லங்காதீப ஆகிய பத்திரிகைகளில் இவரது கட்டுரைகள் பல வெளிவருகின்றன.

'கடந்த டிசெம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் யாழ்ப்பாணத்துக்கான எமது பயணத்தை ஆரம்பித்தோம். நானும் என்னுடன்கூட வந்த கொழும்பின் வெவ்வேறு பத்திரிகை நிறுவனங்களில் பணியாற்றும் இளம் பத்திரிகையாளர்கள் மூவரும் கொண்ட எமது குழு யாழ்ப்பாணததில் தங்கியிருந்த வேளையில், யாழ்.குடாநாட்டின் சகல மட்டங்களையும் சேர்ந்த பொதுமக்கள் பலரைச் சந்தித்து அரசியல் நிலைவரம் குறித்த, யுத்தம் இடம்பெற்றகால அனுபவங்கள் மற்றும் போர் நிறுத்தத்தின் பின் குடாநாட்டு மக்களது வாழ்க்கைநிலை, அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், நெருக்கடிகள், போரினால் பாதிக்கப்பட்ட மக்களது சிரமங்கள் என்பன

**வீயெஸ்ரீ**

குறித்துத் தகவல்களைத் தனித்தனியாகத் திரட்டினோம். அத்தகவல்களின் அடிப் படையில் முடிந்தவரை விரைவாக கட்டுரைகளைத் தயார்செய்து மற்றையோர் தாம் தாம் சார்ந்துள்ள பத்திரிகைகளுக்கும், நான் கொழும்பிலிருந்து வெளிவரும் பலதரப்பட்ட சிங்களப் பத்திரிகைகளுக்கும் அனுப்பிவைத்தோம்.

அக்கட்டுரைகள் வாயிலாக, யாழ்.குடாநாட்டில் நிலவும் பின்னடைவுகள், பொதுமக்களது சிரமங்கள், அவலங்கள் என்பவற்றை சம்பந்தப்பட்ட பொதுமக்களை நேரடியாகச் சந்தித்து தகவல்களைத் திரட்டியதன் மூலம் தென்பகுதி மக்களுக்கு யாழ்.குடாநாட்டின் அரசியல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் குறித்து தெளிவாகவும், சரியாகவும் அறிந்து கொள்ள வைபபதாக எமது முயற்சி அமைந்தது. அந்தப் பணியை நாம் சிரமமின்றி மேற்கொள்ள யாழ்.குடாநாட்டின் பல புத்திஜீவிகள், பல பத்திரிகைத் துறையினரின் பேருதவி கிட்டியமையை எம்மால் இலேசில் மறக்க முடியாது. அது மட்டுமன்றி யுத்தம் காரணமாக விதவைகளான யாழ்.குடாநாட்டுப் பெண்கள் சமூகமட்டத்தில் எதிர்நோக்கும் சிரமங்கள் குறித்து பல தரப்பினருடனும் கலந்துரையாடிச் சேகரித்த தகவல்களின் அடிப்படையில 'ராவய' பத்திரிகையில்' நான் எழுதி வெளியான கட்டுரையை தமிழில் மொழி பெயர்த்துப் பிரசுரித்ததன் மூலம் எனது எழுத்துக்களையும், தென்பகுதிப் பத்திரிகையாளர்கள் யாழ்.குடாநாட்டையும் மக்களையும் என்ன கோணத்தில் கணிக்கின்றனர் என்பதை சம்பந்தப்பட்ட யாழ்.குடாநாட்டு மக்களே தெரிந்துகொள்ள வாய்ப்பளித்ததன் மூலம் உதயன் பத்திரிகை நிறுவனம் என்னைக் கௌரவித்துள்ளது'.

இவ்விதம் மனம் திறந்து பேசும் சீதாரஞ்சனி தமக்கு ஓய்வு கிடைக்கும் வேளைகளில் சிங்கள கலை இலக்கியத்துக்குத் தம்மாலான பங்களிப்பை நல்கி வருகிறார் என்பதை அவர் மூலமாகவே கேள்விப்பட்டபோது எந்தவேளையிலும் சுறுசுறுப்பாக இயங்கும் அவரது ஆற்றல் எம்மை ஆச்சரியப்பட வைத்தது.

'காலத்துக்குக் காலம் பலதரப்பட்ட பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றில் பிரசுரமான எனது கவிதைகளைத் தொகுத்து அவ்வப்போது கவிதைத் தொகுப்புக்களாக வெளியிட்டு வருகிறேன். அந்த வகையில் 1986 - 1996 ஆகியவற்றுக்கு இடைப்பட்ட இப்பத்தாண்டுகள் கால இடைவெளியில் எனது ஏழு கணிப்பு என்பவற்றுக்கெதிராக எனது பேனாவின் துணைகொண்டு போராடி வெல்வேன். அநியாயத்தைச் சாடி, நியாயத்தைச் சுட்டிக் காட்டி சமூக சீர்திருத்தத்துக்கு என்னாலான பங்களிப்பை நல்க நான் உயிர் வாழ்ந்தேயாக வேண்டுமென்ற மனத்திடத்தோடு வாழ்க்கையில் எதிர்நீச்சல்போட்டு, நோய்க்கான சிகிச்சை பெற்றுப் புதுப்பிறவி எடுத்துள்ளேன். குடும்பம் என்ற பந்தத்தில் என்னை இணைத்துக் கொள்ளாது இவ்வித சமூக மறுமலர்ச்சி நோக்கில் பத்திரிகைத் துறையில் உண்மையுடனும் நேர்மையுடனும் செயற்படுவதில் நான் மனநிறைவு காண்கிறேன்'' எனச் சீதாரஞ்சனி கூறிமுடித்தார். தனியொரு பெண்ணாகத் தனித்து நின்று துணிச்சலுடன் பத்திரிகைத்துறையில் சாதனை நிகழ்த்திவரும் அப்பெண்மணியின் தன்னம்பிக்கை எனக்கு மலைப்பை ஏற்படுத்தியிருக்கிறதல்லவா? ☆

---



## திலகம்

தொகுப்பு: மங்கை

---

### கண்ணீர்க் கலசங்கள்

பெண்ணென்ற
போர்வைக்குள்
போஷிக்கப்பட்ட
பொறுமைகள்

ஆண்களின்
ஆதிக்கத்தில்
அடங்கிப்போன
ஆசைகள்

சீதனத்தின்
சிறுமையிலே
சிதறிப்போன
சிந்தனைகள்

பேதமையின்
உச்சத்திலே
பெட்டிக்குள்
பெறுமதிகள்

சாலகத்தின்
சதுக்கத்தில்
சங்கமித்த
பெண்மை

ஊமையின்
உதறலாய்
உள்ளிருக்கும்
குமுறல்கள்

அத்தனைக்கும்
நாவிருந்தால்
கடவுளும்
கண்ணீரில்

நிமமி.

---



## சந்தியாவின் கடிதங்கள்

பிரியமுள்ள பிரியாவிற்கு,

உன்கடிதம் கண்டேன் உன் உள்ளத்து வேதனைகளை என்னால் புரிந்துகொள்ள முடிகின்றது. ஆறுதல் சொல்வதன் மூலம் ஆறக்கூடிய வடுவல்ல இந்த வேதனை.

அந்த சோகத்தின், அழிவின் நிலையிலிருந்து விரைவில் மீண்டுவிட முடியாது தான். ஆனால் மீளமுடியவில்லை என்று மட்டும் சொல்லிக்கொண்டு இருந்தால் காலம் தான் கடந்துவிடும்.

இதற்கெல்லாம் ஒரு தீர்வு அன்பு மட்டுமே. இதை வார்த்தைகளால் தெளிவுபடுத்தி விட முடியாது. மனித உறவுகளிலே இது மிக முக்கியமானது. அன்பைக் காட்டும் போதும் அன்பைப் பெறும்போதும் அது நம் ஆழ் மனதைத் தொடுகின்றது; உயர்த்துகின்றது.

அநாதைக் குழந்தைகளுக்குச் சாப்பாடு கொடுத்துப் படிப்பிப்பது கடவுளுக்குத் தொண்டு செய்வதை விட உயர்ந்த பலனைத் தரவல்லது.

பிறர் நலன் பேணுதல் என்பது அன்பின் வெளிப்பாடு. எந்தச் சுயநலமும் இல்லாது மனித உறவைப் பலப்படுத்தும் உன்னத செயல் பிறர் நலன் பேணுதல்.

இன்றைய சூழலில் தேவைப்படுவது இந்த அன்பே.

மனித சமுதாயத்தில் நம் எல்லோருக்குமிடையே ஓர் உறவு இருக்கிறது. அது கண்ணுக்குத் தெரியாத உறவு. அதை நாம் புரிந்து கொண்டால் நம் உறவுகளைத் துன்புற அனுமதிப்போமா?

இருக்கிறவர்கள் இல்லாதவர்களுக்குக் கொடுக்கும் போதும் அன்பு பெருகி உறவுகளைப் பிணைக்கின்றது.

எனவே, ஒவ்வொருவரும் பாதிக்கப்பட்ட ஒருவருக்கேனும் ஏதேனும் வழியில் உதவிசெய்ய முன்வந்தால் நிச்சயம் பாதிப்பிலிருந்து நம் உறவுகளை நம்மால் மீட்டெடுக்க முடியும்.

இன்னுமொரு விடயத்தையும் இக்கடிதத்தில் எழுத நினைக்கின்றேன். உதவி என்ற பெயரில் அழிக்க நினைக்கின்றவர்களும் நம் மத்தியில் உள்ளார்கள். அவதானத்துடன் நாம் செயற்பட வேண்டும்.

உதாரணமாக அண்மைக்காலப் பத்திரிகைச் செய்திகளில் தத்தெடுப்பதாகக் கூறிப் பிள்ளைகளை தகாத வழிகளில் ஈடுபடுத்தும் நபர்களைப் பற்றியும் தெரியவருகின்றது.

எனவே, நாம் அறிந்த அநாதைச் சிறுவர்கள் இவ்வாறான நிலைக்கு ஆளாகாமல் தடுப்பதும் நம் கடமை. பிள்ளைகளைத் தத்தெடுக்க யாராவது முன்வரும் பட்சத்தில் அவ்வாறானவர்களை உரிய முறைப்படி சம்பந்தப்பட்டவர்களின் ஆலோசனை பெறச் செய்தல் வேண்டும்.

மோசடிக்காரர்கள் என அபிப்பிராயம் தோன்றினால் உடனேயே பொறுப்பானவர்களிடம் இது தொடர்பாக அறிவிக்க வேண்டும்.

இவற்றை விட அநாதைகளாக வாழும் பிள்ளைகளை சிறந்த குழந்தைகள் காப்பகத்தைத் தெரிவு செய்து அவற்றில் இணைத்து விடுவது அக் குழந்தைகளுக்குப் பாதுகாப்பானதாக அமையும்.


எனவே, பிரியா நாம் ஒவ்வொருவரும் இவ்வாறான குழந்தைகள் மட்டில் அக்கறை கொள்வோம்.

10. 02. 2005

பிரியமுடன் சந்தியா.

# அந்தியேட்டி அழைப்பு

உதிப்பு 08 - 09 - 1917



உதிர்வு 12 - 01 - 2005

## அமரர் மூத்ததம்பி குலவீரசிங்கம்

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (11-02-2005) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு நடைபெறும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.

\- குடும்பத்தினர்.

(சி-40875)(26-14-19)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ மலர்வு 10 - 07 - 1930



நெஞ்சம் நெகிழ உதிர்வு 03 - 02 - 2003

## அமரர் தம்பிராசா மாணிக்கம்

அன்பின் திருவுருவாய் எம்முடன் கலந்திருந்து
அணையாத ஒளிவிளக்காய் ஒளிவீசி - பாசத்தின்
பிறப்பிடமாய் மலர்ந்திருந்து பண்பின் உயர்விடமாய் வாழ்ந்திருந்து
இறைவனடி எய்திய எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள்
பிரிந்து ஈராண்டுகள் ஆனாலும் ஆறாது அம்மா எம் துயர்!

'மாணிக்க இல்லம்',
அன்னங்கை,
கோண்டாவில் வடக்கு.

உம் பிரிவால் தவிக்கும்:
பிள்ளைகள்.

(41891)(26-14-19)

# முறைசாராப் பிரிவின் கண்காட்சி

தென்மராட்சி,பெப்.10

தென்மராட்சி கல்வி வலய முறைசாராக் கல வித் திட்டத்தின்கீழ் வரணி மகாவித்தியால யத்தில் கடந்த வருடம் நடத்தப்பட்ட பயிற்சி நெறிகளில் கலந்துகொண்ட யுவதிகளினால் தயாரிக்கப்பட்ட பொருள்களின் கண்காட்சி கடநத திங்கட்கிழமை நடைபெற்றது.

வரணி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இக்கண்காட்சியினை வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா நாடா வெட்டி ஆரம்பித்துவைத்தார்.

வலயக் கல்வி அலுவலக உதவிக் கல் விப் பணிப்பாளர் (முறைசாராப் பிரிவு) தா.பால சுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ் வில் வித்தியாலய அதிபர் செ.சுப்பிரமணியம் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

உடை அமைத்தல், சிகை அலங்கரிப்பு, தட்டச்சும் சுருக்கெழுத்தும் ஆகிய பயிற்சி நெறியில் பங்குபற்றியவர்களுக்குச் சான்றிதழ் களும் வழங்கப்பட்டன.

(3-117)

# மக்கள் குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.10

கியூடெக் நிறுவனத்தின் தீவக உயிர்ப்பூட் டல் குழுவினருக்கான மக்கள் குழுக்கூட்டம் ஏதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை முற் பகல் 10 மணிக்கு தம்பாட்டி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு அனலைதீவு, எழுவை தீவு, மெலிஞ்சிமுனை, தம்பாட்டி, காரைநகர் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த குழுக்கள் அழைக்கப்பட்டுள்ளன. (3-190)

# செயற்றிட்ட மதிப்பீடு

வலிகாமம்தெற்கு,பெப்.10

2004ஆம் ஆண்டு யுனிசெவ் ஸ்தாபனத் தின் அனுசரணையுடன் 8ஆம் தர மாணவர் கள் கணிதம், தமிழ் ஆகிய பாடங்களில் செயற்றிட்டத்தில் பங்குபற்றிய மாணவர்களுக் கான இறுதி மதிப்பீடு நாளைமறுதினம் சனிக் கிழமை நடத்தப்பட வேண்டும் என வலிகாமம் வலய கணிதபாட உதவிக் கல்விப் பணிப் பாளர் எஸ்.சுகுமார் தெரிவித்துள்ளார்.

மதிப்பீட்டுக்கான வினாத்தாள்களை நாளை கோட்ட அலுவலகங்களில் பெற்றுக்கொள்ள லாம் எனவும், மதிப்பீடு செய்து ஒருவாரத் தினுள் பகுப்பாய்வுகள் செய்யப்பட்டு, வலயக் காரியாலயத்தில் ஒப்படைக்கவேண்டும் என வும் அவர் கேட்டுள்ளார்.

(3-152)

# வெலிக்கந்தைத் தாக்குதலால் சமாதானத்துக்குப் பாதிப்பு

## ஐக்கிய தேசியக் கட்சி கருத்து

விடுதலைப் புலி உறுப்பினர்களைக் குறிவைத்துத் திட்டமிட்டுக் கொன்றொழிப்பது சமாதானத்தைப் பாதிக்கும் எனத் தெரிவித்துள்ளார் ஐ.தே.கட்சியின் எம்.பியான டாக்டர் ராஜித சேனாரத்ன.

விடுதலைப் புலிகளின் மட்டு.- அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இ.கௌசல்யன, அரச கட்டுப்பாடடுப் பகுதியில் வைத்து சுடப்பட்டுப் பலியானார். அது தொடர்பில் ராஜித எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-


கௌசல்யன் புலிகளின் சிரேஷ்ட அரசியல் பொறுப்பாளர். அவர்மீது தாக்குதல் நடத்தப்பட்ட சமயம் அவர் நிராயுதபாணியாகவே இருந்துள்ளார்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பிரவேசிக்கும் புலி உறுப்பினர்களுக்கு இராணுவம் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். புலிகளும் இதனை அனுசரித்தே நடந்துகொள்ளவேண்டும்.

இப்படி விடுதலைப் புலிகளை - அதுவும் ஒரு பிரதேசத்தின் அரசி யல் பிரிவின் பொறுப்பாளரை - கொன்றொழிப்பது யுத்த நிறுத்தத்தை யும், சமாதானத்தையும் பாதிக்கும். எனவே, இத்தகைய செயல்களிலிருந்து விடுபட்டு, சமாதானத்தை முன்நகர்த்தும் பணிகளிலும், வழிகளிலும் செயற்பட வேண்டும். - இவ்வாறு அவர் தெரிவித்தார். (க-3)

# 47ஆவது நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 21 - 04 - 1969



ஆழியின் பிடியில் 26 - 12 - 2004

கடந்த 26.12.2004 கீரிமலையில் அகாலமரணமடைந்த

## அமரர் பீஸ்மன் ராம்குமார்

(கணித ஆசிரியர், யா/இராமநாதன் கல்லூரி)

சுனாமியின் அகோரப்பிடியில் அல்லலுற்று
அமரராகி விட்ட விலை மதிக்க முடியாத
எங்கள் அன்புத் தெய்வமே!
நிலை தடுமாறியே நித்தமும்
நாம் தவிக்கின்றோம்.

இந்நாளில் இறப்பெய்திய அனைத்து ஆத்மாக்களும் சாந்தி அடை யப் பிரார்த்திக்கின்றோம். அனைவரையும் இன்று நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகின்றோம். (41896)(46-14-19-26)

132, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

மனைவி, மகள், தாய்,
தந்தை, உற்றார், உறவினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணின் மகளாக — விண்ணின் புகழாக

06. 03. 1927 — 11. 01. 2005



## திருவாட்டி நல்லம்மா கணேஸ்

11.01.2005 அன்று காலமான எமது குடும்பத்தலை வியின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பது டன் இன்று (10.02.2005) வியாழக்கிழமை முற்பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரையும் அன்புடன் அழைக்கிறோம்.

திதி வெண்பா

மாட்சி மிகு தாரண மார்கழி இருபத்தேழுதனில்
ஆட்சி நிறை வளர்பிறை துதியையில் பிடாரியவள்
திருவடியே தஞ்சமென கணேஸ் நல்லம்மாள்
உருப்பெற்றாளோ சிவத்தோடு உமையாக.

நல்லம்மா என நாமங்கொள் நற்குணவதியே
சொல்லம்மா நீ எங்கு சென்றாய் நாமறியோம் - எமை
கொல்லாமல் கொல்கின்றதே உன் பிரிவு - எங்கும்
நில்லாமல் வந்திடுவாய் இக்கணமே

கள்ளமில்லா உள்ளங்கொண்ட வள்ளல் நீ
எள்ளளவும் கோபமறியா உள்ளமுனதே - தாயே
முள்ளெனவே குத்துகின்றதே உன்பிரிவு அணை கடந்த
வெள்ளமென பாய்ந்து வருவாய் எம்மிடமே

முப்பதோடு ஒன்று தான் போயிற்று நாளதாய்- நாம்
எப்போது காண்போம் அம்மா உன் முகம்
செப்படி வித்தை தானே வாழ்க்கை அது - நீ
தப்பாமல் சார்ந்திடுவாய் அம்மனடி.

பிடாரி அம்மன் கோவிலடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

\-குடும்பத்தினர்.

(41869)

# சுனாமிப் பேரழிவை அரசோ எதிர்க்கட்சியோ தேசியப் பிரச்சினையாகக் கருதவில்லை

## பவ்ரல் இணைப்பாளர் கண்டனம்

கொழும்பு,பெப்.10

சுனாமியால் ஏற்பட்ட பேரழிவுகளை ஒரு தேசியப் பிரச்சினையாகவோ அல்லது மனிதாபிமானப் பிரச்சினையாகவோ இலங்கை அரசு கருதுவதாகத் தெரியவில்லை. அதே விதமாகவே எதிர்க்கட்சியும் நடந்துகொள்கின்றது.

- இவ்வாறு யாழ். மாவட்ட பவ்ரல் அமைப்பின் இணைப்பாளர் சி.நிர்மானுஜன் தெரிவித்தார்.

அதிகாரப்பகிர்விற்கான தீர்வை மேம்படுத்துவதற்கான அமைப்புகளின் ஒன்றியத்தினால் கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிசெய்வது சம்பந்தமான கலந்துரையாடல் கொழும்பு சுமித்திரயோ பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பின் உறுப்பினர் சேனக்கா தலைமையில் இந் நிகழ்ச்சி இடம்பெற்றது.

அங்கு நிர்மானுஜன் மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு முதல் இரு நாள்களிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இராணுவமும் பாதிக்கப்பட்ட இராணுவத்திற்கு மக்களும் உதவிசெய்யும் நிலைமையே காணப்பட்டது. இதேநேரம் தென்பகுதியைச் சேர்ந்த சிங்கள இராணுவ வீரர்களுக்குப் புலிகள் தங்களின் கைத்தொலைபேசிகளைக் கொடுத்துத் தென்பகுதியில் உள்ள உறவினர்களுடன் தொடர்பு கொள்ளவும் உதவிசெய்துள்ளார்கள்.

ஆளுங்கட்சி கூறுகின்றது சுனாமி அனர்த்தம் சம்பந்தமாக எதிர்க்கட்சி ஒத்துழைக்கவில்லையென்று. எதிர்க்கட்சி தன்னுடைய எதிர்கால அரசியல் நலனைக் கொண்டு ஆளும் கட்சி செயற்படுகின்றதே தவிர, சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்யவில்லையெனவும் ஆளுக்கு ஆள் குற்றஞ்சாட்டும் நிகழ்வே அரசியலில் இடம்பெற்றுக்கொண்டு இருக்கின்றது.

சுனாமிப் பிரச்சினையை ஒரு தேசியப் பிரச்சினையாகவோ அன்றி மனிதாபிமானப் பிரச்சினையாகவோ இவர்கள் கருத்தில் கொள்ளவில்லை. யாழ்ப்பாணத்தில் புலிகள், இராணுவம், மக்கள் அனைவரும் இணைந்தே முதல் இரு நாள்களிலும் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளைச் செய்தார்கள். மனிதாபிமான அடிப்படையில் எங்கிருந்து திடீரென இராணுவத்தினருக்குக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டதோ தெரியாது. திடீரென இராணுவத்தினர் மனிதாபிமானப் பணிகளை விடுத்து, பாதிக்கப்பட்ட மக்களுடைய உடைந்த மற்றும் கைவிடப்பட்ட வீடுகளின் பொருள்களை எடுத்துக் காவலரண்களைக் கட்டும் பணியில் ஈடுபடத் தொடங்கினார்கள்.

இராணுவத்தினர் தமது காவலரண்களைக்கூட முன்னர் இருந்ததிலும் பார்க்கப் பலமாகவும், அத்துடன் மேலும் பல நிலப்பரப்புகளைப் பிடித்தும் காவலரண்களை அமைக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இராணுவத்தினர் கடற்கரையோரங்களில் தமது காவலரண்களுக்குப் பாதுகாப்பாகக் கடலில் போட்ட முட்கம்பிகளே யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் அதிகளவில் சுனாமி அனர்த்தத்தினால் மரணமடைவதற்குக் காரணமாக இருந்துள்ளன.

பொதுவாகப் பொதுமக்கள் எப்பொழுதும், அதாவது செயற்கை அனர்த்தமாக இருந்தாலும் சரி இயற்கை அனர்த்தமாக இருந்தாலும் சரி இராணுவத்தினரின் முட்கம்பிகளில் சிக்குண்டே ஒன்றும் அறியாத பொதுமக்கள் அதிகமாக மரணங்களைத் தழுவிக்கொண்டுள்ளார்கள்.

இராணுவம் மீண்டும் யாழ். குடாநாட்டு மக்களிடம், குறிப்பாக கடற்றொழிலாளர்களிடம் கடலுக்குச் செல்வதாக இருந்தால் தமது அனுமதி அட்டைகளைக் கொண்டுவர வேண்டும் என வலியுறுத்தித் தொழிலுக்குச் செல்ல விடாமல் தடைசெய்துவருகின்றது.

இராணுவமே தன்னிடம் இருந்த கடற்றொழிலாளர்களின் கடல் அனுமதிக்கு வழங்கப்பட்ட ஆவணங்களின் பிரதிகளைக் கடல் அனர்த்தத்தின் போது கைவிட்டுச் சென்றுவிட்டு உடுத்த உடைகூட இல்லாது வீடுகள், சொத்துக்களைக் கைவிட்டுச்சென்ற மக்களிடம் கடற்றொழிலுக்கான அனுமதி அட்டைகளைக் கொண்டு வரும்படி கோருவது எவ்வளவு தூரம் நியாயமானது என்பதையிட்டுச் சிந்திக்க வேண்டும் - இவ்வாறு அவர் கூறினார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மொனறாகலை ஆகிய மாவட்டங்களைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களின் பிரதிநிதிகளும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (86)

# தனியார் போக்குவரத்து ஊழியருக்கும் சேமலாப நிதிவழங்குவதற்கு ஏற்பாடு

தனியார் போக்குவரத்துச் சங்க ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியினை வழங்குவதுடன் அவர்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பப் பல்வேறு திட்டங்களையும் முன்னெடுக்கவுள்ளோம்.

- இவ்வாறு தெரிவித்தார் இலங்கை பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்தினா.

சுன்னாகம் தனியார் பஸ் தரிப்பு நிலையக் கட்டடத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தனியார் பஸ் சேவையினைப் பொறுத்தமட்டில் யாழ்ப்பாணத்தில் சுமுகமாக இடம் பெற்றுவருகின்றது.

அதற்கு இங்குள்ள நிர்வாகக் கட்டமைப்பு முக்கிய காரணமாக விளங்குகின்றது. இந்த நிர்வாகக் கட்டமைப்பின் மூலம் தொடர்ந்தும் தனியார் பஸ்சேவை உரிமையாளர்களை மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும்.



இதனைவிட, யாழ். மாவட்டத் தனியார் போக்குவரத்துப் பிரிவினருக்குத் தனியான பெற்றோல் நிரப்பு நிலையமொன்றினை அமைக்கவுள்ளோம். அதற்கான அனுமதியினை அமைச்சரவையும் வழங்கியுள்ளது. நாட்டில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் இதனை அமைப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

பெரும்பாலும் மார்ச் மாத இறுதிப்பகுதியில் இந்தப் பெற்றோல் நிலையம் அமைக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. எனக்கு இன, மத வேறுபாடுகள் தெரியாது. ஆகையால், யாழ். மாவட்டத்தில் தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கத்தினர் வளர்ச்சிக்கு என்னால் முடிந்த உதவிகளை வழங்கவுள்ளேன் - என்றார். (ப-13)




# மனித வாழ்வின் இரகசியத்தை வெளிப்படுத்தியவர் விவேகானந்தர்



யாழ்ப்பாணம்,பெப்.10

மானிட வாழ்வின் இரகசியத்தை வெளியில் எடுத்துக்காட்டியவர் சுவாமி விவேகானந்தர்.

ஸ்ரீராமகிருஷ்ண சேவாச்சிரமம் (இலங்கை) நடத்திய வீரத்துறவி சுவாமி விவேகானந்தர் ஜெயந்தி விழாவில் தேசிய யாழ். இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் சிவமகாலிங்கம் இவ்வாறு கூறினார்.

யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் சேவாச்சிரமத்தின் உபதலைவர் செ.செல்வராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் சிவமகாலிங்கம் தொடர்ந்து பேசும்போது-

பரதேசிகளின் மதம் என்று மேற்குலகம் எமது சமயத்தை எள்ளி நகைத்தபோது எமது மதத்தின் ஞானப்புதையல்களை வெளியில் எடுத்துக்காட்டிய அவர், இளம் சந்ததியினருக்கு உறுதியும் திடமும் கொண்டவர்களே இந்தியாவுக்குத் தேவை என்பதை வலியுறுத்தியதுடன், மக்கள் துன்பப்படும்போது அவர்களின் துயரங்களில் பங்கெடுக்கும் மனித தத்துவம் அனைவருக்கும் தேவை எனவும் வலியுறுத்தினார்.

எமது சமயத்திற்குப் புத்துயிரூட்டி புதிய வடிவம் கொடுத்து உலகம் முழுவதும் இந்து சமயத்தின் பெருமையைப் பரப்பிய அவர், சிககாக்கோவில் சமய மாநாட்டில் கலந்தும் மேற்கு நாடுகள் பலவற்றிற்குச் சென்றும் அதன் கோட்பாடுகள், மனித வாழ்வின் உன்னதம் என்பதைத தெளிவுபடுத்தினார் என்று கூறினார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பேசும்போது-

ஞானம் என்பதை எல்லாவகையிலும் எந்த நிலையிலும் பெறவேண்டும். ஞானமுடைய கல்வி வேண்டும் என ஔவையாரும் கசடறக கற்று அதற்கமைய நிற்கவேண்டும் என வள்ளுவரும் கூடச் சொல்லியுள்ளார்கள். நல்ல ஆரோக்கியமான வாழ்வைக் கொடுப்பது உடற்பயிற்சிகளே. யோகாசனம் மூலம் அதனைப் பெறமுடியும். துறவு வாழ்க்கையில் புகழுடன் விளங்கியவர் விவேகானந்தர். அவரது வழிகாட்டல்களூடாக நாட்டுமக்கள் நன்கு பயன் பெறமுடியும் என்று கூறினார்.

யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை விரிவுரையாளர் ஸ்ரீபதி சர்மா, கிருஷ்ணானந்த சர்மா மற்றும் பலர் பேசினர்.

யோகாசனப் பயிற்சியை முடித்துக்கொண்ட கொக்குவில் ஸ்ரீராமகிருஷ்ண வித்தியாலய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் நல்லை ஆதீன முதல்வரால் வழங்கப்பட்டன.

"எழுந்திரு விழித்துக்கொள்" கண்காட்சியும் கருத்தரங்கும் இடம்பெற்றன. (ப-111)

# பாடசாலையை அடையும் போதே மாணவர்கள் மாறுதலைக் காண்கிறார்கள்

பிள்ளைகள் வீடு என்னும் சிறிய கூட்டிற்குள்ளேயும் குடும்ப உறவு என்னும் குறுகிய வட்டத்திற்குள்ளேயும் இதுவரை வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள். அங்கு தாம் காணும் - அனுபவிக்கும் - செயற்பாடுகளே மேலானது என இருந்தவர்கள் பின்னர் அவர்கள் பாடசாலையை அடையும் போதே சில மாறுதல்களைச் சந்திக்க நேரிடுகின்றது. அம்மாறுதல்களிடையே பிள்ளைகளின் மனப்பதிவுகளைச் சீர்செய்து சமூகப் பொருத்தப்பாட்டு நிலையை அடையச் செய்ய வேண்டியது அனைவரினதும் கடமையாகும்.

இவ்வாறு நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெற்ற தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய தீவக கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் பி.திருஞானக் சீலன் தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் கோ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற விழாவில் ஆசிரிய ஆலோசகர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

பெற்றோர்களும் ஆசிரியர்களும் பிள்ளையின் சகல செயற்பாடுகளையும் கவனமாக அவதானித்து, ஏசுதல், சினங்கொள்ளுதல் போன்றவற்றைத் தவிர்த்து அர்ப்பணிப்பு மனப்பாங்குடன தமது கடமைகளைச் செவ்வனே செய்தல் வேண்டும். இதன் மூலம் பிள்ளைகளின் மனங்களில் தமக்கு உதவுவதற்கு பலர் உள்ளனர் என்ற நம்பிக்கை ஏற்படும். அதன் மூலம் சமூகப் பொருத்தப்பாடுள்ள - பிறரை நேசிக்கின்ற - மனப்பாங்கு உள்ளவர்களை நாம் எதிர்பார்க்க முடியும் - என்றார்.

விழா ஏற்புரையினை நிகழ்த்திய ஆசிரியை த.தயாநிதி, 5 வருடங்கள் வீட்டோடு மட்டும் விருப்பம் கொண்டிருந்தவர்கள் இன்று பாடசாலையில் கால் பதித்துள்ளனர். பல்வேறு வயதுக் குழுவினரை சந்தித்து அவர்களுடனும் உறவாட வேண்டியவர்களாகின்றனர். இதன் மூலம புதிய கருத்துக்களை - செயற்பாடுகளை - கற்றுக கொள்கின்றனர். காலப்போக்கில் தம்மையும் தமது செயற்பாடுகளையும் வளர்த்துக் கொள்வர். இதனோடு, ஒட்டிய செயற்பாடுகளுக்குப் பெற்றோர் துணைபுரிய வேண்டும் - என்றார்.

இவ்விழாவில் ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் க.கோவிந்தபிள்ளை கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டார்.

(ப-112)

# கடற்றொழில் நவீனமாக்கப்படுவதில் சகலரும் உறுதியாகவுள்ளனர்

## வடமராட்சி சமாசச் செயலாளர் தெரிவிப்பு

குடத்தனை,பெப்.10

சுனாமி அழிவின் பின் எமது கடற்றொழில் நவீன மயப்படுத்தப்பட வேண்டும் என்பதிலேயே எமது சமாசமும் எம்மோடு சேர்ந்த திணைக்களங்களும் உறுதியாக நிற்கின்றன என்று தெரிவித்தார் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசச் செயலாளர் சூரிய குமார்.

'கியூமெடிக்கா' நிறுவனத்தால் வழங்கப்பட்ட 15 படகுகளைக் கையளிக்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. அந்த நிகழ்விற்குத் தலைமை தாங்கிப் பேசுகையிலேயே அவா இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றுகையில், தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய படகுகளிலேயே மீன்பிடி வேலைகள் நடைபெறுகின்றன. எமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் அப்படியில்லை. நாங்கள் 50 வருடங்களிற்கு மேற்பட்ட கட்டுமரங்களில் நாம் வேலை செய்கிறோம் இங்கு எத்தனையோ நிறுவனங்கள் வந்தபோதிலும் எமது தொழிலை மேம்படுத்துவதற்கு 'கியூமெடிக்கா' நிறுவனமே முன்னுதாரணமாகத் திகழ்ந்துள்ளது என்று கூறினார்.

அதனைத் தொடர்ந்து அங்கு சிறப்புரை ஆற்றியவர்களில் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி உரையாற்றுகையில்-

சிறிலங்கா இராணுவத்தினர் எம்மீது யுத்தத்தைத் திணித்தபோது அதிக அளவில் பாதிக்கப்பட்டவர்கள் கடற்றொழிலாளர்களே. இன்று சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களும் அவர்களே. எமது பிரதேசம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அதேவேளையில், சுனாமியாலும் பாதிக்கப்பட்டுள்ளது - என்று கூறினார் அங்கு பலரும் உரையாற்றினர். (ப-78)

# சுனாமி பாதித்தவர்களின் மனநிலையை புரிந்துகொண்டு செயற்படவேண்டும்



நல்லூர்,பெப்.10

சுனாமி ஆழிப்பேரலையின் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் மனநிலையைப் புரிந்து கொண்டு செயற்படவேண்டும்.

- இவ்வாறு யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதன் கூறினார். சுனாமி அனர்த்தத்தினால் உயிர் நீத்த உறவுகளின் நினைவு அஞ்சலி நிகழ்வுகள் யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன.

கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் மேலும் பேசும்போது கூறியதாவது:-

சிறுவர்கள், பெரியவர்கள் என இன, மத, மொழி பேதமின்றி எமது மக்கள் இந்தப் பேரலையில் சிக்கி உயிரிழந்துள்ளனர். தமது உறவுகளை இழந்த மக்கள் வாழ்க்கைக்கான வளங்களை இழந்துள்ளதுடன், பெரும்பாலானவர்கள் உளப்பாதிப்புக்கும் இலக்காகியுள்ளனர். இவர்களின் எதிர்காலம் இருண்டுபோயுள்ளது.

இந்த இருள்களில் இருந்து மக்களை மீட்டெடுக்கவும் சிறுவர்களுக்கான கல்வியை வழங்குவதற்குமான நடவடிக்கைகள் முக்கிய தேவையாகும். ஆசிரியர்களைப் பொறுத்தவரை உன்னதமான கடமை ஒன்று அவர்களை எதிர்நோக்கியுள்ளது. கற்றல், கற்பித்தல் கடமைகளை - செயற்பாடுகளை - பிள்ளைகளுக்கு உதவக்கூடிய வகையில் விரக்தி நிலையில் இருந்து அவர்களைப் பாதுகாக்கும் வகையில் மேற்கொள்ள வேண்டியது ஒவ்வோர் ஆசிரியர்களினதும் கடமையாகும். மாணவர்களை மகிழ்ச்சிப்படுத்தும் வகையில் ஆசிரியர்கள் தமது பொறுப்புக்களைப் புரிந்துகொண்டு தமது பணிகளை முன்னெடுக்கவேண்டும் - என்றார்.

உயிர்நீத்த உறவுகளின் நினைவாகத் தீபங்கள் ஏற்றப்பட்டு இருண்டு விட்ட இதயங்களுக்கு ஒளிகொடுப்போம் என்னும் தொனிப் பொருளில் கல்லூரி மாணவர்கள் அனைவரும் இணைந்து கொண்ட அரங்காற்றுகை நிகழ்வும் இடம்பெற்றது. (ப-111)

## Christian Aid
**(an UK - based NGO) is Seeking to recruit for its Office in Jaffna.**

I Admin/Finance Officer and
I Emergency Support Officer

Qualification and Experience:
- Fluent in English (Written and Spoken)
- Excellent Computer skills (at Least Excel and Word)
- Working Experience in similar Positions, Preferble in social work or NGOs.

Candidates should send Curriculum Vitae in English to
*Christian Aid 17, Kandy Road, Jaffna.*
Closing date: Wednesday 16 February.
Only short listed applicants will be contacted. (41921)(26)


## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 05 - 09 - 1935 மறைவு 21 - 02 - 2004

**திருமதி பரமேஸ்வரி தம்பையா**

(3ஆம் வட்டாரம் - புங்குடுதீவு)
திதி: துதியை 10-02-2005

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!
அன்பு எனும் அரவணைப்பில்
அறிவு எனும் ஆழ்கடலாய்
தீங்கு தனை விரும்பாது
எல்லோருக்கும் வழிகாட்டியாயிருந்த
எங்கள் அன்புத் தாய்த் தெய்வமே!
எங்களை ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்டீர்களே அம்மா!
ஓராண்டு ஆனதம்மா - எங்கள்
நெஞ்சம் ஆறவில்லை அம்மா!
மீளாத் துயரில் தவிக்கின்றோம் - அம்மா
*உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*

கணவர் (கனடா),
பிள்ளைகள் - சாவித்திரிதேவி (கனடா),
மோகனதாஸ் (சுவிஸ்),
மருமக்கள் (கனடா - சுவிஸ்)
பேரப்பிள்ளைகள்.

கனடா.
(41925)(26-14-19)


## விற்பனை முகவர் தேவை

தேசிய அபிவிருத்தி லொத்தர், மகாபொல அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களை விற்பனை செய்வதற்கு யாழ்.மாவட்டத்தில் விற்பனை முகவர் தேவை.

தொடர்பு:
திரு.S.கனகலிங்கம்,
புதிய கடை,
இல.04, கே.கே.எஸ்.வீதி
(சத்திரத்துச் சந்திக்கு அருகில்),
யாழ்ப்பாணம்.
(41853)


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,பெப்.10

வண்ணார்பண்ணை வேம்படிப் பிள்ளையார் கோயிலின் வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ள இந்த மஹோற்சவத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் முற்பகல் 11மணிக்குக் கொடியேற்றமும் -

எதிர்வரும் 23ஆம் திகதி காலை 9 மணிக்கு இரதோற்சவமும் எதிர்வரும் 24 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

(எ-202)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம், பெப்.10

அளவெட்டி, குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலயத்தின் மணவாளக்கோலம், தை சதுர்த்திவிழா என்பன நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 8 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

விசேட பூசைகளைத் தொடர்ந்து விநாயகப் பெருமான் வீதியுலா வருதல் இடம்பெறும்.

(எ-202)

☆ ☆ ☆

மாதகல்,பெப்.10

மாதகல் புனித லூர்து அன்னை ஆலயத்தின் வருடாந்தப் பெருவிழா கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 6.30 மணிக்குத் தேர்ப பவனியும் இரவு 8 மணிக்குத் திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் இடம் பெறும்.

எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7.30 மணிக்குத் திருவிழாத் திருப்பலி இடம்பெறும்.

(எ-95-202)

## சி.வித்தியாதரனின்
## சதுரங்கத்தில் இறுதியாட்டம்
## நூல் வெளியீட்டு விழா

*காலம்:* 12-02-2005 சனிக்கிழமை மாலை 3.30 மணி.
*இடம்:* யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபம்
*தலைவர்:* பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் அவர்கள்
(பீடாதிபதி, கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
*பிரதம விருந்தினர்:* பேராசிரியர் என்.ஞானக்குமரன் அவர்கள்
(மெய்யியற்துறை, யாழ்.பல்கலைக்கழகம் தலைவர், யாழ்.சதுரங்கச் சம்மேளனம்)

அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*இல.5, வைமன் வீதி, நல்லூர்.* ஹரி கஸ்பரோவ் சதுரங்க அக்கடமி.
(41907)(14-19-26)


## PACIFIC NET COMPUTERS

U.K., Australia, Malaysia, Singapoore போன்ற பிரபல பல்கலைக்கழகங்களின் Information Technology, Software, Engineering, Multimedia பாடத்திட்டத்திற்கு அமைவான, சர்வதேச தரம்வாய்ந்த கணனிக் கற்கை நெறிகளை முதன்முறையாக யாழ்.மண்ணுக்கு அறிமுகம் செய்கின்றோம்.

*மேலதிக விவரங்களை விரைவில் எதிர்பாருங்கள்.*

**Pacific Net Computers**
***No. 01, Brown Rd., Jaffna.***
Tel: 021 2226413
Hot Line: 0777 763781
0777 371767
0776176383.
(41923)(26-14-19)


## இருமனம் கலந்த உறவுகளுக்கு திருமணவாழ்த்துக்கள்



நாளை (11.02.2005) வெள்ளிக்கிழமை திருமண பந்தமெனும் இல்லற வாழ்வில் இணையும் தம்பதிகளை மனதாரவாழ்த்துகிறோம்.

(தும்பசிட்டி)
பிரபா (உடுப்பிட்டி)

**திக்கம் கலாசாரமண்டபம் (11-02-2005)**

நவாலியூர்
திருமதி செ.செல்வராணி (Hscmf)

திரு.திருமதி செல்வராஜா ரமேஷ் (J.P.) உள்ளூராட்சி உதவியாளர்(L.G.A.) பிரதேச சபை மானிப்பாய்.

C/40876




## Fashion Beauty corner
## ஐசிங் கண்காட்சி



**இன்று மிகவும் கோலாகலமாக Fashion Beauty Corner இல் ஆரம்பிக்கும் கண்காட்சியில் அரிய பல வியக்கவைக்கும் மேலைத்தேய முறையில் தயாரிக்கப்பட்ட பொன்டன் ஐசிங், கேக் ஐசிங் மற்றும் பல வர்ணப் பூக்கள் கண்காட்சிக்காகவும் இறுதிநாள் விற்பனைக்காகவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.**

இந்நிகழ்வு இன்று 10 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதிவரை காலை 9.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை **இல.14, வீரமாகாளி அம்மன் வீதி, யாழ்.கந்தர்மடத்தில்** நடைபெறவுள்ளது.

சிறப்புற நடைபெறும் இந்நிகழ்வின் தொடக்கவிழாவில் பிரபல அழகுக்கலை நிபுணர் **யோகி சண்முகநாதன்** பிரதம விருந்தினராகவும் வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை அதிபர் திருமதி பொன்னம்பலம் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கிறார்கள்.

மேறபடி கண்காட்சியில் எமது ஆர்வலர்கள், பார்வையாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் கலந்துசிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

***பிரவேசக்கட்டணம் 20 /= மட்டுமே***

பிரவேச சீட்டுக்களை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடங்கள்:

இல.14, வீரமாகாளி அம்மன் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
T.P.:021 222 6864

ஸ்ரீ லங்கா புத்தகசாலை
234, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.

C/40886



*அழகுக் கலைகளைப்பயின்று அழகு பார்ப்பதற்கு யாழ்.குடாநாட்டு மகளிருக்கு*

## மீண்டும் ஒரு சந்தர்ப்பம்

பிரபல அழகுக்கலை நிபுணர்
**திருமதி பிறேமா ஜெகன்**
(Dip.in Beauty Culture, India)
அவர்கள் 3 நாள்களுக்கு வகுப்புகளை நடத்த வருகை தரவுள்ளார்.

இடம்: சுன்னாகம் இராமநாதன் கல்லூரி பிரதானமண்டபம்.



**26.02.2005 (சனி) காலை 9.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை**
1. Up Lifting Facial
(முகச்சுருக்கத்தை நீக்கும் Facial)
2. Aroma Magiral
1. Peral Facial } With Galvanic
2. Silver Facial }
3. GalvanicFacial
1. முகப்பருவுக்கான சிகிச்சை
2. பொடுகுக்கான சிகிச்சை
4. Fashion Hair Colour
*முழுக்கட்டணம் ரூபா 1000 /= மட்டும்*

**25.02.2005 (வெள்ளி) காலை 9.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை**
1. Eye Brow Threading
2. Bleach (Three Types)
3. Basic Facial - (Two Types)
4. Waxing
5. Hindu Bridal Dressing
(இந்து மணப்பெண் அலங்காரம்)
முழுக்கட்டணம் ரூபா 1000/= மட்டும்

**27.02.2005 (ஞாயிறு) காலை 9.30 மணி முதல் மாலை 4.00**
1. Cucumber Facial
2. Lotus Facial
1. Oilyskin 2. Dryskin
3. Worts Removal 4. Christian Bridal Dressing.
(கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம்)
முழுக்கட்டணம் ரூபா 1000/= மட்டும்

**விண்ணப்ப முடிவு திகதி: 22-02-2005**
மேலதிக விவரங்களுக்கு:
இராமநாதன் கல்லூரி அதிபருடன் தொடர்புகொள்ளவும்.
T.P.: 0222 7762.
*தொடர்ச்சியாக 3 வகுப்புகளுக்கும் சமுகமளிப்போருக்கு விசேடகழிவு உண்டு.*

இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.
பழைய மாணவர் சங்கம்.
(41922)

# கிளிநொச்சி செயலகம் முன்பாக நடந்த மக்கள் போராட்டம் கைவிடப்பட்டது!

### அரச அதிபரின் உறுதிமொழியை அடுத்து

பரந்தன்,பெப்.10

அரச கொடுப்பனவுகள் தமக்கு வழங்கப் படாததற்கு ஆட்சேபம் தெரிவித்து இராமநாத புரம் சிவிக்சென்ரர், வட்டக்கச்சி மாவடியம்மன் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கிளிநொச்சி மாவட்ட அரச செயலகம் முன்பாக நேற்று முன்தினமும் மறியலில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் செயலகம் முன்பாக ஒன்றுகூடிய மக்கள், நண் பகல் 12 மணிவரை செயலக வாசலில் ஒன்று கூடி மறியலில் ஈடுபட்டனர்.

அப்போது அங்கு வந்த அரச அதிபர் தி.இராசநாயகம் போராட்டத்தில் ஈடுபட்டிருந் தவர்களுடன் கலந்துரையாடினார். வரட்சி நிவா ரணத்தை உடனடியாகப் பெற்றுக்கொடுப்ப தற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் -

மீள்குடியமர்வுக் கொடுப்பனவு மற்றும் வெள்ள நிவாரணக் கொடுப்பனவு என்பவற் றைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஆவன செய்வ தாகவும் - அரச அதிபர் உறுதியளித்தார். இத னையடுத்துப் பிற்பகல் 2 மணியளவில் போராட் டக்காரர்கள் தமது போராட்டத்தைக் கைவிட் டுக் கலைந்துசென்றனர். (த-352-305)



அரச கொடுப்பனவுகள் வழங்கப்படாததற்கு ஆட்சேபம் தெரிவித்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராச நாயகத்திடம் மகஜர் கையளிப்பதை முதலாவது படத்திலும் - போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு பகுதி மக்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.
*(படங்கள்: மு.கந்தசாமி - பரந்தன் செய்தியாளர்)*

# கிளிநொச்சியில் நெல்லுக்கு உத்தரவாத விலை நிர்ணயம்

பரந்தன்,பெப்.10

கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் அறுவடை ஆரம்பமாகியிருப்பதையடுத்து அங்கு நெல் லுக்கு உத்தரவாத விலை நிர்ணயிக்கப்பட்டுள ளது.

கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்தில் இது தொடர்பாக நேற்று இடம்பெற்ற விவசா யக் குழுக் கூட்டத்தின்போதே இந்த உத்தர வாதவிலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சிவப்பு அரிசி நெல் ஒரு கிலோ 15 ரூபா 50 சதமாகவும், சம்பா நெல் ஒரு கிலோ 16 ரூபா 50 சதமாகவும் விவசாயிகளி டம் இருந்து கொள்வனவு செய்ய வேண்டும் என்றும் -

இதனைவிட, விவசாயிகளுக்குப் பின்னர் ஒரு கிலோ நெல்லுக்கு ஒரு ரூபா வீதம் ஊக்கு விப்புக் கொடுப்பனவு வழங்கப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்தக்கூட் டத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறு வனப் பொறுப்பாளர் கு.சின்னண்ணா, கிளி நொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பா ளர் (விரிவாக்கம்) சீ.ஆனந்தராசா, கமநல சேவை கள் நிலைய உதவி ஆணையாளர் பி.நாமகள், நீர்ப்பாசனத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் ஏ.வினோதராசா, கமக்கார அமைப்புக்களின் சம் மேளனத் தலைவர் சு.மனோகரன் மற்றும் தமி ழீழ நிர்வாக சேவைப் பிரதிநிதிகள், திட்டக் குழுக்கள், கமக்கார அமைப்புக்களின் பிரதி நிதிகள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தப் பிரதிநிதிகள் அனைவரும் கூடிக்கலந் துரையாடிய பின்னரே நெல்லுக்கு மேற்படி உத்தரவாத விலையை நிர்ணயித்தனர். (த-352)

## உபகரணங்கள் இன்றி மீனவர்கள் சிரமம்

பரந்தன்,பெப்.10

சுனாமி இயற்கையனர்த்தத்தால் பாதிக்கப் பட்ட வடமராட்சி கிழக்குப் பகுதி மீனவர்கள் போதிய மீன்பிடி உபகரணங்கள் இல்லாது தொழிலை மேற்கொள்ள முடியாதிருப்பதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள ஆழிய வளை, உடுத்துறை, கட்டைக்காடு, மருதங் கேணி. வெற்றிலைக்கேணி, தாளையடி, கேவில போன்ற கிராமங்களைச் சேர்ந்த மீனவர்களே இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளனர்.

இயற்கையனர்த்தத்தால் மேற்படி கிராம மீன வர்களின் தொழில் உபகரணங்கள் முற்றாக அழிவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-352-202)




## கிளிநொச்சி அறிவியல் நகரில் விசேட தொழிற்பயிற்சி நெறி

கிளிநொச்சி,பெப்.10

கிளிநொச்சி அறிவியல் நகரில் றீடோ நிறு வனத்தினர் தொழிற்பயிற்சிநெறியை ஆரம்பித் துள்ளனர்.

ஈ.எஸ்.டி.சி வளாகத்திலுள்ள தொழிற்பயிற் சிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் தொழில் பயிற்சி நெறிக்கான ஆரம்பவிழா கடந்த சனிக் கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில், தேசியக் கொடியைத் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா ஏற்றி வைத்தார்.

கட்டடத்தின் 'ஏ' தொகுதியை தமிழீழ விளை யாட்டுத்துறைப் பொறுப்பாளரும், 'பி' தொகுதியை வடபகுதிக்கான ஐ.எல்.ஓ. நிகழ்ச்சித் திட்ட வெளிக் கள உத்தியோகத்தர் யோசப்பும் நாடா வெட்டித் திறந்துவைத்தனர்.

இந்நிகழ்வில், கிளிநொச்சி அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் கணேச பிள்ளை, றீடோ நிறுவனத்தின் தலைவர் ஏ.வி.கே.மாணிக்கம், தமிழர் புனர்வாழ்வுக்கழக ஊடகத்துறைப் பணிப்பாளர் சங்கீதன், றீடோ நிறுவனப் பணிப்பாளர் செல்வராஜ், தமிழர் புனர் வாழ்வுக்கழகத் திட்டப்பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தத் தொழில் பயிற்சிநெறித் திட்டம் ஐ.எல்.ஓ. நிறுவன நிதியுதவியுடன் ஆரம்பிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-202)

## கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் செயற்கை முறைச் சினைப்படுத்தும் சேவை

ஜெயபுரம்,பெப்.10

செயற்கைமுறைச் சினைப்படுத்தும் சேவையை பூநகரி கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் இடம்பெற்று வருகின்றது.

கால்நடை அபிவிருத்தி அலுவலர் க.சூரிய குமாரனின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தச் சேவையில் நல்லின கால்நடைகளை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான சேவையைப் பெற விரும்பு பவர்கள் ஜெயபுரத்தில் உள்ள கால்நடை வைத் தியர் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளு மாறு அபிவிருத்தி அலுவலர் கே.சூரியமூர்த்தி கேட்டுள்ளார். (எ-291-202)

## சம்புக்குளத்தில் இயங்கிய கசிப்புக் குகை சிக்கியது

வட்டக்கச்சி,பெப்.10

காவல்துறையும், அரசியல்துறையும் இணைந்து நடத்திய அதிரடி நடவடிக்கையின் போது சம்புக்குளம், கல்மடுநகர் பகுதிகளில் இயங்கி வந்த கசிப்புக்குகை ஒன்று சிக்கிக்கொண் டது.

கடந்த மாதம் 30 ஆம் திகதி சம்புக்குளத் தின் அருகில் கசிப்பு உற்பத்தி நடைபெறுவதை அறிந்து தமிழீழக் காவல்துறையின் வட்டக்கச் சிப் பணிமனைப் பொறுப்பதிகாரி கி.கிங்ஸ்லி தாஸ் தலைமையிலான குழு மேற்கொண்ட அதி ரடி நடவடிக்கையில் 45 லீற்றர் கசிப்பும், கசிப புக் காய்ச்சுவதற்கான கோடாவும் கைப்பற்றப் பட்டன. கசிப்பு உற்பத்தி செய்தவர்கள் தலை மறைவாகியுள்ளனர். உரிய நபர்களைக் காவல துறையினர் தேடி வருகின்றனர்.

இதேபோன்று, கடந்த 3ஆம் திகதி சம்புக் குளம் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடு பட்டிருந்த நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

அண்மைக்காலமாக இப்பகுதியில் கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் அதிகரித்துள்ளதா கப் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (எ-405-202)

## 96 குடும்பங்களுக்கு வலைஞர்மடத்தில் தற்காலிக வீடுகள்

கிளிநொச்சி,பெப்.10

சுனாமிப்பேரழிவை அடுத்து இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மேலும் 96 குடும்பங் களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளது.

உடையார்கட்டு மகா வித்தியாலயம், புதுக் குடியிருப்பு றோ.க.வித்தியாலயம், இரணைப்பாலை மகாவித்தியாலயம், புதுக்குடியிருப்பு மகாவித்தி யாலயம், கைவேலி மகா வித்தியாலயம் என் பனவற்றில் தங்கியிருந்த குடும்பங்களுக்கு பொக் கணை, வலைஞர்மடம், பனையடி ஆகிய இடங் களில் தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக் கப்பட்டுள்ளன.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கு சமையல் உப கரணங்கள், உணவுப் பொருள்கள், தலா ஆயி ரம் ரூபா என்பனவும் இவ்வாறு வழங்கப்பட் டன. (எ-202)

## நாகதம்பிரான் ஆலய உற்சவம் குறித்த கூட்டம்

கிளிநொச்சி,பெப்.10

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பி ரான் ஆலய வருடாந்த உற்சவம் அடுத்த மாதம் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட ஆலோசனைக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறவுள் ளது.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரும், ஆலய போசகருமாகிய தி.இராசநாயகம் தலைமையில நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்கு கிளிநொச்சி மாவட்ட அனைத்துத் திணைக்களத் தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனப் பொறுப்பாளர்கள், பொதுச் சபை உறுப்பினர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாகத் தலைவர் வீ.இராமநாதன் கேட்டுள்ளார். (எ-202)

## மாதாந்தக் கூட்டம்

கிளிநொச்சி,பெப்.10

கிளிநொச்சி மாவட்ட சுகாதார மன்றத்தின் பெப்ரவரி மாதத்திற்கான கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளதாகக் கிளி நொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (எ-202)

## வீதி ஒழுங்கு குறித்த கலந்துரையாடல்கள்

கிளிநொச்சி,பெப்.10

வீதி ஒழுங்கு முறைகள் தொடர்பான கலந்து ரையாடல் கடந்த 2 ஆம் திகதி ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனத்தில் நடைபெற்றது.

நிறுவன முகாமையாளர் தலைமையில் இடம் பெற்ற இக்கலந்துரையாடலில் தமிழீழக் காவல் துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமாரன் வீதி ஒழுங்கு முறை கள் குறித்துக் கருத்துரை வழங்கினார்.

அவர் தமது கருத்துரையில் -

துவிச்சக்கரவண்டி செலுத்துநர்கள், வாகன சாரதிகள் வீதி ஒழுங்கு விதிமுறைக்கமைவாக வாகனம் செலுத்தும் முறை போன்ற பல்வேறு விடயங்களைத் தெளிவுபடுத்தினார். (எ-202)

☆ ☆ ☆

கிளிநொச்சி,பெப்.10

வீதி ஒழுங்குமுறை தொடர்பான கலந்துரை யாடல் திருநகர் ஆங்கில தனியார் கல்வி நிறு வனத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற் றது.

நிறுவனப் பொறுப்பாளர் தலைமையில் இடம் பெற்ற இக்கலந்துரையாடலில் தமிழீழ காவல் துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமாரன் கருத்துரை வழங் கினார்.

தொடர்ந்து வீதி விபத்துக்கள் தொடர்பான புகைப்படக் காட்சியும் இடம்பெற்றது. (எ-202)

## சாயி சிந்தனை



### இறைசிந்தனை மிகவும் அவசியம்

அனைத்து உயிரினங்களிலும் மனிதப்பிறவி என்பது மிகவும் புனிதமானது என்ற உண்மையைப் புரிந்து கொள்ளுங்கள். தர்மத்தை நிலைநிறுத்தும் வகையில் உங்களது வாழ்க் கையை அமைத்துக் கொள்ளுங்கள். பறவைகளையும், மிருகங் களையும் போன்று உண்பதற்கும், உறங்குவதற்கும் தான் வாழ்க்கை என்று கருத வேண டாம். பறவைகளும், மிருகங்களும் தங்களது இயல்புக்கேற்ப நடந்து கொள்கின்றன. ஆனால், மனிதன் தன் கடமையான தர்மத்தைப் போற்றிப் பாதுகாப்பதை மறந்துவிடுகிறான்.

உத்தியோகம் பெறுவதற்குத்தான் கல்வி என்ற தவறான நோக்கத்தில் இக்கால இளை ஞர்கள் இருக்கின்றனர். யோகமற்ற உத்தியோகம் பயனற்றது. இறைவன் மீது சிந்தனையை முழுமையாகச் செலுத்துவதே உண்மையான யோகமும் உத்தியோகமும் ஆகும். அதுதான் மனிதனின் முதல் கடமை. இந்த உண்மையை மறந்துவிட்டு சிலர் தங்கள் உத்தியோகத் தைக் குறித்து வீண் பெருமை கொள்கின்றனர்.

அகங்காரம் என்பது மனித வாழ்க்கையின் வேரையே அழிக்கும் வேர்ப்புழு. ராகம் என்கிற பற்றுதல் த்வேஷம் என்கிற வெறுப்பு இவை இரண்டும் அகங்காரத்தை வளர்க்கின்றன. இவை மூன்றும் சேர்ந்து மனித வாழ்வுக்கு அழிவைக் கொண்டு சேர்க்கின்றன. தெய்வீக அன் பினால் மனித மனம் நிறையும் போதுதான் மனித வாழ்க்கை, மிகுந்த ஒளியுடன் பிரகாசிக்கும்.

தெய்வீகத்தை மறந்த சுயநல அன்பு மனிதனை அழிவுப் பாதையில் தான் அழைத்துச் செல்கிறது. இறைவன் மேல் முழுமையான நம்பிக்கையும் அன்பும் கொண்ட வாழ்க்கைதான் மகிழ்ச்சியும், ஆனந்தமும் நிறைந்த வாழ்க்கைக்கு வழிவகுக்கும். மனிதன் தன்னுள் இருக்கும அளவிடமுடியாத சக்தியைப் புரிந்துகொள்ள முயல வேண்டும்.

(ஆதாரம்:- சனாதன சாரதி)

## பொதுக்கூட்டம்

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் 14 14 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இணையப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். (எ-202)


## பெண் லிகிதர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் முன்னணி மூக்குக் கண்ணாடி யகத்திற்கு A/L படித்த பெண் லிகிதர் தேவை (கணனி அறிவு விரும்பத்தக்கது)

வயதெல்லை: 22-35

குறிப்பு:யாழ்.நகர், அதனை அண்டிய பிரதேசத்தினர் மட்டும் நேரில் நற்சான்றிதழ்களுடன் சமுகம் அளிக்கவும்.

516, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-40891)

## அழைப்பு

யாழில் கம்பியூட்டர் மாணவர்களிடத்தே நன்மதிப்பைப் பெற்ற SCC (Soft View Computer College) நிறுவனம் இலத்திரனியல் துறையில் புதிய மைல்கல் பதிக்கும் நோக்கில் ஒரு பிரவாகமாக CeSCO என்ற நிறுவனத்தை ஆரம்பிக்கவுள்ளோம்.

என்றும்போல் எமக்கு தூணாகச் செயற்படும் மாணவர்கள், வாடிக்கையாளர்கள், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் சகலரும் உவகையுடன் வருகை தந்து சிறப்பித்து வாழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வைபவம் நேரம்: 9.30 - 10.00
காலம்: 11.02.2005
இடம்: 56/15, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(இலங்கை வங்கி பின்புறம்)

இங்ஙனம்
SCC நிறுவனம்

A place for Bright
Computer & electronics
Solution Company



உ
சிவமயம்
அம்பாள் துணை

### உடுப்பிட்டி வடக்கு - கொம்மந்தறை
### ஸ்ரீ மனோன்மணி அம்பாள் திருக்கோயில்
### இராஜகோபுர அடிக்கல் நடும் பெருவிழா

அன்புடையீர்!

தாரண வருடம் தைத்திங்கள் 29ஆம் நாள் வெள்ளிக்கிழமை திருதியைத் திதியும் பூரட்டாதி நட்சத்திரமும் கோதுளி முகூர்த்தமும் கூடிய காலை 6.00 மணிமுதல் 7.00 மணிவரையுள்ள (பழைய நேரம்) புண்ணிய சுபவேளையில் -

எல்லாம்வல்ல அன்னை லோக மாதா ஸ்ரீ மனோன்மணி அம்பாளின் பரிபூரண கிருபா கடாஷத்துடன் - இராஜகோபுர அடிக்கல் நடும் பெருவிழா நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

அருளாசியுரை:
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
~ நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் ~

இப்பெருவிழாவில் முதுபெரும் அந்தண சிவாச்சாரியர்கள் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இராஜகோபுர ஸ்தபதி - கலாபூஷணம்
சிவத்திரு.சி.மகேந்திரராசா - அராலி

அம்பிகையின் மெய்யடியார்கள் வந்து அம்பிகையைத் தரிசித்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"கோபுரம் தரிசனம் கோடி புண்ணியம்"

உடுப்பிட்டி வடக்கு,
கொம்மந்தறை.
(41926) (43-21-14-16)

விழா உபயகாரர்
சி.யோகச்சந்திரன்
(கொம்மந்தறை - லண்டன்)


## மோ.சைக்கிள் விபத்தில் காயம்

தென்மராட்சி,பெப்.10

வீதி வளைவு ஒன்றில் திரும்பிய மோட்டார் சைக்கிளிலிருந்து தூக்கிவீசப்பட்டு இளம் பெண் காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த திங்களன்று பளை மாசாரில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் வினோதினி (வயது 20) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை -

மோட்டார் சைக்கிள் மோதியதில் காயமடைந்த மேலும் இருவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலையிலிருந்து திரும்பிய கைதடியைச் சேர்ந்த கந்தசாமி பரத்ராஜ் (வயது 13) என்னும் மாணவனும் -

ஆலயத்திற்குச் சென்ற கல்வயலைச் சேர்ந்த கணேசலிங்கம் அன்னலட்சுமி (வயது 40) என்பவருமே காயமடைந்தவர்களாவர். (ஐ-117)

## தம்புள்ளவிலிருந்து மரக்கறிகள்

வடமராட்சி,பெப்.10

யாழ். குடாநாட்டுக்கு மரக்கறி வகைகள் தினமும் தம்புள்ளவிலிருந்து தனியார் வர்த்தகர்களினால் எடுத்துவரப்படுகின்றன.

குடாநாட்டில் பற்றாக்குறையாக உள்ள - விலை அதிகரித்துள்ள - மரக்கறி வகைகளான கத்தரிக்காய், லீக்ஸ், கோவா, பூசணி, தேசிக்காய் போன்றவற்றைத் தனியார் வியாபாரிகள் எடுத்துவந்து இங்குள்ள சந்தை வியாபாரிகளுக்கு மொத்தமாக விற்பனை செய்து வருகின்றனர். (ஐ-173)

## 6 ஆயிரம் குடும்பங்களுக்கு உணவு நிவாரணம்

வடமராட்சி,பெப்.10

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 6 ஆயிரத்து 138 குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரையில் இப்பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டாயிரத்து 938 குடும்பங்களுக்குத் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் மீள்குடியேற்றக் கொடுப்பனவு பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளை ஊடாகவும் மூவாயிரத்து 443 குடும்பங்களுக்குத் தலா இரண்டாயிரத்து 500 ரூபா வீதம் வீட்டுப் பாத்திரங்கள் வாங்குவதற்கான கொடுப்பனவும் வழங்கப்பட்டுள்ளன. (ஐ-173)

## வலி.வடக்குப் பிரதேச சபைக்குப் புதிய செயலர்

தெல்லிப்பழை,பெப்.10

வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் புதிய செயலாளராகத் திருமதி ஸ்ரீரஞ்சிதமலர் மாணிக்கம் கடமையேற்றுள்ளார். இவர் வலிகாமம் கல்வி வலயத்தின் நிர்வாக உத்தியோகத்தராக இதுவரை காலமும் கடமையாற்றியவர். இதுவரை மேற்படி பிரதேச சபையின் செயலாளராகக் கடமையாற்றிய செ.செல்வரத்தினம் ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து இப்புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-150)

## சங்காபிஷேகம்

தெல்லிப்பழை,பெப்.10

ஏழாலை மேற்கு அருள்மிகு முடிமன்னர் ஆலய மணவாளக்கோல உற்சவமும் சங்காபிஷேகமும் நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிதொடக்கம் மதியம்வரை நடைபெறவுள்ளது. (ஐ-150)

## கும்பாபிஷேகம்

வடமராட்சி,பெப்.10

தும்பளை மேற்கு, காரைக்கலட்டி அருள்மிகு வைரவர் கோயில் மகா கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை நடைபெறும். (எ-173)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 652 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 08-2-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. | 4271473 - 4286908 |

வெற்றி இலக்கங்கள்
06 07 23 31

லக்கினம் மிதுனம்

ஜக்பொட் பரிசு
ரூபா.10,00,000/-
வெல்லப்படவில்லை
இந்த வெள்ளிக்கிழமை
ஜக்பொட் ரூபா. 17,60,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1.இல | 3,40,425 | 10/- | 34,04,250/- |
| 2.இலக்கங்கள் | 31,189 | 20/- | 6,23,780/- |
| 1.இல + லக்கினம் | 30,908 | 30/- | 9,27,240/- |
| 2.இல + லக்கினம் | 2,905 | 100/- | 2,90,500/- |
| 3.இலக்கங்கள் | 825 | 500/- | 4,12,500/- |
| 3.இல + லக்கினம் | 79 | 5,000/- | 3,95,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 10,00,000/- | - |
| மொத்தம் | 4,06,340 | - | 7,505,520/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 7,505,520/-

தொடர் இல. 5238412 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2005 பெப்ரவரி 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்வித்த
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

4278002-8-02
4277501-8-03
4276312-6-70
4282960-9-39
4274979-6-62

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அருள்வாணி ஆனந்தராசா



ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருள்வாணி ஆனந்தராசா, 06-02-2005 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரமசிவம் (நெல் சந்தைப்படுத்தும் சபை காப்பாளர்) - கங்காதேவி ஆகியோரின் அன்பு மகளும் ஆனந்தராசா (மக்கள் வங்கி யா/பிரதான வீதி கிளை நீடித்த கருமபீடம், உரும்பிராய்), அவர்களின் அன்பு மனைவியும் சாருஜன், பரணிதா (யா/இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் அருள்நம்பி (நோர்வே), அருள்பரன் (கனடா), அருள்ஈசன் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும் உதயகலா (காவேரி - கனடா), உதயகுமாரி (நோர்வே), தமிழ்ச்செல்வி (புவியியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் மைத்துனியும் அக்ஷயாவின் (கனடா) அன்பு மாமியும் திரு.திருமதி இராசேந்திரம் - தவமணி ஆகியோரின் அன்பு மருமகளும் திரு.திருமதி செல்வஞானபிள்ளை - மனோன்மணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-02-2005) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 4.00 மணியளவில் பொக்கனை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.
(41927)(43-14-16-24)

தகவல்:
இ.ஆனந்தராசா (கணவர்),
திரு.திருமதி பரமசிவம் கங்காதேவி
(பெற்றோர்).

### தம்பையா சோமசுந்தரம்

(புகையிலை வர்த்தகர் - சரவணை)



சரவணையைப் பிறப்பிடமாகவும் கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சோமசுந்தரம் அவர்கள் 08.02.2005 செவ்வாய்க்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - திருமேனிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி - செல்லமுத்து ஆகியோரின் அன்பு மருமகனும் புஸ்பராணியின் அன்புக் கணவரும் உமா (கனடா), பாமா (கனடா), நெடுஞ்செழியன் (கனடா), இளஞ்செழியன் (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற அருட்செழியன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் நாகேஸ்வரன் (கனடா), யோகேஸ்வரன் (கனடா), சுகந்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற பராசக்தி மற்றும் பூமணி, பூரணம், திருநீலகண்டன் (பெரியண்ணர் - கொழும்பு), காலஞ்சென்ற பொன்னுச்சாமி மற்றும் இலிங்கப்பிள்ளை (கனடா), மகேஸ்வரி (பிரான்ஸ்), இராசலிங்கம் (நாரந்தனை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற மருதையினார் மற்றும் நாகேஸ்வரி (கனடா), மார்க்கண்டு (பிரான்ஸ்), செல்வராணி, தங்கேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் நர்மதா, சகீரா, அமிசா, யமீனா, அனீரா, அயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வெள்ளிக்கிழமை (11-02-2005) மாலை 4.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காகக் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*62/5, அன்னசத்திர லேன்,*
*முதலாம் ஒழுங்கை,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*
T.P.: 0776925235
(41929) (24-43-14-16)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்.


உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருடம் தை மாதம் 29ஆம் நாள் (11.02.2005) வெள்ளிக்கிழமை பூரட்டாதி நட்சத்திரமும், சித்த யோகமும் கூடிய காலை 10.15 மணிமுதல் 10.45 மணிவரையுள்ள கும்ப லக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்,

மணமகன்
எமது கனிஷ்ட புத்திரன் திருவளர் செல்வன்
**நாதசொரூபன்**
(தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்) அவர்களுக்கும்

மணமகள்
எமது ஏக புத்திரி திருவளர் செல்வி
**நிதர்சினி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி திருமண மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:

திரு.திருமதி சு.சண்முகரத்தினம் குடும்பத்தினர்
நி.மு./சிவன் கோயில் வீதி, ஆவரங்கால், புத்தூர்.
த.மு./இல. 20, நாயன்மார் வீதி, நல்லூர்.

திரு.திருமதி ந.நடராசா குடும்பத்தினர்
நி.மு./பன்னாலை, தெல்லிப்பழை.
த.மு./'சீதா றாம்' சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

(இருவீட்டார் அழைப்பு)

# அச்சுவேலி கோஷ்டி மோதலில் நேற்று நால்வர் படுகாயம்

அச்சுவேலி பெப்.10

அச்சுவேலி மற்றும் புத்தூர் பகுதிகளைச் சேர்ந்த இரு சாராரிடையே ஏற்பட்ட கோஷ்டி மோதலில் நால்வர் படுகாய மடைந்திருக்கின்றனர். ஐவர் அச்சுவேலிப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

நேற்றுக்காலை ஆரம்பித்த மோதல் தீவிரமடைந்தது. மோதலில் பொல்லுகள், கத்திகள், வாள்கள் பயன்படுத் தப்பட்டன என்று தெரிகின்றது. பலத்த காயமடைந்த நால்வர் அச்சுவேலி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் இருவர் பின்னர் யாழ்.மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அருணோதயம் சாந்தரூபன் (வயது 20) , பொன்னுத்துரை செபஸ்தியான் (வயது 48), சிறில் ஜோசப் (வயது 60), நவம் ஜெயம் (வயது 30) ஆகிய நால்வருமே படுகாயமடைந் தவர்களாவர்.

அச்சுவேலி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி சஞ்சீவ் பண்டார தலைமையிலான பொலீஸ்க் குழு விசாரணை களை மேற்கொண்டுள்ளது. (ஜ-11-13)

# முகமாலையில் பயணிகள் வசதி கருதி புதிய சோதனைக் கொட்டகைகள்

யாழ்ப்பாணம்,பெப்.10

முகமாலைச் சோதனைச்சாவடியில் பயணிகளின் வசதிகருதிப் புதிய சோதனை நிலையக் கொட்டகைகளை அமைக்கும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தினமும் இச்சோதனைச் சாவடியால் செல்லும் பயணி களின் எண்ணிக்கை அதிகரித்ததால் அவர் கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வ தாக யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் யாழ்.அரச அதிபர் கே.கணேசிடம் சுட்டிக்காட்டியிருந் தார்.

இதையடுத்து அங்கு புதிய கொட்டகை களை அமைப்பதற்குத் தேவையான கட்டடப் பொருள்களை வழங்க அரச அதிபர் இணக் கம் தெரிவித்தார்.

இந்தக் கொட்டகைகள் அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் கடந்த திங்கட் கிழமை காலை இடம்பெற்றது. அடிக்கல்லை 55 ஆவது படைப்பிரிவு தளபதி பிரிகேடியர் மேஜர் ஜெனரல் வீ.ஆர்.சில்வா நட்டார். (ஜ-202)


## தாதியர் தேவை

தாதிய சேவையில் முன் அனுபவமுள்ளவர்களும் தாதியர் பயிலுநர்களும் தேவை.

நேரில் தொடர்பு கொள்ளவும்.

போதிய முன் அனுபவமும் தகுதியும் உடையவர்களுக்கான ஆகக்குறைந்த மாதாந்த வேதனம் 5000/= ரூபா வழங் கப்படும்.

இன்று (10.02.2005) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நேரில் சமுகந்தரவும்.

**Jaffna Medical Centre**
Philip Nursing Home Building
(41940) 228, Main St. Jaffna.


## 71 ஆம் நாள் நினைவுகளுடன்

தோற்றம் 01 ~ 08 ~ 1978



மறைவு 02 ~ 12 ~ 2004

### சாள்ஸ் எமலியான் கெல்வின் தயான்

(கமில்ரன்)

அன்று நடந்தது, எம் ஆவி துடித்தது!
இன்றும் நினைக்கையில் எம் நெஞ்சு
வலிக்குது?
கூடப் பிறந்துவிட்ட எங்கள்
உதிரமே – உனை மறந்துவிட
நினைப்போமா? மறுபடியும் வருவாயோ!
இவரின் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

12, ஐஸ்பினான் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.
(41930)(29-11-45)

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா,
சகோதரர்கள்.

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 22 ~ 08 ~ 1951



விண்ணில் 24 ~ 01 ~ 2004

### அமரர் மார்க்கண்டு இரஞ்சிதநாதன்

எம் அணையாத குலவிளக்கே!
மறைந்தவர்கள் எல்லோரும் மண்ணாவதில்லை!
மாறாக.........
மறைந்தும் மறையாத சூரியனாய்
எம் மனதில் என்றும் நிலைத்திருக்கும்
எம் தெய்வத்திற்கு தலை வணங்குகின்றோம்.

17, 2 ஆம் குறுக்கு வீதி,
கொழும்புத்துறை. (41939)

- குடும்பத்தினர்.


**COLLEGE OF KEEN**
128/4, Palaly Road, Thirunelvely

A/L 2007 புதிய பிரிவுகள் ஆரம்பம்
12.02.2005 சனி காலை 7.00
கணக்கீடு Mr.S.N. Rajah (நித்தி)
இந்துநாகரீகம் Mr.A.Navaneethan
Mr.S. Jeyakumar
(41933)

**லக்ஷ்மி சினிமா** இணுவில்



இன்று முதல்
பிரசாந், சினேகா, வடிவேல் நடித்த
ஆயுதம்
தினசரி: 11.00, 3.00, 7.00

**மனோகரா** யாழ்ப்பாணம்

கடைசிவாரம்
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடான
விஜய், திரிஷா மற்றும் பலர் நடித்த
திருப்பாச்சி
காட்சி : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
12 முதல் 10.30, 2.30 காட்சியாக
M.குமரன் Sun of மகாலட்சுமி



**நிறைஞ்சனாஸ்** சங்கானை

சத்தியராஜ், நமிதா, மும்தாஜ் நடித்த
மகா நடிகன்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00. (பு.நே.) (C/40667)

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்

09.02.2005 முதல் பார்த்தீபன்,
ரிச்சாபலேட், வடிவேலு இன்னும்
பலர் நடித்த
காதல் கிறுக்கன்



தினசரி காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்



4 ஆவது வெற்றி வாரம்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு
தனுஸ், ஸ்ரீதேவி, கருணாஸ்,
கபாலி, குணால், நாசர் நடித்த
தேவதையைக் கண்டேன்
தினசரி 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே.)
அடுத்த வெளியீடு: திருப்பாச்சி (C/39654)

**ராஜா** யாழ்ப்பாணம்

10 ஆம் திகதி வரை சரத்குமார் (இருவேடம்),
நயன்தாரா, வடிவேல், நெப்போலியன்
ஐயா
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30, 9.30



11 முதல் அஜித் - த்ரிஷா (பு.நே.)



## தமிழீழ காவல்துறை பதவி வெற்றிடங்கள்

தமிழீழ காவல்துறை கீழ்க்காணும் பதவிகளுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

1.உப பரிசோதகா

தகைமைகள்: க.பொ.த. (உயர்தரம்) சித்தி
வயது: 18-30
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
சம்பளம்: $\frac{4500+7155}{150x10+165x7} = 2700.00$

2.எழுதுவினைஞர்

தகைமைகள்: க.பொ.த. (உயர்தரம்) சித்தி அல்லது க.பொ.த. (சாதாரணம்) சித்தியுடன் 5 பாடங்களில் (தமிழ் மொழி உட்பட) திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்
வயது: 18-30
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
சம்பளம்: $\frac{4200+6430}{125x10+140x7} = 2700.00$

3.காவலர்

தகைமைகள்: க.பொ.த. (சாதாரணம்) சித்தி
வயது: 18-30
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
சம்பளம்: $\frac{4200+6430}{125x10+140x7} = 2700.00$

மேற்காணும் பதவிகளில் இணைய விரும்பும் விண்ணப்பதாரர்கள் கிளிநொச்சியில் அமைந்துள்ள காவல்துறை நடுவப்பணியகத்துக்கு இன்று 10.02.2005 ஆம் திகதி முதல் 28.02.2005 ஆம் திகதி வரை காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

(சி-40897)(29-11-45)

ஆளணிப் பிரிவினர், காவல்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்.


## கண்ணீர் அஞ்சலி



யா/புங்குடுதீவு மகாவித்தியாலய ஆசிரியர்
திரு.அ.அதிசயராசா அவர்களின் அன்புத் தந்தையார்

### அமரர் ஐசக் அருளையா

அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/புங்குடுதீவு ம.வி.
புங்குடுதீவு. (41934)

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்,
பாடசாலைச் சமூகம்.

## மரண அறிவித்தல்கள்

### கைத்தாம்பிள்ளை யோசேப்



குடாரப்பைப் பிறப்பிடமாகவும் குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட கைத்தாம்பிள்ளை யோசேப் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைத் தாம்பிள்ளை - லூர்த்தம்மா ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை தம் பிராசா இரெட்ணத்தின் மருமகனும் றீற்றம்மா வின் கணவரும் ஜீவா சுரேஸ், சின்னா ஆகி யோரின் பாசமிகு தந்தையும் மரியாம்பிள்ளை, சின்னத்தம்பி, கிளி, சோதி, கதிராசி ஆகியோரின் சகோதரனும், செல்வசிங்கம் (மன்னார்), குணசிங்கம் (குணசிங்கம் தேநீர் கடை), சில்வேஸ்ரர் (பிரான்ஸ்), ரெட்ணமாலா (திருகோணமலை) காலஞ் சென்ற யோகராசா, கிளி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனனும் டிலக்ரா, றஞ்சீத்குமார், டிலானி, கொன்சன்ரைன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.02.2005) வியாழக்கிழமை பிற் பகல் 4 மணிக்கு 23/8, மத்திய கிழக்கு வீதி, குருநகரில் அமைந் துள்ள அவரின் இல்லத்திலிருந்து புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

*23/8, மத்திய கிழக்கு வீதி,*
*குருநகர், யாழ்ப்பாணம்.* (41941)(29-11-45)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி பாலேந்திரா சரஸ்வதி

காரைநகர், சம்பந்தர் கண்டியைப் பிறப்பிடமாகவும் வட்டு.கிழக்கு சித்தன்கேணியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாலேந்திரா சரஸ்வதி அவர்கள் நேற்று (09.02.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் நாராயணன் - பத்தினி தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற வரதலட்சுமி (ஆசிரியை), குகநேசன் (தபாலதிபர் - சுழிபுரம்) ஆகியோரின் சகோதரியும் சௌந்தரராணி (ஆசிரியை, நாவலர் மகா வித்தியாலயம்) அவர்களின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2005) வியாழக் கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வட்டு.கிழக்கு,*
*சித்தன்கேணி.* (41943)(29-11-45)

தகவல்:
நா.குகநேசன்
(தபாலதிபர் - சுழிபுரம்).

### திருமதி பத்தினி வல்லிபுரம்

இலுப்பையடி தெடுத்தனை, கரவெட்டி கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது சாமியன் அரசடி, மரக்காலை ஒழுங்கை, கரவெட்டி வடக்கு, கரவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பத்தினி வல்லிபுரம் அவர்கள் நேற்றுமுன்தினம் (08.02.2005) செவ் வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2005) பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தக னக் கிரியைகளுக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சாமியன் அரசடி,*
*மரக்காலை ஒழுங்கை,*
*கரவெட்டி வடக்கு,*
*கரவெட்டி.* (சி-40898)(29-11-45)

தகவல்:
மக்கள், மருமக்கள்.

## கரையோரத்தில் வீடுகள் அமைப்பதில்
# தூர வரையறையைப் பின்பற்றாதோருக்கு அரசின் உதவிகள் கிடைக்கமாட்டா
### ஈ.பி.டி.பி. மதனராஜா தெரிவிக்கிறார்

கடற்கரையோரத்தில் அரசினால் பிரகடனப்படுத்தப்பட்ட நூறு மீற்றர் தூர வரையறைக்கு உட்பட்டப் பகுதியில் மக்கள் வீடுகளை அமைத்தால் அரசின் உதவிகள் அவர்களுக்குக் கிட்டாது.

யாழ்.மாவட்டத்தில் சுனாமி ஆழிப்பேரலையினால் அழிவடைந்த பகுதிகளை மீளக்கட்டியெழுப்புவது தொடர்பாக நேற்று மாலை யாழ். அரச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் நடராஜா மதனராஜா இதனைத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரதிநிதியாக அவர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

ஆழிப்பேரலை தாக்கிய கடற்கரையோரப் பிரதேசத்தில் கரையிலிருந்து நூறு மீற்றருக்கு அப்பால் வீடுகள் அமைக்கப்பட வேண்டுமென அரசு வரையறை செய்துள்ளது.

அந்த 100 மீற்றருக்குள் மக்கள் வீடுகளை அமைத்தால் அரசின் எந்தவித உதவிகளும் அவர்களுக்குக் கிடைக்கமாட்டாது - என்றார்.

கூட்டத்தில் கலந்துகொண்ட கடற்றொழில் சமாசப் பிரதிநிதிகள் இந்தக் கருத்துக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை-

வடமராட்சிப் பகுதியில் அரச சார்பற்ற நிறுவனங்களினால் அமைக்கப்பட்டு வரும் தற்காலிக குடிசைகளின் வேலைகளை அடுத்த மாதத்திற்குள் முடித்து மக்களை மீளக் குடியமர்த்துவது என்று இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், வடபிராந்திய பிரதிப் பொலீஸ்மா அதிபர் வானகுரு, விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் விஜிதரன் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரநிதிகள் பிரதேச செயலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (8-7)

# தபால் சேவையாளர்கள் இன்று அடையாள வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், பெப்.10

அகில இலங்கை அஞ்சல் தந்தித்தொடர்புகள் சேவையாளர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் யாழ். குடாநாடு பூராகவும் தபால் சேவையாளர்கள் இன்று ஒரு மணிநேர அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாகச் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பிரதம தபால் சேவையாளர்கள் உட்பட யாழ். குடாநாட்டின் அனைத்து தபாலக சேவையாளர்களும் இன்று காலை 8.30 மணி தொடக்கம் 9.30 மணிவரை இந்த அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறை அஞ்சல் அலுவலகம் தொடர்பாகவும் - காங்கேசன்றை அஞ்சல் அதிபரின் இடமாற்றம் தொடர்பாகவும் -

சரியான தீர்வு வழங்கப்படாமை குறித்தே இப்போராட்டம் நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கும் தீர்வு கிட்டப்படாது விட்டால், எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை முதல் தொடர்போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் சங்கத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-12-305)



# ஷேன் வோர்ன் இன்று மாத்தறை செல்வார்

நேற்றுமுன்தினம் இலங்கைக்கு வருகை தந்த டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் அதிகூடிய விக்கெட்டுக்களைக் கைப்பற்றியவரும் ஆஸ்திரேலிய அணியின் சுழற்பந்து வீச்சாளருமாகிய ஷேன் வோர்ன் இன்று மாத்தறை மாவட்டத்துக்குச் செல்லவுள்ளார்.

இலங்கை அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜயசூரியவும் ஷேன் வோர்னுடன் அங்கு செல்லவுள்ளார்.

இலங்கைக்கு வருகைதந்த வோர்ன் சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்படைந்த மக்களுக்கான நிவாரணப் பணிகளில் தன்னையும் இணைந்துக் கொண்டுள்ளார். நான்கு தினங்கள் இலங்கையில்தங்கியிருக்கும் இவர் நேற்றுக் காலி மாவட்டத்துக்கு விஜயம் செய்தார். அங்கு சுனாமியால் பாதிப்புற்ற மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் காலியில் உள்ள கிரிக்கெட் மைதானத்தையும் அவர் பார்வையிட்டார். (10)

# நிவாரணப் பணிக்கென வந்திருந்த கனடாப் பெண் கடலில் மூழ்கிப் பலி!

கொழும்பு, பெப்.10

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிக்கென இலங்கை வந்திருந்த கனேடியப் பெண் ஒருவர் கடலில் மூழ்கி மரணமாகியுள்ளார்.

இப்பரிதாபம் நேற்று திருகோணமலையில் இடம்பெற்றது. மரணமானவர் நாற்பது வயது மதிக்கத்தக்க கனடாவைச் சேர்ந்த சோனியா என்பவராவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விடுலைப் புலி உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து திருகோணமலையிலும் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனால், தொண்டர் அமைப்புகள் அனர்த்த நிவாரண, மீள்கட்டுமானப் பணிகளில் ஈடுபடவில்லை. வெளிநாட்டுத் தொண்டர் குழு ஒன்று திருமலைக் கடலில் குளித்துக் கொண்டிருந்த சமயமே கனடாவைக் சேர்ந்தவரான இப்பெண் நீரில் மூழ்கி மரணமானார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவரைக் காப்பாற்றச் சென்ற ஜேர்மனியரான ஜீலிக் (வயது 34) என்பவரும், திருமலையைச் சேர்ந்த மயன் அன்டனி (வயது 22) என்பவரும் மோசமாகப் பாதிப்புற்றுள்ளனர் என்றும்-

இவர்கள் திருமலை போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (க-8)

## இரண்டாவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம் ஆகிய பிரதேசங்களிலும் சோககீதம் ஒலிக்கப்பட்டு வர்த்தக நிலையங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பிரதான சந்திகள் எங்கும் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன

இதனால் நேற்று இரண்டாவது நாளாகவும் குடாநாடு சோகத்தில் மூழ்கியிருந்தது.

- இதேவேளை கௌசல்யன் உட்பட அறுவரின் படுகொலையைக் கண்டித்து பல்வேறு அமைப்புகள் தமது கண்டனங்களை வெளியிட்டு வருகின்றன. (10-13)

## போராளிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதிகளில் நடமாடும் சந்தேகத்திற்கிடமானவர்கள் சோதனைச் சாவடியில் வைத்து தீவிர சோதனைக்குட்படுத்தப்படுவதுடன் வாகனங்களும் திடீர்சோதனைக் குட்படுத்தப்படுகின்றன.

மட்டக்களப்பில் புதிதாக சோதனைச்சாவடிகள் ஏற்படுத்தப்பட்டு திடீர் சோதனைகளும், சுற்றிவளைப்புக்களும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பில் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் போராளிகளின் பூதவுடல்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள இடங்களிலும் பொலீஸ் - இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

வெளியிடங்களிலிருந்து மட்டக்களப்புக்கு மேலதிகமாக அழைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு படையினர் வீதிகளில் நிறுத்தப்பட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (க-8)

## கௌசல்யன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மடுப்பாலம் ஊடாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வித்துடல்கள் எடுத்துச் செல்லப்படும். அங்குள்ள கிராமங்களின் மக்கள் தமது இறுதி அஞ்சலியை வித்துடல்களுக்குச் செலுத்துவார்கள். பொதுமக்களின் அஞ் சலி மற்றும் அஞ்சலி உரைகளின் பின்னர் இன்று மாலை தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தில் போராளிகள் நால்வரதும் வித்துடல் களும் விதைக்கப்படும் எனப் புலிகள் அறிவித்துள்ளனர். (க-8)

## போராளிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிருஷ்ணமிஷன் பாடசாலையில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன. பின்னர் அங்கிருந்து பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்திருந்து போராளிகளின் வித்துடல்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

நேற்று நண்பகல் கண்டுமணி மகாவித்தியாலய மண்டபத்திலிருந்து பட்டிருப்புப் பாலம் வழியாக வித்துடல்கள் அம்பாறை மாவட்டத்துக்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டன.

கல்முனை, அக்கரைப்பற்று, காரைதீவு, திருக்கோயில் ஆகிய இடங்களில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகங்களில் மாலை வரை வித்துடல்கள் மாறி மாறி மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டன. இரவு வித்துடல்கள் களுவாஞ்சிக்குடிக்கு எடுத்துச்செல்லப்பட்டன. நாளை காலைவரை வித்துடல்கள் களுவாஞ்சிக்குடியிலுள்ள புலிகளின் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் . (க-8)

## புனானை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது பேச்சாளர் கூறினார்.

நாட்டின் சமாதான முயற்சிகளைப் பாதிக்கும் செயல் எதிலும் இலங்கை ஈடுபடக்கூடாது என்று அனான் கேட்டுள்ளார்.

அத்துடன், சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்குத் தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துள்ளார். (ஐ-க)

## அவசரகால ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடனப்படுத்தினார். நாடாளுமன்றில் அங்கீகாரம் இன்றி, ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரங்களைக்கொண்டு இந்த பிரகடனத்தைச் செய்தார்.

நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் இன்றி அவசரகாலச் சட்டத்தைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தவோ,நீடிக்கவோ முடியாது. எனவே, அவசரகாலச் சட்டத்தை நாடாளுமன்றில் நிறைவேற்ற வேண்டிய கட்டாயம் இப்போது ஏற்பட்டுள்ளது.

இதன் அடிப்படையிலேயே நாளை வெள்ளிக்கிழமை அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கான விவாதம் நாடாளுமன்றில் நடத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (க-8)

## இலங்கை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் மேலும் விருத்தி பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்தோடு, இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளும் செம்மை பெறும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான கல்விச் செயற்பாடும் பரிமாற்றமும் மேலும் வளரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இரு நாட்டு மாணவர்களும் விஸாக் கட்டணம் செலுத்துவதில் இருந்து தவிர்ப்பு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கையோடு சேர்ந்ததாக மேலும் நான்கு உடன்படிக்கைகளில் இரு நாடுகளும் - இலங்கையும், பாகிஸ்தானும் - கைச்சாத்திட்டுள்ளன.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திட்டத்தின் பின்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாகிஸ்தானிய ஊடகவியலாளர்களையும் சந்தித்தார். இச்சந்திப்பு பாகிஸ்தான் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

இலங்கை இதற்கு முன்னரும் இந்தியாவுடன் 1998ஆம் ஆண்டில் இதேபோன்ற உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது.

ஆசியப் பிராந்தியத்தில் பாகிஸ்தானும், இந்தியாவும் அணுவாயுத ஆற்றல் கொண்ட நாடுகள் என்பது தெரிந்ததே. (க-8)

## உலக வங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்காணிக்க உயிர்த்துடிப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்"" - என்று உலக வங்கித் தலைவர் வுல்பென்சன் ஜனாதிபதியி டம் தெரிவித்தார் என ஜனாதிபதி செயலக செய்திக்குறிப்புத் தெரிவித்து.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு கடந்த மாதம் உலகவங்கித் தலைவர் நேரில்வந்து நிலைமைகளைப் பார்வையிட்டார். ஐ.நா. செயலர் கொபி அல...னின் இலங்கை விஜயத்தின் போது அவரது வருகையும் இடம் பெற்றிருந்தது.

"நிவாரண நிதி அரசின் தேவை கருதிய குறிப்பிட்ட விடயங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றது என்ற சந்தேகம் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ளது. ஆனால் இந்த நிதி பாதிக்கப்பட்டமக்களை நேரடியாகச் சென்று சேரவேண்டும்"" - என்று உலகவங்கி தலைவர் வலியுறுத்தினார்.

இந்த நிவாரண நிதி பயன்படுத்துவதற்கான பொதுவான - நடைமுறையிலுள்ள விதிகளுக்கு அமைவான பொறிமுறை ஒன்றை அரசு ஏற்கனவே ஏற்படுத்தியுள்ளது என்று ஜனாதிபதி உறுதியளித்தார்.

"அரசின் வழிகாட்டுதல்களுக்கு அமையவே அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு நிதி வருகின்றன என்பதும் அவற்றின் நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன என்பதும் உறுதிப்படுத்தப் படுகின்றன; கணக்கிடப்படுகின்றன" என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

இயற்கை அனர்த்தப் பாதிப்புக்குள்ளான இலங்கைக்கு உலக வங்கி வழங்கும் உதவிகளுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்ததுடன் நாட்டுக்கு உலக வங்கி தொடர்ந்து வழங்கிவரும் ஆதரவுக்கும் அவர் பாராட்டும் தெரிவித்தார்.

இதேவேளை, ஆழிப்பேரலை பாதித்த மக்களுக்கான அவசர உதவிப்பணி மற்றும் மீள்கட்டுமானப்பணி ஆகியவற்றுக்கான திட்டங்களுக்கென 7கோடி 50லட்சம் அமெரிக்க டொலர் உதவியை ஒதுக்கீடுசெய்ய உலகவங்கி தீர்மானித்துள்ளது.

இந்தச் சந்திப்பின் போது வெளி விவகாரத் துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் உடனிருந்தார். (க-8)

## மரண அறிவித்தல்
### திருமதி கந்தையா இளையபிள்ளை



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் கிளானை, கொல்லங்கலட்டியை வசிப்பிடமாகவும் பூநாறி வீதி, கொக்குவிலைத் தற்காலிக இருப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா இளையபிள்ளை நேற்று இரவு 7 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பூதர் கந்தையாவின் (புகையிரத நிலைய அலுவலர்), அன்பு மனைவியும் கணபதிப்பிள்ளை காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் பொன்னுத்துரை, சின்னப்பிள்ளை, காலஞ்சென்ற பூபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வநாயகி காலஞ்சென்ற செல்வராசா மற்றும் சந்திரசேகரம் (L.C. Ltd), அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் கோமதி, சறோஜினி ஆகியோரின் அன்பு மாமியும் மயூரன் (பேரதனியா பல்கலைக்கழகம், பொறியல்பீடம்), சுஜாதா, சுதர்சன், சதனா, கிரிசாநத, பிரசாந்த், தனுசாந்த் (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2005) வியாழக் கிழமை அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மாயனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூநாறிமர ஒழுங்கை,
கொக்குவில்.

(41946)(29-11-45)

தகவல்:
சந்திரசேகரம்
(தவம் -மகன்)

விடிவெள்ளியின் பிரகாசம் விரைவில்

(சி/40870)

6 ஆம் பக்கம் பார்க்க

AL 2006

பொருளியல்

P.Mohan
B.B.A. (Hons)

சந்தை அமைப்பு
Sat.,Sun. 12-1
அரசாங்க வரவு - செலவுத்திட்டம்
Sat., Sun. 1-2 (41916)

BEACON யாழ்நகர்

வாதம் சம்பந்தமான மூட்டுவலி குணமாக வேண்டுமா?

இதுவரை காலமும் குணமாக்க முடியாத நோய் என்று கருதப்பட்டு வந்த - வாதம் சம்பந்தமான மூட்டுவலியின் மூலக்கூறு நுண்கிருமி சம்பந்தப்பட்டதே.

அதனை நாங்கள் நுண்கிருமிகளுக்கெதிரான

ஆயுர்வேத மருந்தின் மூலம் குணமாக்குகின்றோம்.

சந்தேகத்துக்கிடமேயில்லாமல் குணமாகிவிடும். மேலதிக விவரங்களுக்கு:

FAIR
PHARMA (PVT) LTD (சி/40874)
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES) ABOLAPPROVED COMPANY
Level 5/ East Tower/1C, WORLD TRADE CENTER, COLOMBO - 01.
Phone: 5517897, 5551879, Fax: 5517756
E-mail: fppvtl@lankabellnet.com Website:www.fppvtl.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.